www.padippakam.com

# புதுமை

சமூகம் • கலை • இலக்கியம்









2002 ம்

படிப்பகம்

www.padippakam.com


' புதுமை'யை வாழ்த்துகின்றோம்!

# சாஹித்திய புத்தக இல்லம்

**எம். டீ. குணசேனவின் ஏஜண்ட்**

பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தேவையான
பாடநூல்கள், அகராதிகள், உபகரணங்கள்,
இலக்கிய நூல்கள், சஞ்சிகைகள்,
ஈழத்து மற்றும் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின்
நூல்கள் அனைத்திற்கும்

சாஹித்திய புத்தக இல்லம்
4, குருநாகல் வீதி,
(பஸ் நிலையத்திற்கு அண்மையில்)
புத்தளம்.

தொலைபேசி/ தொலைநகல் : 032 66875


படிப்பகம்

www.padippakam.com


# புதுமை

சமூகம் • கலை • இலக்கியம்

மலர் 1 இதழ் 1


ஓயுதல் செய்யோம் - தலை
சாயுதல் செய்யோம்.
உண்மைகள் சொல்வோம் - பல
வண்மைகள் செய்வோம்.
-மகாகவி பாரதி


புதுமை
மாத இதழ்
மார்ச். 15. 2003

பிரதம ஆசிரியர்
சி.சந்திரகுமார்

கௌரவ ஆசிரியர்
செ.யோகநாதன்

நிர்வாக ஆசிரியர்
யோ.சுந்தரலட்சுமி

ஆசிரிய குழு
மா. பாலசுப்பிரமணியம்
கௌதமன்
சகுந்தலா ஞானசேகரன்

ஓவியம் * வடிவமைப்பு
கௌதமன் / சஞ்சயன்

அச்சமைப்பு
ஏ.ஜே.பிரின்ட்ஸ்
தெஹிவளை.



தொடர்புகள்
சத்யபாரதி
202/1, காலி வீதி
கல்கிசை - இலங்கை.
தொலைபேசி : 074 202419




# வணக்கம்...


தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரந்து வாழ்கின்ற தரமான தமிழ் வாசகர்களின் இதயக் குரலாக 'புதுமை' மாத இதழை வெளிக்கொண்டு வருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.
தமிழ் மக்களின் கலை, இலக்கியம், பண்பாடு, சமூகம் ஆகிய துறைகளை 'புதுமை' தனது பக்கங்களாக ஆக்கிக்கொண்டுள்ளது. இத்துறைகளில் மேன்மைப்பட்டிருப்பவர்கள் தொடர்ந்து 'புதுமை' யில் தமது பங்களிப்பைச் செய்வார்கள்.

கலை, இலக்கியம், பண்பாடு, சமூகம் ஆகிய துறைகளில் நிலவுகின்ற அவலத்தனங்களை நீக்கவேண்டு மென்பதில் 'புதுமை' உறுதியான தீர்மானம் கொண்டுள்ளது.
இவ்விதத்தில் 'புதுமை' மக்களின் தளம் நின்று இயங்கும். தமிழர் வாழுமிடமெங்கிலும் இருந்து வரும் அவர்களின் குரலினை தீட்சண்யமாக 'புதுமை' வெளிப்படுத்தும்.

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும். மங்காத தமிழ் என்று 'புதுமை' செயற்படும். இந்த இயக்கத்தில் எம்மோடு இணைந்து செயற்பட வாரீர் என்று அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதம ஆசிரியர்.

படிப்பகம்




# உள்ளே...


தமிழராய் வாழ்வோம்... 3
சி. சந்திரகுமார்



இனி நாம் செய்யவேண்டியது என்ன? 4
வெ. இளங்குமரன்



2002ம் ஆண்டின் சிறந்த தமிழன் 5

இடைக்கால ஈழத்து தரிசனங்கள் 6
உருவை தில்லை நடராசா



கண்ணில் தெரியுதொரு தோற்றம் 11
செ. யோகநாதன்

ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான் 17
செ. கதிர்காமநாதன்





பூவும் நடக்குது.. பிஞ்சும் நடக்குது... 23
கவிஞர் புதுவை இரத்தினதுரை.

கள்ளப்பொருள் — மொழி பெயர்ப்பு ருஷ்யக் கதை 26

29 புத்தகங்கள்

அமெரிக்கா எங்கேபோகிறது? 31

37 சொல்திர்கள்.

வண்டில் — மொழிபெயர்ப்பு சிங்களச் சிறுகதை 40

www.padippakam.com

# தமிழராய் வாழ்வோம்...

கலை பண்பாட்டு அமைப்பினர்
யாழ்ப்பாணத்தில் நடத்திய 'மானிடத்தின்
ஒன்று கூடல் 2002' நிகழ்வில் கல்வி வளர்ச்
சித்துறைக்குப் பொறுப்பான வெ.இளங்குமரன் ஆற்றிய
உரையினை பத்திரிகையில் படித்தபோது ஏற்பட்ட
சிந்தனையின் வடிவே இந்தக் கட்டுரை.

வளமும், முதிர்ச்சியும் கொண்ட எமது தாய்
மொழியைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் தமிழர்
களே நடந்து கொள்வது வேதனைக்கும் அவமானத்
துக்கும் உரியதாகும். குறிப்பாக அன்றாடப் பேச்சு
வழக்கு, பெயர்சூட்டல் என்பனவற்றில் தமிழர்கள்
அதுவும் புகலிடத் தமிழர்கள் நடந்துகொள்ளும் முறை
வேதனைக்குரியது. தமிழர்களாகிய நாம் எங்கிருந்
தாலும் எமது தனித்துவ அடையாளங்களைக்
காப்பாற்றி ஆகவேண்டும். அல்லாவிடில் வேரில்லாத
மரங்களாய், அடையாளம் இல்லாத மனிதராக
ஆகிப்போய் விடுவோம்.

அண்மையில் நான் எனது நண்பரது குழந்தையின்
பிறந்ததின விழாவுக்குச் சென்றிருந்தேன். கோலா
கலமான கொண்டாட்டம்.

குழந்தையின் கையில் பரிசுப்பொருளைக் கொடுத்து
வாழ்த்திவிட்டு, "உங்களுக்கு என்ன பெயர்? " என்று
கேட்டேன்.

குழந்தை அலங்கமலங்க முழித்தது.

குழந்தையை வைத்திருந்த தாயே பெருமையோடு
ஆங்கிலக் கொச்சையில் பதில் சொன்னார்:

"ஸீ இஸ் ரஸ்தியானா..."

எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது. இதென்ன பெயர்,
இதன் அர்த்தமென்ன என்று கேள்விகள் என்
மனதிலேற்பட்டன, யோசித்தேன்.

அப்போது குழந்தையின் தந்தையான எனது
நண்பன் அங்கே வந்தான்.

"சந்திரன் என்ன யோசிக்கிறீர்?" என்று கேட்டான்.

நான் மெல்லச் சிரித்தேன்.

"என்ன சொல்லும்?" என்று மீண்டும் கேட்டான்.

"உம்முடைய குழந்தைக்கு யார் பேர் வைத்தது?"

"என்னுடைய மிஸிஸ்தான். யாரும்
வைக்காத பேராய் வைக்கவேணுமென்று
சொல்லி மூன்று மாசமாய் யோசிச்சு
இந்தப் பெயரை "செலக்ற்" பண்ணி
னவ... இன்றுவரை இப்படிப் பேரை
நானும் கேள்விப்படேல்லை..."

எனக்குள்ளே சிரிப்பு வந்தது.

"இந்தப் பெயருக்கு அர்த்தமென்ன?"

"எனக்கு அது தெரியாது. ஆனால்
இப்பிடி யாரும் பெயர் வைக்க
வில்லை...சரியான 'மொடேன் நேம்'
தானே?"

இப்போது நான் சிரித்தேன்.

"ஏன் சிரிக்கிறீர்?"

"நீரும் நானும் வேலை செய்த இடத்
திலை திசாநாயக்கா என்ற ஆளும்
வேலை செய்தது. அவன் எப்ப பார்த்
தாலும் 'ரஸ்தியாதி' பண்ணாதை என்று
சொல்லுவான். அதாலை அவனுக்கு
நாங்கள் 'ரஸ்தியானா' என்று பட்டப்
பெயர் வைச்சம். 'ரஸ்தியாதி' என்ற சிங்களச் சொல்லு
க்கு கரைச்சல் என்று கருத்து. இது இப்போது
தமிழிலும் வந்திட்டுது..."

நண்பனின் முகம் சுருங்கிற்று.

"அப்போ உம்முடைய மகளினுடைய 'ரஸ்தியானா'
என்ற பெயருக்கு கரைச்சல் பிடிச்சவள் என்றோ
கருத்து..."

அவன் அங்கிருந்து கோபத்தோடு போய்விட்டான்.

அங்குவந்திருந்த பலகுழந்தைகளின் பெயர்கள் இப்ப
டித்தான் இருந்தன. டோய்னா, விசினி, யமினி,
ரொன்ரோ, சியூன்....

நமது தாய் மொழியில் எவ்வளவு அழகும் பொரு
ளும் நிறைந்த பெயர்கள் உள்ளன. தமிழரசி,
தமிழ்விழி, தமிழன்பன், இப்படி அர்த்தம் நிறைந்த
அழகிய பெயர்கள் அளவுகணக்கின்றி நமது தாய்
மொழியில் உள்ளன.

ஏனவே எமது குழந்தைகளிலிருந்து, பேரிடும்
எதற்கும், நாம் அழகிய தமிழ்ப் பெயரினை வைக்க
வேண்டும்.

பெயர்களும் நமக்குத் தனியான அடையாளத்தைத்
தரும். எமதுமொழியின் சிறப்பை, பிறர், அறிந்திடச்
செய்யும். எமக்கு பெருமையைத்தரும். நாம் ஒருவரை
ஒருவர் சந்திக்கும் போது தாய் மொழியிலேயே
பேசிக்கொள்வதும் அவசியம், உலகின் மற்றமொழியி
னரெல்லாம் அப்படியே நடக்கிறார்கள்.

நான் எனக்கு அடுத்த வீட்டிலுள்ள பிரஞ்மொழிக்
கலைஞனைச் சந்தித்தேன், அவனுக்கு ஆங்கிலம்
நன்றாகப் பேசவரும் என்பது எனக்குத்தெரியும்,
ஆங்கிலத்திலே அவனிடம் கேட்டேன், அவன்
பேசாமல் நின்றான், மீண்டும் பேசினேன், அவன்
பிரெஞ்சில் எனக்குச் சொன்னான்,

"உனக்கு பிரெஞ்மொழி தெரியும்
என்னோடு என் மொழியிலேயே
பேசு...."

என் மனதில் அந்த வார்த்தைகள்
சவுக்கடியாய் விழுந்தன.

நாம் நமது மொழி, பண்பாட்டை
மதித்துப் போற்றவும், கைக்
கொள்ளாதும்விட்டால் நாம் எமது
அடையாளத்தை முற்றிலும் இழந்து
போகும் அபாயம் உள்ளது. இந்த
அபாயத்திலிருந்து இனிவரும்
சந்ததியினர் தப்பித்துக்கொள்ள
இளங்குமரனின் வழியில் செயற்
பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.




சி. சந்திரகுமார்

படிப்பகம்

www.padippakam.com

# இனி நாம் செய்யவேண்டியது என்ன?

* வெ-இளங்குமரன்

அடிமைத்தளையிலிருந்த இந்த மண்ணை மீட்ப தற்கான விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிற அதேவேளையில் எமது மொழியை, இனத்தைப் பாதுகாக்கின்ற வகையிலேயே எமது தலைவர் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மொழியை, இனத்தை காக்கின்ற ஒரு பணியை எம்மிடம் ஒப்படைத்தார். அதை நாம் செயற் படுத்துகிறோம்.

எமது அடையாளங்களைப் பேணிக்காப்பது கட்டாயம் என்ற வகையிலே எமது இழந்த மண்ணை மீட்பதற்கும் எமது படையணிகள் போராடிக்கொண்டிருக்கிறபோது எமது இன அடையாளங்களைக் காப்பதற்காகவும் கலை பண்பாட்டுக் கழகம் செயற்பட்டது போல மொழியைக் காப்பதற்காக தமிழ் வளர்ச்சிக் கழகம் செயற்பட்டு வருகிறது.

எமது வணிக நிலையங்கள் அவற்றிற்கான பெயர்களை அழகு தமிழில் சொல்லுகின்ற போதும் தெருக்களின் பெயர் களைக் கூறுகின்ற போதும் நாம் பெருமை அடைகின்றோம்.

தமிழ் மொழியில் புகுந்து கலந்துள்ள பிறமொழிச் சொற்களை ஆய்வு செய்து அவற்றைக் களைவது, மறைக் கப்பட்ட பழந்தமிழ் சொற்களை மீண்டும் வெளிக்கொணர்வது, அறிவியற் சொற்களை புதிய முறையில் உருவாக்குவது போன்ற பணிகளை முதன்மையானதாகக் கொண்டு எமது தமிழ் வளர்ச்சிக் கழகம் பல பணிகளை ஆற்றி வருகிறது.

எமது மொழியைக் காக்க நாம் முன்னேற வேண்டும். இன்று நாம் பேசுவதற்கும். எழுதுவதற்கும் பயன்படுத்துகின்ற மொழி யிலே 60 விழுக்காட்டுக்கும் மேலாக பிறமொழிச் சொற்கள் இருக்கின்றன.

தமிழ் மொழியில் பெயர்களிலும் பெரும்பாலானவை தமிழ்மொழி இலக்கண வரம்பை உடைப்பனவாக உள்ளன. தமிழ் எழுத்திலே எந்த எழுத்து முதல் எழுத்தாக வராதோ அந்த எழுத்தை முதல் எழுத்துக்களாகக் கொண்டு பெயர்கள் அமைவதை நாம் காண்கின்றோம்.

அதற்கான காரணம், சோதிடம் எழுதுபவரிடம் பெயர்களை வைக்கும்படி ஆலோசனை கூறும்போது தமிழ் இலக்கணப்படி முதல் எழுத்தாக வராத பெயர்களைக்கூறி அதை முதல் எழுத்தாகக் கொண்டு பெயரை வைக்குமாறு கூறுகின்ற தன்மையினாலேயே எமது தமிழ் இலக்கண வரம்பு உடைக் கப்பட்டு தமிழ்ப்பெயர்கள் அல்லாத பிற மொழிப் பெயர்கள் வந்து விடுகின்றன.

இதை நாங்கள் எந்தவகையிலும் பார்த்துக் கொண்டிரு க்கமாட்டோம். இது தமிழிற்கு அவமானம்.

எமது மொழியை உலகில் மிகச்சிறந்தமொழியாக, இன்றைய அறிவியல் மாற்றங்களுக்கு ஏற்றவகையிலே எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்கக் கூடிய மொழியாக மாற்ற வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அறிஞர்களையும், தமிழ் அறிஞர் களையும் சேர்த்து நாங்கள் இந்த முயற்சிகளை மேற்கொ ள்கிறோம்.

மண்ணை இழந்துவிட்டால் மீட்டெடுத்துவிடலாம். மொழியை இழந்து விட்டால் நாங்கள் ஒரு இனத்தையே அழித்ததாக அமைந்து விடும். நாங்கள் மண்ணை மீட்டும் தமிழர்களாக வாழமுடியாத நிலையேற்படும்.

எமது தமிழர்களின் அடையாளத்தை தமிழ்ப் பெயர்க ளினாலேதான் வெளிப்படுத்த வேண்டும். எனவே நாம் விழிப் போடு இருந்து எமது அடையாளங்களைப் பேணிக்காக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

அதன் அடிப்படையில் தமிழ் வளர்ச்சிக்கழகம் பல அறிஞர் களின் துணையோடு நீண்டகால முயற்சியாக 47 ஆயிரம் பெயர்களைக் கொண்ட தமிழ் மொழிப்பெயர் பட்டியலை அமை த்துள்ளது. அதுமட்டுமல்ல நடைமுறைச் சொற்களில் உள்ள பிறமொழிச் சொற்களை எல்லாம் இனம் கண்டு அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களை இனம் காட்டி தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் ஊடாக இந்த நூலை உருவாக்கியுள்ளோம்.

மிக அண்மைக்காலத்திலேதான் உலகில் எற்பட்ட மாற்றங் களுக்கு அமைவாகப் பல்வேறு மொழிகள் தத்தமது சொற் களஞ்சியங்களைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. அந்த முயற்சியிலே நாங்கள் இறங்குகின்றபோது பல தடைகளை எதிர்கொள்ளலாம். அவற்றையெல்லாம் உடைத் தெறிந்து எமது மொழியைப் பேணவேண்டும்.

இந்த மண்ணிலே பேரினவாத பௌத்தம் என்ற ஒன்றை நிலை நிறுத்துவதற்காக 2000 ஆண்டுகளுக்கு முன்பு மிக திட்டமிட்டு கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலேயேதான் தமிழ் இனத்துக்கும் சிங்கள இனத்துக்கும் தேவையற்றதொரு வேற்றுமை திட்டமிட்ட முறையிலே பரப்பப்பட்டு வந்தது.

இது நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின் றதொன்று. இந்த வேறுபாடு ஆண்டு 4,5 ஆம் வகுப்பு மாணவர் களிலிருந்து விதைக்கப்படுகின்றது.

இலங்கை மண்ணில் பல ஆட்சிகள் நிலவின என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்த மண் வெளிநாட்டவர்களி டையே இருந்து காக்கப்பட வேண்டுமேயானால் சிங்கள இனம் தமிழினம் போரின்றி ஒற்றுமையாக இருப்பதன் ஊடாகத்தான் அன்னியரிடமிருந்து காக்கப்படும்.

இந்த நிலையை உணர்ந்து இந்த மண்ணிலே நீண்ட காலமாக 2500 ஆண்டுகளாகத் தமிழர்களும் வாழ்கின்றார்கள். சிங்களவர்களும் வாழ்கின்றார்கள். அவர்களுக்குரிய உரிமைகளை அவர்களிடம் விட்டுக்கொடுத்து வாழ்வதன் ஊடாகத்தான் இந்தமண் அந்நியர் கைகளில் அகப்படாது இருக்கும் என்ற உண்மையை சிங்கள மக்கள் உணரவேண்டும்.

**ஓவ்வொரு இனமும் தனது இருப்பினை நிலை நிறுத்தும் பொருட்டு மொழி, கலை, பண்பாடு போன்ற தனித்துவ அடையாளங்களைப்பேணிக்கொள்வது மிகவும் அவசியம். தமிழிலேயே மொழித் தூய்மை பேணப்படாது பிறமொழிச் சொற்களின் ஆதிக்கமும் கலப்பும் அதிகரித்துள்ளன.**

தமிழ் மொழியின் தூய்மையைப் பேணுவதில் தமிழகம் பெரிதும் முன்நிற்பதாகத் தெரியவில்லை. தமிழின் பெருமையைக் கூறி ஆட்சிபீடமேறும் அரசியல்வாதிகள் இதுபற்றிக் கொஞ்சமும் அக்கறை காட்டவில்லை. இந்நிலையையும் மாற்றவேண்டும். ●

(மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002 உரையிலிருந்து)

www.padippakam.com

# 2002ம் ஆண்டின் சிறந்த தமிழன்



இந்தியாவின் முன்னணி இணையத் தளங்களில் ஒன்றான 'தற்ஸ் தமிழ் கொம்.' (www.thats tamil com) நடத்திய 2002ம் ஆண்டுக்கான தலை சிறந்த தமிழரை தெரிவு செய்வதற்கான தேர்வில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். உலகம் முழுதாகவும் இணையத்தளம் மூலமாக நடத்தப்பட்ட இந்தத் தேர்வில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தமது தெரிவை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்தத் தெரிவுகளினதும், அதற்காக அவர்கள் வெளிப்படுத்தியிருந்த காரணங்களினதும் அடிப்படையிலேயே இணையத்தள ஆசிரியரால் இந்தத்தெரிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தலை சிறந்த தமிழரைத் தெரிவு செய்வதற்காக இணையத்தள ஆசிரியரால் ஐந்து பிரமுகர்களின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தலைவர் பிரபாகரன், நடிகர் ரஜனிகாந்த், இயக்குனர் தங்கர்பச்சான், ஆகியோர்களின் பெயர்களே அவை.

இதனை விட வாசகர் தெரிவாக இன்னொருவரைத் தெரிவு செய்வதற்காக பத்துப் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இந்தத் தெரிவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கும், நடிகர் கமலஹாசனுக்கும் இடையே பலத்த போட்டியிருந்தது. இறுதியில் கமலஹாசன் ஒருசில வாக்குகளின் அடிப்படையில் தெரிவானார். தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி உட்பட பல தமிழகப் பிரமுகர்களும் சொற்ப வாக்குகளையே பெற்றிருந்தார்கள்.

இந்த நிலையில் 2002ஆம் ஆண்டின் தலை சிறந்த தமிழன் தெரிவை மேற்கொண்டது எப்படி என்பதை இணையத்தள ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'தெரிவில் ஐந்து பேரை நாங்கள் முன் வைத்தோம். நல்ல சினிமா தந்த தங்கர்பச்சான் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட என்ன செய்தார். தங்கர்பச்சானா? அது யார் என்று கேட்டு வந்த மெயில்களே அதிகம். ரஜனியும் முதல்வர் ஜெயலலிதாவும் தமிழர்களே அல்ல என்ற ரீதியில் மெயில்கள். மைசூரில் பிறந்தாலும் தான் ஒரு தமிழிச்சி என்பதை ஜெயலலிதா எத்தனையோ முறை தெளிவாக்கி விட்டார். தமிழ் நாட்டில் தமிழர்களின் அன்பை வென்று தமிழ் வரலாற்றில் ஒன்றிவிட்ட ஜெயலலிதாவும், ரஜனியும் முழுத் தமிழர்கள்தான். ஆக அந்த வாதமே தவறானது.

இவர்களைத் தவிர்த்து இந்த ஆண்டில் தமிழர்களின் வாழ்க்கையை முக்கியமாகப் பாதித்தவர்கள் இருவர். ஒருவர் டாக்டர் அப்துல்கலாம். ஜனாதிபதி பதவி அவரைத் தேடி வந்தது. ஒரு ஏழைத் தமிழ்க் குடும்பத்துப் பிள்ளை தனது அயராத உழைப்பாலும், தேசப்பற்றாலும் மிக உயரிய இடத்தை அடைந்து ஜனாதிபதியாகி ஒவ்வொரு தமிழனையும் பெருமைப் படச் செய்துவிட்டார். அவரை நாம் இனியும் தமிழன் என்ற அடையாளத்தோடு குறுக்கி விட முடியாது. அவர் இந்தியாவின் பெருமை மிகுந்த சொத்தாகிவிட்டார்.

அடுத்தவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். இருபது ஆண்டுகால தமிழர் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவர். வலிகளும், வேதனைகளும், வாழ்கையாய் மாறிய சூழ்நிலையில் லட்சக்கணக்கான தமிழர்கள் உயிரையும் மானத்தையும் காத்துக் கொள்ள, பிறந்த மண்ணை விட்டு ஓட வேண்டிய அவலச் சூழல்.

குடியேறிகளாய் அன்னிய பூமியில் கால் பதித்து தாமரை இலையில் நீர் மாதிரி ஒட்டியும் ஒட்டாமலும் வேதனை வாழ்க்கை வாழ்ந்து, சொந்த மண்ணை மீண்டும் முத்தமிடும் அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் லட்சக் கணக்கான மக்கள் மனதில் பால் வார்த்தது மாதிரி அமைதிப் பாதைக்குத் திரும்புவதாய் அறிவித்தார் பிரபாகரன்.

இன்று லட்சக்கணக்கான குடிபெயர்ந்த தமிழ் மக்களின் விடியலும், பிரபாகரன் என்ற ஓரே ஒரு தனி மனிதரின் அசைவில்தான் இருக்கிறது என்பது அசைக்க முடியாத உண்மை.

அமைதிக்குத் திரும்பி தெற்காசியாவின் பாதுகாப்பு சூழுலையும், தமிழர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்து இந்த ஆண்டின் மிகப்பெரிய தலைப்புச் செய்தியானவரும் அவரே. ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் இந்த ஆண்டின் மிகப் பெரிய நியூஸ் மேக்கர் என்ற வகையில் பிரபாகரனையே 2002 ம் ஆண்டின் மிகச் சிறந்த தமிழனாய் தேர்வு செய்கிறேன்.

பெரும் எண்ணிக்கையிலான தமிழர்களின் வாழ்க்கையை நேரடியாகவே பாதித்தவர் என்ற ஒரே காரணத்தினாலேதான் அவரைத் தேர்வு செய்கிறோமே தவிர, இதனால் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதாகப் பொருள் கொள்ள வேண்டாம். இந்தத் தேர்வில் உங்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம், ஆனாலும் நான் சொல்லிய காரணங்கள் உங்களைத் திருப்திப் படுத்தும் என்று நம்புகிறேன்.' •

படிப்பகம்

www.padippakam.com




# இடைக்கால ஈழத்து தரிசனங்கள்

ஊருவை தில்லை நடராசா

1958ல் ஆறாம் வகுப்பு மாணவன். அறிவு தெரிந்த பின் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டத்தையும் இராணுவத்தையும் பார்த்த நினைவு.

1961ல் யாழ் கச்சேரி முன்பு மறியல் போராட்டம் ஆரம்பமாகி முத்திரை வெளியீட்டுடன் சித்திரை மாதத்தில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பெருமளவு இராணுவத்தை யாழ் மண்ணில் எதிர் கொண்ட அனுபவம்.

1971 சேகுவேரா என்று பேசப்பட்ட ஜே.வி.பி. யின் ஆயுதப் போராட்டம் காரணமாக ஊரடங்குச் சட்டம், இராணுவ நடமாட்டம்.

1977ல் நடுப்பகுதியில் இனக் கலவரம். மீண்டும் 1983ல் நடுப்பகுதியில் யாழ் பலாலி வீதியில் சில இராணுவ வீரர்கள் நிலக்கண்ணி வெடியில் சிக்குண்டிறக்க உருவான பதட்ட நிலை.

மேற்கூறப்பட்ட சம்பவங்கள் சில நாட்களுக்குத்தான் மக்களைப் பதட்ட நிலையில் வைத்திருந்தன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அரச இராணுவத்தின் கையே மேலோங்கி இருந்தது.

அதன்பின்னர் அடுக்கடுக்காகப் பல சம்பவங்களில் மாறி மாறி விடுதலைப் போராளிகளும், இராணுவத்தினரும் ஆங்காங்கே சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

1987ல் இந்திய அமைதி காக்கும் படையினர் பெருமளவில் குவிக்கப் பட்டதும், நடந்ததும் யாவருக்கும் தெரியும். 1990ல் இந்தியப் படையினர் வெளியேற வட கிழக்கின் பெரும்பாலான பகுதிகள் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டில் வந்தன. அதன் பின்னர் வட பகுதியைச் சேராத பலர் அப்பகுதிகளுக்குச் சென்று வரத் தயங்கினர்.

இத் தயக்க நிலை இவ்வாண்டு (2002) வரை நீடித்தது. இந்நிலை காரணமாக உண்மைத் தகவல்கள் பலவற்றை வட பகுதிக்கு வெளியே வாழ்ந்தவர்கள் அறியவில்லை. சில தகவல்கள் திரிபு படுத்தப்பட்ட சம்பவங்களும் உண்டு. இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சொந்த மண்ணாகக் கொண்டதனால் பலதடவைகள் சென்று வந்தவன் என்பதோடு, 1992 முதல் 1994 வரை வவுனியாவிலும், 1995 முதல் 1998 வரை கிளிநொச்சியிலும் மாவட்டத்தின் முதன்மை நிர்வாகியாக, அரசாங்க அதிபராகக் கடமையாற்றியபோதும்,

www.padippakam.com

கண்டவற்றைக் கேட்டவற்றை அநுபவித்தவற்றையும் சுருக்கமாக தருவதே என்நோக்கம்.

யாழ்குடா நாட்டிலும், வன்னிப்பகுதியிலும் அரச நிர்வாக இயந்திரம் சரியாகச் செயற்படவில்லை என்ற கூற்றை முழுமையாக என்னால் ஏற்றுக் கொள்வது கடினம். மக்களுக்காகச் சேவைசெய்ய வேண்டியவர்களான அரச ஊழியர்கள். சிலர் அதிகாரத்தைத் தம் கையிலெடுத்துக் கொண்டு தமக்கு விரும்பமானதைச் செய்தார்கள். தாம் வெறுப்பவர்களைத் தண்டித்தார்கள். சரியாகவும் நேர்மையாகவும் செயலாற்றிய அரச ஊழியர்கள் விடுதலைப் போராளிகளைக் கண்டு கவலை கொள்ளவில்லை.

1992 முதல்1995 வரை வவுனியா அரச அதிபர் கடமை. ஏறக்குறைய எல்லா வசதிகளும் நிறைந்த வதிவிடம், கணிணி வசதிகளுடன் இணைந்து குளிரூட்டிய அலுவலகம், வவுனியாவிலிருந்து கொழும்பு சென்றுவர சொகுசுகார், சாதாரண வீதிகளில் செல்ல இன்னொரு வாகனம், மேடும் பள்ளமுமாக உள்ள பாதைகளில் மெதுவாகச் செல்ல இன்னெரு வாகனம். இதற்கு மேலதிகமாக தேவையானால் ஏனைய திணைக்கள வளங்களையும் பயன்படுத்தக்கூடிய மேலாண் நிலை.

1995ல் கிளிநொச்சி அரச அதிபராக மாற்றம். 1995ன் நடுப்பகுதிவரை சாதாரண வதிவிடம். பின் அதையும் இழந்த நிலையில் நகரிலிருந்து வெகுதூரத்துக்கு அப்பால் கொலனி வீடொன்றில் இராப்பொழுதில் தலைசாய்க்க மட்டும் ஓரிடம். மரநிழலில் இரவல் மேசையொன்றில் செய்தித்தாளின் அச்சிடப்படாத பகுதிகளையும், ஓரங்களையும் பயன்படுத்தி, கச்சேரி நிர்வாகம் செய்து, கால்நடைப் பயணியாகவும், ஒருவரின் மோட்டார் சைக்கிளின் பின் சீற்றிலும், உழவு இயந்திர இழுவைப்பெட்டியிலும், பயணியாக மாறிய அனுபவம்.

இருப்பினும் கச்சேரி இயங்கியது போலவே போராளிகளின் நிர்வாகக் கோட்டமும் இயங்கியது. நிழல் அரசஅதிபர் போல நிர்வாகப் பொறுப்பாளரும் இயங்கினார். முக்கியமான அரச திணைக்களங்கள் செயற்பட்டன.

கல்வி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் முன்னெடுத்தும் செல்வதற்காகவும் கல்விக்கழகம், விவசாய கால் நடைவளர்ப்பு இதர பொருளாதார மேம்பாட்டுக்காக, பொருளாதார பொருண்மீய மேம்பாட்டு நிறுவனம், - பண்பாட்டு, நடவடிக்கைகளைப் பேண கலை பண்பாட்டுப் பேரவை, போக்கு வரத்து நடவடிக்கைகளைச் சீராக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் தமிழீழ போக்குவரத்துக் கழகம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக தமிழீழக் காவல்துறை, நீதியை நிலை நிறுத்துவதற்காக நீதிமன்றங்கள் என்று இன்னோரன்ன அமைப்புகள் இயங்கி வந்தன.

கடந்த இருபத்தைந்த ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ விடயங்கள் குழம்பிய போதும் கல்வி குழம்பாமலிருந்தது. வடபகுதி மக்களின் நாளாந்த வாழ்க்கை - அடுத்தவேளை உணவுப் பிரச்சினையாக இருந்தபோதும், மாறி மாறி இடப் பெயர்வுகளுக்கு ஆளான போதும், கிடைக்கின்ற வளங்களின் பெரும் பகுதியை - உழைப்பதில் பெரும்பகுதியை கல்விக்காகச் செலவிட்ட சமுதாயம் வடபகுதிச் சமுதாயம்.

இலங்கையிலுள்ள ஏனைய பகுதிக் கல்லூரிகள் கட்டிடம், தளபாடம், கற்பித்தல் உபகரணம் என பல வகைப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட வேளை - போரைக் காரணம் காட்டி வடகிழக்குக்கு தமிழ்மொழி மூலமான பாடப் புத்தகங்கள் கூட தப்பும் தவறுமாக மிகக்கூடிய கால தாமதத்துடன் தான் வந்துசேர்ந்தன. "சீருடை தரா விடின் போருடை தரிப்போம்" என்ற பதாகையின் கீழ் பெருந்திரளான மாணவர்கள் ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டங்கள் செய்தபின் இலவச சீருடை வடபகுதிப் பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டன.

பெற்றோரும் நலன் விரும்பிகளும் செய்த பெரும் தியாகங்களால், மேற்கொண்ட முயற்சிகளால் வடபகுதி மாணவர்கள் கல்வித் துறையில் முன்னணியில் திகழ்ந்தார்கள். அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பும், ஆன்மீக நிறுவனங்களின் பங்களிப்பும் இருந்தன.

மின்சார வசதி இருக்கவில்லை, மண் எண்ணெய் கூட கொள்வனவு செய்யக் கூடிய சக்தி சாதாரண மக்களிடம்இல்லை. சிக்கனமாக மண் எண்ணெயைப் பயன் படுத்தி மெல்லிய வெளிச்சம் பெறக் கூடிய வகையில் பழச்சாற்று (ஜாம்) போத்தல்களையும் பஞ்சையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட விளக்கு வெளிச்சத்தில் ஆள் நடமாட்டத்தையும், பொருள் இருக்குமிடத்தையும் மட்டுமே தெரிந்து கொள்ளலாம். அதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல இடங்களில் 'மாணவர் அறிவியற் கழகங்கள்' அமைக்கப்பட்டு, அங்கு மின்பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்கள்) பொருத்தப் பட்டன.

அதனால் பல மாணவர்களுக்கு மின்னொளியில் படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அவ்வப்போது மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பொருட்காட்சிகள் நடாத்தப்பட்டன. அப்போது புதிய கண்டுபிடிப்புகள் போதியளவு விளக்கங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டன. ஆய்வு முயற்சிகளை மேற்கொள்வோருக்கும் ஆதரவுகள் வழங்கப்பட்டன.

மாணவர்கள், ஆண்கள், பெண்கள் என்று தனித்தனியே பிரிந்திருந்து படிப்பதற்கும், கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்குத் தேவையான போதனை வசதிகளுக்கும் அறிவியற் கழகங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டன. பெண்பிள்ளைகள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலரோடு வந்திருந்து படிக்கக் கூடிய ஏற்பாடுகள் இருந்தன. இன்று தலைநகராகிய கொழும்பு உட்பட ஏனைய பகுதிகளில் தோன்றியுள்ள வன்முறைகளும் ஒழுங்கீனங்களும் வடபகுதியில் தோன்றாதிருப்பதற்கு இத்தகைய ஏற்பாடுகளும் காரணங்களாக அமையலாம்.



படிப்பகம்

www.padippakam.com

மாணவரல்லாதோரும் பல விடயங்களை அறிந்து கொள்வதற்காக வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதற்கு "மாவீரர்" படிப்பகங்கள், அமைக்கப்பட்டிருந்தன. செய்தித்தாள், சஞ்சிகைகளுடன் அரசியல், பொருளாதார, விவசாய, கலை, பண்பாட்டுத் துறை சார்ந்த நூல்களையும் படிக்கக் கூடிய வாய்ப்பு பலருக்குக் கிடைத்தன.

1995 நொவம்பர் மாத இறுதியில் 'ரிவிரச' என்னும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் சுமார் 5 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்தபோது, அவர்களில் பெரும்பாலானோர் பாடசாலைகளிலும் கோவில்களிலும் புகலிடம் பெற்றிருந்தனர். பாடசாலைகள் இரவு வேளைகளில் தலைசாய்க்குமிடமாகவும் சமையலறையாகவும் மாறிய போதும் அகதி நிலையடைந்தோர் அதிகாலையில் பாய், உடுபுடைவைகள், சமையல் பொருட்களை அப்புறப்படுத்தி வழமையான வகுப்புகள் நடத்த உதவி புரிந்தார்கள். என்னதான் கஷ்டம் வந்த போதும் கல்வி தொடர்ந்து நடந்தது.

பாடசாலைகளில் பல வகுப்பறைகள். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களின் தற்காலிக வாசம் வகுப்பறைகளில். அந்நிலையிலும் ஒரு வகுப்பறையில் புதிதாகச் சேர்ந்த ஆணும், பெண்ணும் மணக்கோலத்தில். சற்றுத் தள்ளி இன்னொரு வகுப்பறையில் பூப்பு நீராட்டு வைபவம், சற்றுத்தள்ளி இன்னொரு வகுப்பறையில் இறந்தவரின் உடலோடு உறவினர், இன்னுமொரு வகுப்பறையில் 'குவா' 'குவா' சத்தம் - புதியவரின் பிரவேசம். இவைதவிர்ந்த ஏனைய வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள். ஏறக்குறைய எல்லோரும் சிந்தனையுடன் செயற்பட்டதால்தான் தொடர்ந்தும் வடபகுதி மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க முடிகிறது.

சூரியக் கதிர் இடப்பெயர்வுக்குப்பின் யாழ்ப்பாண மாணவர்களும் வன்னிப் பாடசாலைகளில் கற்கக் ஆரம்பித்ததால் மரநிழல்களும் மண் தரைகளும் கல்விக் கூடங்களாக மாறின. இலங்கையின் பல பகுதிகளில் மாணவர்களுக்கென 'ஸ்கூல் பஸ்'. வன்னியில் தற்காலிக இருப்பிடத்திலிருந்து நான்கைந்து மைல் நடந்து பள்ளிக்கூடம் வரும் மாணவர்களும் இருந்தனர். உலர் உணவு கூட சரியாக இல்லாத குடும்பங்களுக்கு சமைத்த உணவு எப்படிக் கிடைக்கும்? வெறும் வயிற்றுடனும், அரைகுறைச் சாப்பாட்டுடனும் வரும் மாணவர்கள் பாடசாலைகளில் மயங்கிவிழுவது சர்வ சாதாரணம். அநேகமான பாடசாலைகளில் காலை பத்துப் பதினொரு மணியளவில் சராசரி ஐந்து மாணவர்கள் மயங்குவதும், மயங்கி விழுந்த மாணவர்களை சைக்கிளில் ஏற்றிச் செல்வதாலோ அல்லது சுமந்து செல்வதாலோ மேலும் பத்து மாணவர்களும் பாடங்களைத் தொடர முடியாமற் போவதும் வழக்கமான நிகழ்வாகும். சாதாரண சலவைச் சவர்க்காரத்தின் விற்பனைகூட மட்டுப்படுத்தப் பட்டிருந்ததால் பாடசாலைச் சீருடைகள் மண்ணிறமாக மாறிவிட, மாற்றுடையில்லாத மாணவர்களைக் கண்டு மனம் வருந்தியதுண்டு.




இத்தனை இடையூறுகளுக்கும் மத்தியில் எதுவித குளறுபடிகளும் இன்றி பரீட்சைகள் ஒழுங்காக நடை பெற்ற தாக பரீட்சை ஆணையாளர். திரு. அமரக்கோன் சொல்லியிருக்கிறார். வடபகுதி மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சரும், செயலாளரும் பகிரங்கமாக மேடைகளில் பாராட்டியுள்ளார்கள்.

வடபகுதியில் கடல்வளம் நிறையவே இருந்தும் அதனைப் பயன் படுத்தமுடியாத நிலை இருந்தது. இரவில் ஆழ்கடலில் கடற்றொழில் செய்தால் தான் பலனுண்டு என்பது எல்லாருக்கும் தெரியும். பகல் நேரத்தில் குறிக்கப்பட்ட சில பகுதிகளில் கரைக்கருகே கடற்றொழிலில் ஈடுபடுவதால் கடலுணவைப் போதியளவு பெற முடியுமா? பொருளாதாரத்தை வளப்படுத்த முடியுமா?

வடபகுதி வானம் பார்த்த பூமியானாலும் செழுமையான பசளைத்தன்மை நிறைந்த செம்பாட்டு மண்வளம் கொண்டது. எத்தனையோ கட்டுப்



படிப்பகம்

www.padippakam.com



*கவிதாயினி*
**'தாமரை'**

தமிழ்க் கவிதைத் துறையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர் தாமரை. இவரின் கவிதைத் தொகுதி ஒன்றும் வெளியாகியுள்ளது.

பொறியியல் துறைப்பட்டதாரி. படங்களுக்கும், குறுந்திரைக்கும் பாடல் எழுதுபவர். 'நந்தா' படத்தில் 'கள்ளியடி கள்ளியடி' பாடலை எழுதியவர், இப்பாடல் மட்டக்களப்பு பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டு புனையப்பட்டதாகும்.

இப்பாடலுக்காக 2002ம் ஆண்டின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதை தாமரைக்கு 'சினிமா எக்ஸ்பிரஸ்' வழங்கி கௌரவித்துள்ளது.

பாடுகளுக்கும் மத்தியில் விடுதலைப் புலிகளால் இயக்கப்பட்ட பொருண்மிய மேம் பாட்டு நிறுவனமும், பசுமை வேளாண் சேவையும் மிகப்பரந்த அளவில் விவசாயிகளுக்கு உதவியது. அவசியமான அடியுரம், விதை பொருட்கள், கிருமிநாசினிகள் போன்ற உள்ளீடுகளையும், விவசாயத்திற்கு உரிய ஆலோசனைகளையும் வழங்கியது.

இயந்திரங்களைப் பயன் படுத்தக் கூடிய வசதி இல்லாததால் மனிதவலுவும், மாடுகளும் விவசாய விருத்திக்கு பயன்படுத்தப்பட்டன. இலை குழை, எரு போன்ற இயற்கைப் பொருட்கள் உரமாகின. கிருமி நாசினிகள், களைகொல்லிகள் விற்பனை மட்டுப்படுத்தப் பட்டதால், விவசாயிகள் கைகளால் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை பிடித்து இல்லாதொழித்தும், களைகளைப் பிடுங்கியும் விவசாய நடவடிக்கைகளிலே ஈடுபட்டனர். இயுந்திரங்களையும் நவீன முறைகளையும் பயன்படுத்தி ஏக்கர் கணக்கில் விவசாயம் செய்ய முடியாமற் போனதால் குறுகிய பரப்பளவில் மாத்திரம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. இருப்பினும் பல காய்கறிகளும் பழவகைகளும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

மனிதமுயற்சியால் வடபகுதி மண்ணில் விளைந்த கதலி வாழைப்பழம், கிலோ இரண்டு ரூபாவுக்கு விற்பனையான வேளை, ஏனைய பகுதிகளில் கிலோ இருபத்தைந்து ரூபாவுக்கு மேல் விற்பனையானதும் மக்களுக்குத் தெரியும்.

புதிய வகையான காய்கறிகள் பழவகைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

புலிகளின் வீரத்தளபதிகளில் ஒருவராக இருந்தவர் 'கிட்டு'. கிட்டுவால் அறிமுகம் செய்யப்பட்ட ஒருவகைப் பப்பாசிப் பழம் 'கிட்டு பப்பாசிப் பழம்' என அழைக்கப்பட்டது. மரத்தின் உயரம் குறைவாக இருந்தாலும் கிடைக்கும் பழத்தின் நிறையும் சுவையும் கூடியதாக இருந்தது.

கத்திரிக் காய்களை சாக்கில் கட்டி விளை நிலத்திலிருந்து சந்தைக்கு எடுத்துச் செல்லும் போதும், சந்தையில் வாங்கி வீட்டுக்கு கொண்டு செல்லும் போதும் அவை நசிந்து பழுதாவதால் பெருநட்டம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு வவுனியாவில் 'வேலு' என்னும் விவசாயி ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்டது 'வேலு கத்திரிக்காய்'.

பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களால் இயக்கவேண்டிய வாகனங்கள், இயந்திரங்கள் மண்ணெண்ணையில் இயங்கியதை, வட பகுதிக்கு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆச்சரியத்துடன் நோக் கியதை கண்டிருக்கின்றேன். சிரட்டைக் கரியைப் பயன்படுத்தி நீரிறைக்கும் இயந்திரத்தை இயக்குவது, சைக்கிள் டைனமோவிலிருந்து வானொலி கேட்பது, மின்சாரம் பெறுவது, கிளாலிக் கடலில் பல வள்ளங்களை ஒன்றாக இணைத்து, வெளியிணை இயந்திரமின்றி, எரிபொருளின்றி பிரயாணங்கள் மேற்கொள்வது, பொருட்கள் கொண்டு செல்வது இப்படி எத்தனையெத்தனையோ....

ஓயாத போராட்டத்துக்கும், தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கும் மத்தியில் வடபகுதி மக்கள் ஓடுகின்ற வாழ்க்கை நடாத்தினார்கள். சிலரது வீடுகளுக்கு நான் சென்றபோது வீட்டு விறாந்தையில் "ஓடுகிற BAG" என ஒரு பை வைக்கப்பட்டிருக்கும். முதல் முதலாக ஓடுகிற பை என்ற சொல்லைக் கேட்டு பொருளைப் பார்த்த பின் அதைப்பற்றி மேலும் அறிய விரும்பிய போது கிடைத்ததகவல்.

ஆயுதப்படை என்ற அச்சமும், குண்டு விழும் என்ற அச்சமும் "ஓடித்தப்பவேண்டும்" என்ற பீதியை எப்போதும் ஏற்படுத்திக் கொண்டிருக்குமாம். ஆனால் செலவுக்கு பணம், மாற்றுடுப்பு, குளிப்பதற்குத் தேவையான பொருள், இரண்டொரு வேளைக்கு ஈடுகொடுக்கக் கூடிய உணவு, மெழுகுதிரி, தீப்பெட்டி என்று சில பொருட்கள் ஓடுகிறபையில் எந்தநேரமும் ஆயத்தமாக இருக்கும். விளையாட்டு மைதானத்தில் "அஞ்சலோட்டம்" அறிவிப்பை தொடர்ந்து சிறிய தடிகளுடன் ஓடுபவர்களையும் தடிகள் கைமாறுவதையும் பார்த்திருக்கின்றேன். ஓடுகிற பையும் அப்படித்தான் ஓடுகிற குடும்ப அங்கத்தினரிடையே ஓடுகிற பை கைமாறும். ஆனால் எல்லோரும் போட்டி முடிவடையும் இடம் வரை - ஆபத்துக் குறைவு என்று கருதும் தற்காலிகத் தங்குமிடம் வரை ஓடினால் தான் பிழைக்கலாம் என்ற நிலை.

ஒழுங்கான உழைப்புப் பிழைப்புமில்லை - வாழக்கையும் நிச்சயமில்லை ஆனால் வளர்கலைகளுக்குப் பஞ்சமுமிருக்கவில்லை. போராட்டங்களையும் சமுதாய மாற்றங்களையும் எதிர்பார்ப்புகளையும் சித்தரிக்கும் கலை இலக்கிய வடிவங்கள் தோன்றின. அச்சு இலத்திரனியல்




படிப்பகம்

www.padippakam.com

ஊடகம் பற்றியும் அறிந்திருந்தார்கள். சிறுகதைகள், கவிதைகள், சஞ்சிகைகள் மட்டுமல்ல, நாளிதழ்கள் கூட வெளிவந்தன. இரவிரவாக குண்டுச் சத்தம் கேட்டாலும் காலையில் நாளிதழ் கடையில் பெறக்கூடியதாயிருக்கும். இடத்துக்கிடம் கொண்டு செல்லத் தக்கவகையில் அச்சு இயந்திரத்தை வாகனமொன்றில் பொருத்தி பத்திரிகை அச்சிட்டு வெளியிட்டதாகப் பேசிக்கொண்டார்கள். பத்திரிகைக் காகிதம் இல்லாத போது எழுதுகின்ற கொப்பிகள் புத்தக உறையாகப் பயன்படுத்தும் பிறவுண் பேப்பர், கோவையுறை (File Cover) எல்லாமே செய்திகளை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

காத்திரமான படைப்புகளுடன் "வெளிச்சம்" சஞ்சிகை, சுதந்திரப் பறவைகள், வெளிச்சம் ஆண்டு மலர்கள் தொடர்ந்து வெளியாகின. ஒளிப்பதிவு நாடகங்கள், ஒலிபரப்பு நாடகங்கள், திரைப்படங்கள் பல தயரிக்கப்பட்டன. 'புலிகளின் குரல்' வானொலி, 'நிதர்சனம்' தொலைக்காட்சி இயங்கின. இராணுவத்துடனே ஒரு பகுதியினர் போராடும் வேளை இன்னொரு குழுவினர் அக் காட்சிகளைக் களமுனையில் திரைப்படமாக்கினார்கள். 'ஓயாத அலைகள்' என்ற படம் வடபகுதி திரையரங்குகளில் மாத்திரமின்றி கடல் கடந்த நாடுகளிலும் காண்பிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுக்கு முன் வெளிநாடொன்றுக்குச் சென்ற வேளை அப்படத்தைப் பார்த்து ஆச்சரியத்தால் பிரமித்து விட்டேன். விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் முல்லைத்தீவில் இடம் பெற்ற சமர் வெகு துல்லியமாக தெளிவாக ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்தது. அச்சமரில் கொல்லப்பட்ட ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட இரணுவத்தினரின் உடல்கள் கையளிக்கும் நிழ்ச்சியும் படமாக்கப்பட்டிருந்தது உடல்களைப் பொறுப்பேற்ற கிளிநொச்சி அரசாங்க அதிபராக நான். கற்பனையில்லாத படம் 'ஓயாத அலைகள்'.



விடுதலைப் புலிகள் போராளியாக இருந்தாலும் சரி காவல் துறையினராக இருந்தாலும் சரி எல்லோருடனும் மரியாதையாகப் பழகுவார்கள். வெளிநாட்டினர் (Sir, Madam) என அழைப்பது போல 'ஐயா' - 'அம்மா' என்று அழைப்பார்கள்.

கிளிநொச்சியில் கடமையாற்றியபோது ஒரு தடவை இரணைமடு, குளக்கட்டு வீதியில் சென்ற போது காவல் துறையைச் சேர்ந்த மூவரும் பொது மக்கள் சிலரும் குளத்தைப் பார்த்தபடி நின்றனர். காரணத்தை அறியவிரும்பி காவல் துறையுடன் பேச்சுக் கொடுத்ததேன்.

"கள்ளரண்ணா குளத்துக்குள் விழுந்திட்டார் கரைக்கு வரும்வரை பார்த்துக்கொண்டு நிக்கிறோம்". கள்வன் ஒருவனைப் பிடித்துக் கொண்டு குளக்கட்டு வீதி வழியாக வந்தபோது அவன் காவல் துறையின் பிடியில் இருந்து தப்பி ஓடமுயற்சி செய்தபோது குளத்தில் விழுந்து விட்டதாகவும் அவனை மீண்டும் பிடிக்க இருப்பதாகவும் செய்தி. கள்ளனையும் "அண்ணா" என விழித்து "கள்ளரண்ணா" என்று சொல்லும் மரியாதைப் பண்பை நியூசிலாந்து பொலிசாரிடமும் கண்டிருக்கிறோம்.

நியூசிலாந்து பொலிசார் தவறு இழைக்கும் மக்களிடமும் "காலை வணக்கம் ஐயா, நீங்கள் தவறு செய்து வீட்டீர்கள் மண்ணிக்கவும் தவறுக்கான குற்றப்பணத்தை தயவு செய்து செலுத்துங்கள் "ஐயா" என மரியாதையாகவே உரையாடுவார்கள்.

இடைக்கால ஈழத்தில், மனிதப் பிரிவினை என்னும் கொடுமை நிறைந்த சாதிக்கட்டமைப்பு இல்லாத சமூதாயத்தைக் காணமுடிந்தது. சுதந்திரமான பெண்களையும், பெண்களை மதிக்கும் மக்களையும் காணமுடிந்தது. கல்வியிலும், கலைகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் நேர்மை யானவர்களைத் தரிசிக்க முடிந்தது. விவசாயம், சிறுதொழில், பொருளாதார முயற்சிகளால் சுயதேவையை பூர்த்தி செய்ய முயன்ற மக்களைத் தரிசிக்கமுடிந்தது, இனிய தமிழ் மணக்கும் ஈழத்திருநாட்டில் இறைபக்தியும் விழுமிய பண்புகளும் நிறைந்தவர்களை தரிசிக்க முடிந்தது. மொத்தத்தில் உயர்வான சமூதாயத்தை உருவாக்கக் கூடியவர்களை தரிசிக்க முடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com



# கண்ணில் தெரியுதொரு தோற்றம்



செ. யோகநாதன்

வானத்திலே நட்சத்திரங்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் மாணிக்கவாசகர் இருளை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பனங் கூடலும் இருளுக்குள்ளே முற்றாகவே மூடிக் கிடந்தது. சுவர்க்கோழியின் சத்தம் அந்த விரிந்த மௌனத்துக்கிடையே காதுகளை ஓங்கி அறைந்து எரிச்சலூட்டிற்று. அது எதிரே தெரிந்தால் பெரு விரலால் நசிக்க வேண்டும் போல மனதினுள்ளே மூர்க்கம் கொதித்தது. பிறகு தன்னை அமைதிக்கு கொண்டுவர முயன்றான். பத்மாவின் முகமும் குரலும் மனவெளியில் தோன்றி ஒலித்தன. கனிவான முகம், நேசம் இழைந்த குரல், பத்மா அடிக்கடி சொல்லுவாள்: "எதுக்கும் அடிக்கடி கடுமையாக கோபப்படாதேங்க.."

அவளை நினைத்த போது கோபம் மெல்லவே மங்கிப்போய் வேதனையும் மனதிலே பரவிற்று. அந்தக் கம்பீரமான உருவம் எதிரே நடந்து வருவது போலத் தோன்றிற்று. அணிவகுப்பில் ஒத்திசைவாக நடப்பது போல ஆளுமை செறிந்த நடை.

மாணிக்கவாசகரும் அவளும் ஒன்றாகவே படித்தனர். ஒன்றிரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் தான் அவர்கள் ஒருவரை ஒருவர் முந்தி முதலாம் இடத்திற்கு வருவான். அவள் முதலாம் இடத்திற்கு வந்தால் அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. இரண்டு நாட்களுக்கு அவளோடு எதுவுமே கதைக்கமாட்டான். வேண்டுமென்று ஒதுங்கிக் கொள்ளுவான். அவள் இயல்பாகக் கதைக்க வரும்போதெல்லாம் வெடுக்கென்று எரிந்து விழுவான். அப்போதும் பத்மா அவனைச் சினக்கவே மாட்டாள். பரிவோடு அவனைப் பார்ப்பாள். கண்களில் மலர்ந்த புன்னகை இருக்கும். மறுநாள் அதற்கு மறுநாள், அவனைப் பார்க்கிறபோது அதே பரிவோடும் புன்னகையோடும் எதிர்கொள்வாள். முன்னர் எதுவுமே நடக்காதது போல நடக்கும் அவளைப் பார்க்கிற போது தன்னையிட்டு அவன் அவமானமடைவான். ஏதாவது அதைப்பற்றி சொல்ல



படிப்பகம்

www.padippakam.com

வாயெடுத்தால் "சரி சரி இப்ப அந்தக் கதையை விட்டிடுங்க" என்று குறுக்கிட்டுக் கூறி, அவன் வார்த்தைகளை தொடரவிடாமல் வேறெங்கோ கவனத்தை இழுத்துச் செல்வாள். அந்த வளரிளம் பருவத்திலேயே அவனுக்கு அவள் சொல்லுதற்கரிய அற்புதமாகப் பளிச்சிட்டாள்.

தற்செயலாக ஒருநாள் பத்மாவின் வீட்டிற்கு அவன் சென்றான். வீடு ஒரே பரப்பாக இருந்தது. உள்ளே போகலாமா, திரும்பலாமா என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது அவளது குரல் தான் அவனை உள்ளே அழைத்தது. "வீட்டுக்கு வந்திட்டு ஏன் திரும்பப் போறியள்? உள்ளே வாருங்க..." பதில் பேசாமல் அவன் உள்ளே சென்ற போது பத்மாவின் அக்கா சரோஜினி தடுமாறிய குரலிலே, "தம்பி, பத்மாவினுடைய வேலையப் பாருங்க, ஒரு நாகபாம்பை கையாலை பிடிச்சு நிலத்தில தூக்கி அடிச்சுக் கொன்று இருக்கிறா... அங்கை பாரும்..." என்றாள்.

மாணிக்கவாசகர் திகைத்துத் தடுமாறிப் போனான். சுவர் ஓரமாக தலைநசிந்து உடல் சிதைந்து சிதறிப் போய்க் கிடக்கும் பெரிய நாகப்பாம்பு, அதைப் பார்த்தபோதே உடம்பு புல்லரித்துச் சிலிர்த்தது. சட்டென்று பார்வையை அந்த இடத்திலிருந்து தூக்கிய போதிலும். மனதிற்குள் தலைநசிந்து உடல்சிதைந்து சிதறிப் போய்க் கிடக்கின்ற அந்தக் கோரம் மட்டும் அழுத்தமாகப் பதிந்து போய்விட்டது.

"என்ன கடுமையான யோசனை?"

பத்மாவின் குரல் அவனை சுயத்திற்குக் கொண்டு வர எதிரே நின்ற அவளைப் பார்த்தான்.

"என்ன வேலை செய்திருக்கிறியள்?"

அச்சம் படித்திருந்த அவனது வார்த்தைகளக் கேட்டு அவளது முகத்தில் புன்னகை.

அவனே தொடர்ந்தான்:

"சரியான விஷப்பாம்பு போல இருக்குது கடிச்சிருந்தால் என்ன செய்திருப்பியள், இப்படிச் செய்யப் பயமே இல்லையோ...? "

"அதுதானே, அதைக் கேளும் தம்பி..."

குறுக்கிட்டாள் சரோஜினி.

நீண்டிருந்த ஒற்றைப் பின்னலை, தோளிலிருந்து பின்னே தள்ளிவிட்டவாறு அவர்களைப் பார்த்தாள் பத்மா.

"பாருங்க, நான் வீட்டுக்குள்ள வந்தபோது தடுக்குப் பாயிலை குழந்தை சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தது, அதுக்குப் பக்கத்திலை இந்தப் பாம்பு படம் விரிச்சு ஆடிக் கொண்டிருந்தது, கொஞ்சநேரம் விட்டிருந்தாலும் அது குழந்தையைக் கொத்தியிருக்கும். எனக்கு அப்போ குழந்தையைக் காப்பாத்துகிறதுதான் முக்கியமாகத் தெரிஞ்சுது. பாம்பை ஆபத்தில்லாமல் பிடிக்க வேணுமெண்டால் கழுத்திலை பிடிச்சு தூக்கி எறிய வேணும், இல்லையென்றால் வாலைப் பிடிச்சுத் தூக்கி நல்லா இறுக்கி சுற்றிவிட்டு தூரமாய் எறிய வேணுமென்று எங்கேயோ படிச்சது நினைவிலை வந்தது, உடனேயே பாம்பை வால் நுனியிலை பிடிச்சுத் தூக்கி இறுக்கி வீச்சாக சுழற்றிவிட்டு சுவரோடை வீசி எறிஞ்சிட்டன், அவ்வளவுதான் எனக்குத் தெரியும்..."

அவள் சொன்னதிற்கு என்ன கூறுவதென்றே மாணிக்கவாசகருக்குத் தோன்றவில்லை. பத்மா ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்கமாக யோசனை செய்த பிறகே செய்கிறாளென அவன் எண்ணினான். பல சந்தர்ப்பங்களில் இதை அவன் வெகு நுணுக்கமாகவே கவனித்து வந்திருக்கிறான். அவளைப் பற்றிய அபிப்பிராயம் மேலும் மேலும் அவனது மனதினிலே அதிகரித்து வந்தது.

மழை சோனாவாரியாகப் பெய்துகொண்டிருந்த ஐப்பசி வெள்ளியொன்றின்போது அந்தச் செய்தியை அவன் கேள்விப்பட்டு மனம் உடைந்து போனான். பத்மா, தான் இயக்கத்தில் சேரப் போவதாகக் கடிதம் எழுதி வைத்துவிட்டு காணாமல் போய்விட்டாள்.

ஒரு மாதத்தின் முன் அவளின் உறவுப் பெண் ஒருத்தி வெறிபிடித்த சிப்பாய்களால் மூர்க்கத்தனமாக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு பின் குப்பைக் குழியொன்றினுள் தூக்கி வீசப் பட்டிருந்தாள். கழுத்தில் சிதைந்த நிலையிலேயே அவளின் சடலம் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டாள். பத்மா அந்தப் பெண்ணின் பிறந்த நாளுக்கு வழங்கிய பாதசரங்களை வைத்தே அவள் அடையாளத்தினைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

அதன் பிறகு ஒரு வாரமாக அவள் கல்லூரிக்கு வரவில்லை. பின்னர் வந்தவளின் முகத்தில் மலர்ச்சி முற்றாகவே கருகிப் போயிருந்தது. பார்வை எங்கோ வெறிச்சோடிற்று, இரண்டொரு வார்த்தைகளைப் பேசுவதே அபூர்வமாயிருந்தது. இப்படியான நிலையின் தொடர்ச்சியில் அவள் காணாமல் போன செய்தி வந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனதினுள் சொல்ல முடியாததோர் வெற்றிடம் விரிந்தது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு முல்லைத்தீவுச் சமரில் அவள் ஒற்றைக்காலினை இழந்தாள் என வந்த செய்தியினைக் கேள்விப்பட்டு அவன் முற்றாகவே மனம் ஒடிந்து போனான். ஒற்றைக் காலை இழந்த அந்தக் கம்பீரத்தை கற்பனை செய்து பார்க்கவே அவனது மனம் நொந்து வலித்தது.

நேற்றுக் கிடைத்த செய்தி அவனது மனதிலே திகைப்பையும், பயத்தையும், இனம்தெரியாத மகிழ்ச்சியையும் உண்டாக்கிற்று. இங்கே வந்து இந்த இருளிடையே உட்கார்ந்திருக்கிறான்.

சுவர்க்கோழி இன்னமும் சத்தமிட்டது.

திடீரென்று இடியும், மின்னலும். பனங்கூடலுள் மின்னல் வெளிச்சத்தை அள்ளிக் கொட்டிற்று. அவன் அவசரமாக எழுந்து உள்ளே சென்றான்.

நாளைக்கு தன்னுடைய வீட்டிற்கு வரவிருக்கும் பத்மாவின் முகம் மட்டும் அவனது கண்களிலே வந்தது. அவன் வெளிக் கதவை மூடிவிட்டு உள்ளே சென்றபோது மின்னற் கொடியொன்று சட்டென வேர்களாய் பரப்பி வெளிச்ச ஊற்றினை காணுங் திக்கெல்லாம் அள்ளி எற்றியது. இடியோசை நெஞ்சை அச்சம் கொள்ள வைத்து தொடர்ச்சியாக உறுமிற்று. காற்று ஊளையிட்டு கூத்தாடிற்று. இதே போன்ற நாளொன்றின் போது தான் பத்மா கடிதம் எழுதிவைத்துவிட்டு காணாமற் போனாள். இப்படியான கால நிலைக்குள் பத்மா எப்படித்தான் இயங்கப் போகிறாளோ என்ற நினைவு

www.padippakam.com

பாரமான மின்னலைப் போல அவனது நெஞ்சத்துக்குள்ளே குதித்து வீழ்ந்தது.

**வா**சற்பக்கமாக உள்ளே நுழையப் போனவனை அந்தக் கலகலப்பான சிரிப்பு, கொஞ்சம் நில் என்று கூறி நிறுத்திற்று. பத்மாவின் சிரிப்பு அது. வெளியே நின்ற ஹொண்டா மோட்டார் சைக்கிளை ஒருகணம் வியப்போடு பார்த்தான்.

"ஏன் வெளியிலை நிக்கிறியள்? உள்ளுக்குள்ளை வாருங்கோவன்..."

கம்பீரமான நடையோடு அவனை அழைத்தவாறு வாசற்பக்கம் வந்த பத்மாவைக் கண்டதும் திகைத்துத் திடுக்கிட்டுப் போய் விட்டான் மாணிக்கவாசகர்.

நீண்ட தலைமுடியை 'கிராப்பா'க வெட்டி மேலே சேர்ட் போன்ற பிளவ்சும், நீண்ட பாவாடை வடிவத்துச் சட்டையும் அணிந்து அதே கம்பீரமும் பெருமிதமுமாய் நின்றாள் பத்மா.

அவளை அவன் மேலும் கீழுமாகப் பார்த்தான். அவனது மனம் பிடரியினைச் சொறிந்து கொண்டு சந்தேகத்துள் அமுங்கிற்று. இப்போது உண்மையாவே தலையைச் சொறிந்துகொண்டான்.

அவள் முன்னே நடந்தவள், திரும்பி அவனைப் பார்த்தாள்.

"ஏப்பிடி இருக்கிறியள்?"

"இருக்கிறன்..."

அவனைப் பரிவோடு ஏறிட்டாள்.

"ஏன் சோர்ந்து போய்க் கதைக்கிறியள்.?"

வறுமையாகச் சிரித்தான் மாணிக்கவாசகர்.

"சொல்லுங்க,..."

"அப்பிடி ஒன்றுமில்லை,..."

"பொறுங்க.. நான் இப்போ உங்களுக்கு ஒருவரை அறிமகப் படுத்துகிறன்..."

"யார்..?"

"தியாகு இங்கை ஒருக்கால் வாருங்க..."

இடதுபுற அறையிலிருந்து இளைஞன் ஒருவன் வெளியே வந்தான், கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான், வலது கை முற்றாக இல்லை, சேர்ட் கை தொங்கியது.

"பத்மா...யார் இது?"

"தியாகு, இவர் சின்ன வயதிலையிருந்து என்னோடு ஒன்றாகப் படித்தவர், பெரிய உத்தியோகம் பார்க்கவேணுமென்று விருப்பப்பட்டவர், நாட்டு நிலைமையாலை அது முடியேல்லை... இந்தக் கவலையோடையே இருக்கிறார்..."

இளநகை தியாகுவின் முகத்தில் படர அவன் மெல்லத் தலைய ஆட்டிக்கொண்டான்.

"இவரைப்பற்றிச் சொல்லுறன், இயக்கப் போராளி, களத்திலை இரண்டு கண்களையும் ஒற்றைக் கையையும் பறி கொடுத்தவர், ஆனால் அண்ணனிட்டைக் கேட்டு இன்னும் களத்திலை இருக்கிறார். கண் வெளிச்சம் இல்லாட்டிலும் எந்த ஆயுதத்தையும் விரலால் தொட்டுப் பார்த்தே அதிலை உள்ள பிழையைச் சொல்லி சரியாகத் திருத்தி விடுவார்,.."

பெருமை பரிமளித்தது அவளது குரலிலே. வாஞ்சை பொங்க தியாகுவைப் பார்த்தாள். பெருமிதத்தோடு, "ஒரு மெல்லிய சத்தம் கேட்டாலே போதும், அந்த இடத்திலே என்ன இருக்குதென்று சரியாகச் சொல்லிவிடுவார்..." என்றாள்.

அப்போது சரோஜினி வெளியே வந்தாள். மாணிக்கவாசகரைக் கண்டு முகமலர்ந்தாள்.

"எப்பிடி இருக்கிறியள் தம்பி...?"

"இருக்கிறன்... அக்கா..."

"இப்ப நாட்டு நிலைமை எல்லாம் மெல்ல மெல்லச் சரியாகிக்கொண்டு வருகுது. நீர் இனி என்ன செய்யப்போகிறீர்?"

"இன்னும் அதைப் பற்றி முடிவு செய்யேல்லை.."

சொல்லியவாறு நெற்றியை வருடிக் கொண்டான் மாணிக்கவாசகர்.

"பொறுங்க... குடிக்க ஏதாவது கொண்டு வாறன்.." என்றவாறே பரபரப்பாக உள்ளே போனாள் பத்மா.

"பத்மாவோடை கதைக்கவே ஆசையா இருக்கு.." எவ்வளவு அறிவும் கெட்டித்தனமும் உள்ள பிள்ளை. எங்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கு...."

"தம்பி எலுமிச்சம் பழத் தண்ணீர்.. குடியுங்க..."

மாணிக்கவாசகர் கோப்பையை வாங்கிக் கொண்டான்.

"கொஞ்சநேரத்தில் முக்கியமான ஒருவரை நாங்க இரண்டு பேரும் போய்ச் சந்திக்க வேணும் பின்னேரம் வீட்டுக்கு வாருங்க.."

பம்பரமாய் தியாகுவோடு வெளியே போனாள் பத்மா.

"தியாகு ஏறிவிட்டீங்களோ?"

மோட்டார் சைக்கிள் குதிரையாய் உறுமிக்கொண்டே புறப்பட்டது. கம்பீரமாக மோட்டார் சைக்கிளை ஓட்டியவாறே சென்றாள் பத்மா.

"பாருந்தம்பி என்ன வீச்சாகப் போறா, இவ்வளவுக்கும் வலது காலிலை முழங்காலுக்கு கீழே இல்லை. பொய்க்கால் கட்டியிருக் கிறா என்றால் ஒருத்தரும் நம்ப மாட்டினம்.."என்றாள் சரோஜினி.

மாணிக்கவாசகர் பேச்சற்று நின்றான். ■





படிப்பகம்

www.padippakam.com

# சில சிந்தனைகள்

## சகுந்தலா ஞானசேகரன்

உலகில் வாழ்கின்ற தமிழ் மக்களிடம் மிகுவும் மதிப்புப் பெற்றிருந்தது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய ஒலிபரப்பாகும். ஒரு காலத்தில் இலங்கை வானொலி சிறந்த கலை இலக்கிய இசைத்துறையினரின் இருப்பிடமாக இருந்தது. இத்துறைகளில் இதனால் பிரமிக்கத்தக்க அபிவிருத்திகள் ஏற்பட்டன. உலகின் தமிழர்கள் எல்லோருமே விரும்பிக் கேட்கின்ற சிறப்பினையும் இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்புப் பெற்றிருந்தது. இந்திய வானொலி அலைவரிசை களே வியக்கும் அளவிற்கு தேசிய ஒலிபரப்பின் நிகழ்ச்சி கள் அமைந்திருந்தன. ஆனால் இன்றுள்ள நிலைமை என்ன?

தேசிய சேவைகளின் ஒலிபரப்பு நேரம் இப்போது எந்தக் காரணமும் இன்றிக் குறைக்கப் பட்டுள்ளது. வெறும் செய்தி, அறிவிப்பு, இசைத் தட்டு நிகழ்ச்சிகளே இதன் நிகழ்ச்சியான உள்ளன. இவையெல்லாவற்றையும் விட தமிழ்த் தேசிய சேவைக்கு ஒரு நிரந்தரப் பணிப்பாளர் இல்லை.

இதை விட மேற்கூறிய துறைகளில் பயிற்சி பெற்றவர்கள். அநுபவம் உள்ளவர்கள் எவருமே இப்போது இங்கு இல்லை. இந்தத் துறைகளில் சிறந்தவர்களை வருவித்து நிகழ்ச்சிகள் நடத்து வதற்கு முன்னர் ஒரு சிறு தொகை சன்மானமாக வழங்கப்பட்டது. ஆனால் இப்போது அதுவும் கொடுக்கப்படுவதில்லை என அறிகிறோம். இந்தத் துறை சார்ந்தவர்களும் அழைக்கப்படுவதில்லை. இவ்வளவிற்கும் இதற்கு பொறுப்பாக இருப்பவர் தமிழ்ப் பேசும் இனத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சரே.

தமிழ்ச் சேவையில் கடந்த காலத்திருலிருந்து சிறந்த பணிப்பாளர்கள் அருமையான கலைப் பொக்கிஷங்களை சேகரித்து வைத்திருந்தனர். நாதஸ்வர இசைக் கலைஞர்களான டி. எம் ராஜரத்தினம் பிள்ளை, காரைக்குறிச்சி அருணா சலம் போன்றவர்களும் தமிழிசையின் ஒப்பற்ற சிகரங்களான எம். கே. தியாகராஜ பகவதர், கிட்டப்பா, கே. பி.சுந்தரம்பாள், எம். எஸ். சுப்புலட்சுமி எம். சீ வசந்த கோகிலம், எம் எல். வசந்த குமாரி, நடிகமணி வி. வி. வைரமுத்து போன்றோரின் இன்னிசையும் இங்கே பதிவு செய்து காலம் காலமாக பாதுகாக்கப்பட்டு வந்தன. இவை அகில இந்திய வானொலியில் கூட பதிவு செய்து வைக்கப்படவில்லை என்பது இசைத்துறையினர் அறிந்த உண்மையாகும். இதுபோலவே பேராசிரியர்கள் க. கணபதிப் பிள்ளை, சு. வித்தியானந்தன். வி. செல்வநாயகம். க. கைலாசபதி போன்ற பலரின் உரைகளும் இங்கே பதிவு செய்து வைக்கப்பட்டிருந்தன. இலங்கையின் புகழ்மிக்க பல கலைஞர்களின் பாடல்களோடும், இசையோடும் தேசிய சேவை ஒரு பண்பாட்டரங்கமாக விளங்கியது. ஆனால் இன்றைக்கு அவற்றின் நிலைமை சொல்வதற்கே வேதனை கொடுப்பதாக மாறி விட்டது.

ஒப்பற்ற பண்பாட்டு பொக்கிஷம் இன்று இலங்கை வானொலியின் அழுக்குப் படர்ந்த அறைகளுள் கவனிப்பார் இல்லாமல் சீரழிந்து போய்க் கொண்டு இருக்கின்றது, அழிந்துபோய்க் கொண்டு இருக்கிறது என பரவலாகவே பேசிக்கொள்ளப்படுகின்றது. குளிரூட்டப்பட்ட அறையினுள்ளே பத்திரமாக பாதுகாத்துப் பேணப்பட வேண்டிய இந்தக் கலைப் பொக்கிஷங்களான ஒலிப்பதிவுகளும் இசைத் தட்டுக்களும் அழிந்து சிதைந்து போய்க் கொண்டு இருப்பது ஈழத் தமிழுக்கு பேரிழப்பாக மாறப் போகிறது. அற்புதமான தமிழ்ச் சொத்தை நாம் இப்படியாக இழந்து போகப் போகின்றோம்.

வரலாற்றுப் பெருமை மிக்க இலங்கைத் தமிழச் சேவையின் நிர்வாக, முறை போகும் போக்கைப் பார்க்கின்றபோது வெகு விரைவில் தமிழ்ச் சேவை மூடப்படும் என்ற முன் எச்சரிக்கையை தருகின்றது. இதே வேளையில் இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரை முஸ்லிம் சேவைகள் மிகச் செம்மையாக ஒலிபரப்பாகிக் கொண்டு இருப்பதையும் தமிழ் சேவைப் பிரிவினர் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

> *தமிழ்ப் பகுதியிலிருந்து, தமிழ் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியையும் கவனிப்பதற்காகவே பாராளுமன்றப் பிரதிநிதிகள் தேர்ந்து எடுத்து அனுப்பப்பட்டார்கள். ஆனால் வெளிநாட்டு சுற்றும் பயணங்களே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொழிலாகி விட்டது. அவர்கள் நாளேடுகளைப் படிக்க மாட்டோம் பண்பாட்டு விசயங்களை கவனிக்க மாட்டோம் என்று உறுதி எடுத்திருக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது.*

தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள் மேற்கூறிய பண்பாட்டுச் சீரழிவை இழப்புக்களைத் தடுப்பதற்கு விரைந்து செயற்பட வேண்டும் என்பது இன்றைய தலைமுறையினரின் விருப்பமாகும். இன்றைய தலைமுறையும் எதிர்வரும் தலைமுறையும் அர்ப்பணிப்புள்ள கலை பண்பாட்டுத் துறையினருக்கு இதற்காக தமிழின் பெயரால் என்னெற்றும் நன்றி சொல்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# "வியாபார யுக்தி என்பது வேறு தரமான படம் என்பது வேறு"

— பாலு மகேந்திரா



தமிழ்த் திரைப்படங்களுக்கு சர்வதேச அடிப்படையில் புகழ் தேடித் தரும் திரைப்படக் கலைஞர்களில் ஒருவர் பாலு மகேந்திரா. சிறந்த ஒளிப்பதிவாளர். சொல்லத்தக்க திரைக் கதை, உரையாடல் படைப்பாளி, ஈழத்தவர்.

"வீடு", "சந்தியாராகம்" போன்ற திரைப்படங்களை தந்த தோடு. "நீங்கள் கேட்டவை", "சதி லீலாவதி" யையும் உருவாக்கும் நிலைமைக்கு ஆளானவர். இப்படியான நிர்ப்பந் தத்திற்கு பணிதலும் ஒரு கலையுலகத் துயரமே.

"ஜென்டில்மென்" என்ற படம் பரபரப்பாகப் பேசப்பட்ட வேளை. ஒருநாள் சந்தித்தேன். வரட்சியோடு சிரித்தார். குரலில் வேதனை ஈரப்படுத்தியிருந்தது.

"மூன்று நாலு, நாலு முழவேட்டி, உடைகளை மட்டும் எடுத்துக் கொண்டு அகிலாவோடு கண்காணாத இடமொ ன்றிற்குச் சென்று திரைப்படம் பற்றிய பிரக்ஞை இல்லா மலேயே வாழ்ந்து முடிந்து விடுவோமா என்று யோசிக்கிறேன்."

இரக்கத்தோடு பாலுவைப் பார்த்தேன்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஜென்டில்மென் பார்த்தீரா?"

"இல்லை. ஏன் கேட்கிறீர்கள்"

"அதைப்பற்றி நிறையப் பேசப்பட்டது. பத்திரிகைகள் புகழ் ந்து எழுதின. பார்ப்போமே என்று போனேன். ஐந்து நிமிடம் கூடப் படத்தை உட்கார்ந்து பார்க்க முடியவில்லை. வெளியே வந்துவிட்டேன். இது தான், நல்ல திரைப்படம் என்றால் இந்த "பீல்டில" இருப்பது பெரிய அவமானம். வேதனை. எங்காவது ஓடிப் போய்விட்டால் நிம்மதியாக இருக்கலாம்..."

இதயத்தில் இருந்து வந்த வார்த்தைகள் அவை. ஆனால் பாலுமகேந்திரா அப்படிச் செய்யவே இல்லை. திரைப்படம், குறுந்திரை இயக்கத்தைத் தொடர்ந்தார். அதில் தரமும் இருந்தது. முரட்டுத்தனமான சமரசமும் தொனித்தது. பாலுமகேந்திரா விற்குரிய ஆளுமையே இதன் அடித்தளம்.

"கதைநேரம்" பாலுமகேந்திராவின் திட்டத்தை பூரணமாக வெளிக் கொண்டு வர இடமளிக்காத போதிலும், மிகமோ சமான குறுந்திரை தொலைக்காட்சித் தொடரிடையே வித்தியாசமாகத் தன்னை ஒலித்தது. புருவஞ் சுழிக்க வைத்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாலுமகேந்திரா "ஜூலி கணபதி" என்ற படத்தை இயக்கியுள்ளார். திரைக்கதை, வசனம் ஒளிப்பதிவும் வழமைபோல இவரே. பாலுமகேந்திராவின் இயக் கத்தில் ஐந்து ஆண்டுகளின் பின் வந்துள்ள "ஜூலி கணபதி" ஒரு "சஸ் பென்ஸ் திரில்லர்"அத்தோடு ஒரு முரட் டுத் தனமான காதல் கதையும் என்று அவரே சொல்கிறார்.


"ஜூலி கணபதி" க்கு வழமை போல வே இளையராஜா இசை அமைத் திருக்கிறார். இளையராஜாவின் இசை தனது படங்களுக்கு இன்னொரு பரிமா ணத்தைக் கொடுத்திருப்பதாக பெருமையோடு சொல்லி இருக்கிறார் பாலு மகேந்திரா.

"ஜூலி கணபதி"யில் சரிதா, ரம்யா கிருஷ்ணன், ஜெயராம், சஷீ ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்தைப்பற்றி திரையுலக வட்டாரங்களில் பலத்த எதிர்பார்ப்பு இருக்கின்றது.

தமிழ் திரைப்பட உலகில் பாலு மகேந்திரா பல விடயங்களிலும் "ஒரேயொருவர்" என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒருவர். நல்ல விடயங்களுக்கு மட்டும் என்றும் இதைச் சொல்ல வேண்டியதில்லை. அல்லாத விடயங் களுக்குத்தான் - பாலுவின் நண்பன் என்ற முறையில் இதை அழுத்தியும் என்னால் சொல்ல முடியும்.

இன்றைய நவீன தமிழ்ப் படைப்புலகம், உலக திரைப்படம் பற்றி ஆழ்ந்த ஞானமுள்ள பாலுமகேந்திரா, அண்மையில் வெளியிட்ட சில கருத்துக்கள். இன்றைய திரையுலகம் பற்றிய பல உண்மை நிலைமைகளை துல்லியமாகத் தெளிவு படுத்துகின்றன. இவை விசனத்துக்கும் விசாரத்துக்கும் உரியவை.

"இப்ப இருக்கிற இளம் இயக்குநர்களின் திறமையை நான் குறைச்சு மதிப்பிடலை. நல்ல திறமைசாலிகள் இருக்காங்க. என்ன ஒன்று என்றால், அவர்கள் நல்ல தயார் நிலையில் இல்லாத நேரத்தில் வாய்ப்புகள் கிடைச்சுப் போகுது துரதிஷ்டவசமாக அந்த மாதிரிப் படங்கள் வெற்றிப் படமாகவும் அமைந்து போகிறது. ட்ரூபோ சொன்னது மாதிரி, ஒரு படம் பயங்கர வெற்றி பெற்றால், அதைப்பற்றி நாம் பேசாமல் இருப்பது நல்லது. சேரன் போன்ற இளைஞர்கள், அர்த்தமான படங்களை எடுத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவசர மாக படம் பண்றதும், தரத்தைப் பற்றின அக்கறை இல்லாத தயார் நிலையில் இல்லாதபோதே களத்தில் குதிப்பதால் வருகிற பிரச்சினைதான் இதன் காரணம். வியாபார யுக்தி என்பது வேறு. தரமான படம் என்பது வேறு. இது இரண்டும் ஒன்று சேரும்போது, அற்புதமான அனுபவம் கிடைக் கிறது. சொல்ல வந்த கதையில் கவனம் செலுத்துவதில்லை. பெரும்பாலும் ஹீரோவிற்கு உகந்த பாகங்களை வைத்துக் கதைகள் சொல்லப்படுது. அவை பூர்த்தி செய்யப்படாத கதைகள். முழு ஸ்கிரிப்ட் வைத்துக் கொள் கிற புது இயக்குநரைப் பார்க் கவே முடியாது. நான் சமீபத்தில் ஒரு தயாரிப்பாளர் கிட்ட என்னு டைய ஸ்கிரிப்டைக் காட்டிய போது, "இப்படியெல்லாம் இரு க்கா" என்று ஆச்சரியப்பட்டார். "இன்னமும் செட்டில், ஓரமா உட்கார்ந்து வசனம் எழுதுகிற டைரக்டர்களை நான் பார்க்கி றேன்." ●



செ.யோ.

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்

இதயத்தில் எழுந்த அவசரத்திலும் படபடப்பிலும் தன்னையிழந்து, ஆடைகள் வியர்த்து ஒழுகி நனையத் தட்டுத் தடுமாறி, வயல் வரப்புகளூடாக விரைந்து கொண்டிருந்த சின்னையா, இன்னும் பாதி வழியைத் தாண்டியிருக்க மாட்டான் - அதற்கிடையில் கல்லூரி மணி கம்பீர ஓசையுடன் காற்றிற் கலப்பது, அவன் காதில் மெதுவாய்க் கேட்கிறது.

அவ்வோசை, இலைகளாகத் தத்தி வந்து, அவன் உள்ளத்தைத் திடுக்கிட்டுச் சிதற வைக்கிறது.. ஒருகணம், கால்கள் நிற்கின்றன. ஏதொ ஒரு உந்தல் அவற்றில் எழுந்து, நின்ற கால்கள் வேகமாக, வேகமாக அவனை இழுத்துச் செல்லத் தொடங்கும் போது, நேரம் சென்று விட்டதேயென்ற கவலையும் கல்லூரிக் கதவுகளைத் தாண்டி சந்தடியிழந்த வராந் தாக்களினூடாக - ஆக இறுதியிலுள்ள வகுப்புக்குச் செல்ல வேண்டியிருக்கிறதேயென்ற அவஸ்தையும், ஒருங்கே எழுந்து அலுவலகமும், அதிபரும், அவனுள்ளத்தில் ஏற்படுத்திய நடுக்கத்தில், வீட்டுக்கே திரும்பிவிடலாமா என்ற எண்ணம் தலையெடுக்கிறது.

எல்லாமே ஒரு கணத்தில் மறைய, நேரத்தை வானத்திலளக்கும் பழக்கத்தில், வானத்தை வெறிச்சிட நோக்கி, அவன் விரையத் தொடங்கிறான். அவனால் இன்றைக்கு வானத்தைப் பார்த்து சரிவர நேரத்தைக் கணக்கிட முடியாது. கருமை கருமையாக, குவிந்து கலைந்து, வானத்தில் அலைந்து வரும் மழை முகில்கள்..... திடீரென்று நேற்றிரவு முழுவதும் விடாமல் கொட்டிய மழை, வயல் வரப்புகளைச் சேறாக்கி, அவனை நடக்கவிடாமால் களிமண் பிசுபிசுவென கால்களில் ஒட்டுகிறது.

அவனால் நடக்க முடியவில்லை. ஒரே சினம்.

வயல்களுக்குமப்பால் பிரதான வீதி இருக்கிறது. பிரதான வீதியையொட்டி அவனுடைய கல்லூரி இருக்கிறது.

அவனுக்குத் தெரிந்த ஒன்பது வருடங்களில், ஆரம்ப வகுப்புத் தொடக்கம் இன்றுவரை வயல்களையும் பிரதான வீதியையும் இணைக்கும் ஒழுங்கற்ற இந்த வரப்புப் பாதைகளிலேதான், அவன் நடந்து கொண்டிருகிறான். மழைக் காலங்களில், அவனுக்கு அந்தப் பாதையில் பொல்லாத ஆத்திரம் வரும். ஒரே களிமண்: ஒடுங்கிய வரப்புகள். அது சேறும் சகதியுமாய், நடக்கமுடிவதில்லை.

இப்பொழுது பாதையின் ஒழுங்கீனத்தை யோசிக்காது, யோசிக்க இயலாத அவசரத்தில், வயல்களுக்குமப்பால், பிரதான வீதியில், மாணவர்களைக் காணமுடியாதிருந்த அந்த சூழ்நிலையே அவனுக்கு முக்கிய பிரச்சி னையாய் தோன்றுகிறது.

'இண்டைக்கு இந்த அப்பனாலை, நல்லா நேரம்போட்டுது. அறுவான்: காலைமை மாட்டன். மாட்டன் எண்டு சொல்லக் கேட்டானே? 'கொத்த வாடா' 'கொத்த வாடா' எண்டு உசிரை எடுத்துப் போட்டு, இப்ப இந்தக் கொதிகுடலன், தலைமை வாத்தி....... பார்த்துப் பாராமை எக்கச் சக்கமாக என்னை அடிச்சுக் கொல்லப் போறான்..... அதும் என்னையெண்டால் கொஞ்சமும் பிடிக்காது.... இப்படியும் ஒரு படிப்பு எனக்கு வேணுமோ? கொத்தி, இந்தக் கை மூட்டுக்கை நோகிற நோ.. நோகுது எண்டு ஆருக்கு சொல்றது? இதோடைதான் இன்று முழுக்க 'நோட்சும்' எழுத வேனும்...... இருக்கிற அலுப்பிலை....வீட்டைவிட்டு ஓடிப்போனா எவ்வளவு சுகமாக இருக்கும்? '

நேற்றிரவு மழை கொட்டித் தீர்த்திருந்ததால், மழையினாலேற்பட்ட ஈரலிப்பு, மண்ணைப் பதமாக்கி, விளைந்து குலுங்கும் நெல்லுக் கதிர்களின் மலர்ச்சி போலக் குதூகலத்தை காலையிலெழுந்து பார்த்ததும் தருகிறது. காலையில், பொழுது புலருகிற நேரம் பாயில் கிடந்து புரண்டு கொண்டிருக்கையில், சில் லென்று வந்த காற்றின் மென்மையான குளிர்ச்சி, கண் இமைகளுக்குள் நித்திரையை அள்ளிச் சொரிந்தது. அதனிலிருந்து லயிப்பால், கலைந்திருந்த கந்தல் சேலையை இழுத்து, உடல் பூராவும் அவன் போர்த்திக் கொள்கிறான்.

அப்போதுதான் அந்த கம்பீரமான நயம் செறிந்த அழைப்பு அவன் தந்தையிடமிருந்து வருகிறது.

“காலைக் கோழி கூவி எவ்வளவு நேரமாச்சி? இன்னும் படுக்கையே? சரி... சரி.... கிடந்தது போதும். எழும்பு......நிலம் பதமாகக் கிடக்குது........தேத் தண்ணியைக் குடிச்சிட்டுப் போனமெண்டால் ஒரு மூச்சிலை கொத்தி முடிஞ்சிடும்....... இண்டைக் குக்கொத்தாட்டில் பிழை.. பிறகு விடாமல் மழை கொட்டினாக் கொத்தேலமைப் போயிடும்........”

சோம்பல் கழியவில்லை.

கூதலும் பாயும் தரையின் குளிர்ச்சியும் எழும்பாதே என்கின்றன.

“பள்ளிக்கூடத்துக்கு நேரம் போயிடும்... அதான் யோசிக்கிறன், இப்ப நீங்க கொத்துங்கோவன்.... பினனேரம் நான் வந்து கொத்திறன்”

“பின்னேரம் மழை வந்தாலும் ஆர் கண்டது ? நீ இப்ப வந்து, கொஞ்சம் கொத்திப் போட்டுப் போவன். பிறகு எங்கட சின்னவியைக் கேட்டுப்பார்ப்பம். பதம் போயிட்டால் பின் ஒண்டுமே செய்ய இயலாது”

“நான் கெதியாய் போகோணும் ... கொஞ்ச நேரம் தான் நிண்டு கொத்துவன்....”

பன்னைப் பழக் கொப்பளங்கள், கைகளில் தெறித்தெழும்வரை மண்வெட்டியும் கையுமாக நிலத்தின் வயிற்றை ஹிம்சை செய்து கொண்டிருந்த பொழுது யாரோ பள்ளிக்கூடமில்லையோ என்று கேட்ட



படிப்பகம்

www.padippakam.com

கேள்வியில், கல்லூரி கண்களில் தெரிந்தது, இதோ - இப்போது - வயல் வரம்புகளைத்தாண்டிக் கல்லூரிக் கதவுகளுக்குமப்பால், அவன் தாவுகிறான். கல்லூரி அதிபருக்கு தெரியாமல் இனி, ஓடி மறைய வேண்டும். மூளை தறியடிக்கிறது. விழிகள், திருட்டு முழி முழிக்கின்றன.

சென்ற். போல்ஸ் கல்லூரிஅதிபர் மிகவும் பொல்லாதவர். சின்னையா போன்ற பயந்த, வியர்வை சொல்ல, கேட்டாத்தானே? இப்ப எனக்கு விழப்போகுது அடி... பள்ளிக்கூடம் போறநேரத்திலை, தோட்டத்துக்கு வர ஏலாதெண்டால் பெரிய தத்துவம் மட்டும் அவருக்குப் பேசத்தெரியும்... அவர், அவருடைய அப்பர், முப்பாட்டன் முழுப்பேரும் தோட்டம் தானாம் செய்தவை ..... அதோடை, தான், தோட்டவேலை செய்து பள்ளிகூடம் போய்வந்தவராம்......இவற்றை படிப்பு எனக்குத் தெரியாதே? அதுதான் அவர் நாலம்

## செ. கதிர்காமநாதன்

1960 களில் எழுத்துத் துறைக்கு வந்தவர். ஈழத்துப் படைப்பிலக்கியத்தில் மிகச் சிறந்த சிருஷ்டியாளனாக உருவாகிக் கொண்டிருக்கையில் அகால மரணம் அடைந்தவர். அந்த மரணம் நிகழ்ந்திராவிடில் தமிழிலே உன்னதத்தைத் தொட்டு பெருமையோடும் கம்பீரத் தோடும் அடையாளம் பதித்துக் கொண்டு இருந்திருப்பார்.

சமகால எழுத்துக்களை ஆர்வத்தோடு படித்து வந்தவர், பிறமொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளவேண்டுமென்ற ஆர்வம் இவரின் தனிச்சிறப்பு. குறிப்பாக முற்போக்கு இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் காட்டியவர். கிருஷ்ன்சந்தர் போன்றோரின் கதைகளை அருமையாக மொழி பெயர்த்தவர். அவரின் 'நான் சாகமாட்டேன்' நாவலை தமிழுக்குத் தந்தவர்.

இவரது அருமையான கதைகளின் தொகுப்பான 'கொட்டும் பனி' 1968ல் வெளியாயிற்று. இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. சிறப்பான படைப் பிலக்கியத்திற்கு உதாரணமான தொகுதி இது. இத்தோடு 'மூவர் கதைகள்' என்ற தொகுதியிலும் இவரின் கதைகள் இடம் பெற்றன.

இலக்கியத்தைப் பற்றி நிறையக் கனவுகளை இவர் கண்டார். இலங்கை நிர்வாக சேவையாளனாய் தெரிவாகி, வாழ்வில் வெளிச்சம் பரவத் தொடங்கியபோது கனதியான ஒரு சஞ்சிகையை வெளியிடுவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தார். விஷயங்கள், வடிவமைப்பு, கோட்டோ விடயங்கள் எல்லாம் தயாராக இருந்தன.

பேராசிரியர் கைலாசபதியின் பிரியமான நண்பர், மேன்மையான குணாதிசயம், நேசத்துக்குரியவரை எப்போதும் அணைத் திடுகின்ற சுபாவம், உள்ளும் புறமும் சீர்மை யான ஆளுமை.

வாழ்வில் பல தளங்களிலும் தோல்வி, துயரங்களை அனுபவித்து மனம் சாம்பிய போதிலும் அவரது எழுத்திலே ஆழ்ந்த நம்பிக்கை, உறுதி, மனமுதிர்ச்சி என்பன அடி நாதமாகத் தொனித்தன.

கலையும், இலக்கியமும் மக்களுக்காக என்ற கோட்பாட்டை தழுவிநிற்பவன் நான். என்று தன்னைப் பிரகடனம் செய்தவர் இவர்.

கரவெட்டியின் அழகிய இனிய மண்மணங் கமழ்வன இவரது கதைகள். 'ஒரு கிராமத்துப் பையன் கல்லுரிக்குச் செல்கிறான்' என்பதை தனது கதையே என்று சொல்கிறார் கதிர்காமநாதன்.

சிந்தும் அழுக்குத் தோற்றங்களைக் கண்டால், அவர் கல்லூரி ஒழுங்கு விதிகளை மீறுகிற 'சுரணையற்ற' ஜென்மங்கள் என அவருள் வேக்காடு தோன்றிவிடும். அற்ப காரணங்களை வைத்துக்கொண்டு, பிரம்பால் நொட்டிக் கொண்டிருப்பார்.

அது ஒரு வெள்ளைக்காரன் பாடசாலையாக இருக்கவேண்டுமென்ற அபிலாசையினால் சின்னையா போன்றவர்கள் அவரிடம் 'சிதறு தேங்காய்கள்.' "அப்பனாம் அப்பன்.... நான் அப்பவே, தோட்டத்துக்கு வந்தனெண்டால் நேரம்போயிடும் எனச்சொல்லச் வகுப்பும் படிக்கவில்லை. அவற்றை கெட்டித்தனமான பேச்சை நினைக்க, எனக்கு பத்திக்கொண்டு வருகுது.... என்ரை கஷ்டம் விளங்கினால்தானே?"

அவனைக்கண்டால், பொதுவாகவே கல்லூரி அதிபருக்கு ஆவதில்லை. ரௌத்ரம் பிறக்கும். தனது பாதி பழுத்த அணிஞ்சில் பழக் கண்களால் நெருப்புக் கொள்ளிகள் எரிவது போல, குற்றம் கடியும் மோப்பப பார்வையுடன் அவர் சுட்டெரிக்கும்போதெல்லாம், அவனுக்குத் தேகம் பதறும் : கோணும்: கவலை பொங்கும்: தன் மேலுள்ள கோபத்துக்கு காரணம் என்ன



படிப்பகம்

www.padippakam.com

என்பது, புரியாது உள்ளம் சாம்பும்........

கல்லூரி நுழைவாசலுக்கு அடுத்தாக, இருக்கும் அதிபர் காரியலயத்தை கடந்து, அப்பால் எட்டாம் வகுப்பறை வரை சென்றதும், அப்பாடா என்ற நிம்மதி, செருமக்கூட தைரியம் வருகின்றது: சிரிக்க முடிகிறது: நிதானமாக நடக்கலாம்...

இனி, அதோ - அந்தத் தண்ணீர்க் குழாய் இருக்குமிடத்தையும் தாண்டி, நூல் நிலையக் கட்டடத்ததையும் கடந்துவிட்டால் அவனது வகுப்பறை வந்து விடும்,

நேர சூசிக்கு தக்கபடி பாடநூல்களை கொண்டு வந்ததாக ஞாபகமில்லை. கொத்திய களைப்பு ஒருபக்கம்: கல்லூரி அவசரம் மறுபாக்கம். தோட்டத்தில் இருந்து வீட்டுக்கு ஓடிப்போனதுதான் அவனுக்கு தெரியும். கொடியில் கிடந்த கால் சட்டையைக், குவிந்து கிடந்த துணிகளுக்குளிலிருந்து இழுத்தது, இழுத்தவேகத்தில் கொடி அறுந்தது, கொடி அறுந்ததையும் அலட்சியப்படுத்திக்கொண்டு உடுப்பு அணிந்தது, அவசர அவசரமாக நாலுகால் பாய்ச்சலில் வீட்டைவிட்டுப் புறப்பட்டது, இவையனைத்தும் எப்படி நடந்து முடிந்தன என்பது அவனுக்கு தெரியாது: படபடப்பில் எல்லாம் நடந்தன. சாப்பாடு கூட இல்லாமல் நேற்றுப் பின்னேரம் போட்டது போட்டபடி கிடந்த புத்தங்களையும் கொப்பிகளையும் அள்ளிக்கொண்டு வந்திருக்கிறான்.

இன்றைக்குரிய நாள்...

ஓ.. நேற்றுத்தானே இருபத்தியேழாம் திகதி? இருபத்தேழு செவ்வாய், அப்படியானால் இன்றைக்குப் புதன்... புதன்...

புதன்கிழமை முதல் பாடம் ஆங்கிலம். படிப்பிப்பவர், அதிபர்.

என்ன மறதி? எட்டாம் வகுப்பைக் கடந்ததும் வந்த நிம்மதிக்கேன் இந்த அஸ்தமனம் ?

அதிபரின், வளைந்து, கிழிந்து, சிராய்ந்து தொங்கும் பிரம்பு தன்னை ருசியாமலிருக்க வேண்டுமென நொடிக்கு நொடி அவனது பிரார்த்தனைகள். திடுக்கிட்டு காற்சட்டை, மேலங்கியைப் பார்க்கிறான். வெள்ளையாகத்தான் இருக்கிறது. கொடியில் போட்டதால் சிறிது கசங்கல் அவ்வளவுதான்... அது கிடக்கட்டும். இன்றைக்குச் பாடமாக்கச் சொல்லி ஏதாவது பாட்டுச் சொல்லிவிட்டவாரா அதிபர்.. ?

அந்தப் பாட்டு ...கவிஞன் லோர்ட் பைரனுடைய ஒரு காதல் பாட்டு, படிப்பித்தவர். அது ... அது... பாடமாக்கி சொல்வது இன்றைக்கா? நாளைக்கு - வியாழக்கிழமை என்று தானே சொன்னவர் ? இன்றைக்கு கேட்கமாட்டார் இன்றைக்கு ஆங்கில இலக்கணம்: 'றென் அன்ட் மாட்டின்' எழுதிய இலக்கணப் புத்தகம் கொண்டு வரவில்லை ... அடி விழத்தான் போகுது'

பிரார்த்தனை இன்று பொய்யாய், கனவாய், இப்போ பழங்கதையாய் எரிச்சலில் முடிந்து விட்டது.

கையடங்கலும் பச்சைத் தழும்புகள்.

அடிகளை வாங்கிக்கொண்டு, அவன் வாங்கிலில் குந்துகையில் அவனைப் பரிதாபத்தோடு அருகிலிருந்த நண்பன் பார்க்கிறான். மெதுவாக அந்த நண்பன் முணுமுணுக்கிறான் ...

'டேய்.... உனக்கு தெரியாதோடா, இந்தச் சிடு மூஞ்சியின்ரை குணம்... ? ஏனோ தெரியவில்லை, உன்னையென்றால் எரிகிறார்: விழுகிறார்: ஏசுகின்றார் : அடிக்கிறார். இப்பதான்டா. நீ வரக்கு ஒரு நிமிஷம் முந்தி, உன்னைபோலதான் நேரம் பிந்தி உவன் சந்திரன் வந்தான் ... ஒரு வார்த்தை பேசவில்லை, ஏறிட்டுப் பார்த்துவிட்டு, மெல்லிய சிரிப்போடை - ' சரி பரவயில்லை போய் உட்காரு' என்று சொல்லுகிறார்... எனக்கு என்னமோ தெரியவில்லை, உன் மீது அவருக்கு நிறையக் கோபம்.... அதுக்குத் தக்கதாப் போலை, நீயும் "புத்தகமில்லை, கொப்பியில்லை, பாடம் படிக்கவில்லை, உடுப்பில்லை"- அப்படி இப்படியென்று ஏதோ ஒரு காரணத்துக்கு ஆளாகியிடு கிறாய்... சந்திரனைப்போல ஒரு 'டாக்குத்தர்' மகனாக நீயுமிருந்தா உனக்கு ஏன் அடிக்கப்போகிறார்... அவனைப் பார்த்து "நீங்கள்" என்று கதைக்கிறதுக்கும் உன்னை, என்னைப் பார்த்து "டா, புடா, நீ" என்று அவர் கதைக்கிறதுக்கும் ஏதோ ஒரு வித்தியாசம் அவர் மனதில் இருக்கிறாப்போலை படுகுது."

அவனுக்கு, பச்சைத் தழும்புகளை உறுத்துப் பார்க்கும் பொழுது கல்லூரியை விட்டோடிப் போய், அந்த நிமிடமே வீட்டிலே, இப்பொழுது ஒரு கோடிக்குள் ஈரவிறகுடன் எரியாமற் போராடிக் கொண்டிருக்கும் தாயின் மடியில் விழுந்து, கதறிப் புரண்டு அழ வேண்டும்போல, ஒவ்வொரு தழும்புகளாக அவள் தடவித் தடவி வாயால் ஊதி, தலைமை அதிபரைப் பிள்ளையில்லாப் பாவியென்று திட்டு வதை மனதாரக் கேட்டு ஆறுதலடைய வேண்டும் போல, அடக்க முடியாததொரு தாகம் அவனுள் எழுகிறது.

மறுகணம்.....

இந்த அழுகைக்கு, அவமானத்திற்கு, தொல்லை கட்கு அவளே காரணமெனத் தோன்றி: ஆசை தீர வாய் வலிக்கு மட்டும் - எத்தனை வீடுகட்குக் கேட்டாலும் சரி - அவளைப் பேசித் தீர்க்க வேண்டுமெனும் ஆவேசம் அவனுள் உந்துகிறது.

'வழியில்லாதவை எல்லாம், பிள்ளைகளை ஏன் பெற வேணும்? பெற்றுப்போட்டு, இப்படிக் சீரழிய விடுகிறதைக் காட்டிலும் பிறந்த வீட்டுக்கை நஞ்சு நசுக்காயைத் தந்து சாகடிச்சிருக்கலாம், பாரன்..... மூதேசியாட்டம், ஒண்டு இரண்டையே பெத்துது? எலிக்குஞ்சுகள் ஆறைப் பெத்து......'

திடீரென்று, சுருக்கங்கள் விழுந்த, சதா போராட்டங்களினால் களை இழந்த முகம், தண்ணீர்ப் பிரதிபிம்பமாக அவனுள் வந்து போகின்றது. கருநீலக் கண்களிலே ஒளி சிந்தும் நீர்த்துளிகள் குமிழிகளாய் உடைந்து வடியக் காத்திருக்கின்றன. பெற்றுவிட்ட ஒரேயொரு தோஷத்தால், தனது இரத்த வார்ப்பினது வயிற்றுக் கொதிப்பில் பிறக்கும் சொல்லம்புகள் அனைத்தும், ஒவ்வொரு நஞ்சு வில்லைகளாய் உடலிற் செறிய, நீரிலிருந்து வெளியேறிய மீனாகத் துடிக்கிறாள்.

"நான் உங்களைப் பிறக்கச் சொல்லிக் கேட்டனானே.... அது - அந்தப் பாழ்பட்ட கடவுள், இந்தப் பாவியின்ரை வயித்திலை உங்களைப் பிறக்கச் சொல்லி எழுதி வைச்சிட்டான்..... இல்லையெண்டா, புண்ணிய ஆத்துமாக்களின்ரை வயித்திலை பிறந்திருக்க மாட்டியளே ?"'

அவன், பனிநீராய் அருவமாய் தோன்றிய நினைவுகளில் உருகிப் போகின்றான். மனத்தில் தறி கட்டிய தாயின் மீதுள்ள ஆத்திரம், பச்சாத்தாபமாகக் கனிகிறது. பச்சைத் தழும்புகளின் வலியில் அணு அணுவாய் வேதனையைத் துய்க்கும் அவன், இன்றைக்குத் தனது தாயை, பெற்ற காரணம் கேட்டுச் சீறுவதில்லையென முடிவு செய்துகொள்கிறான்.

வகுப்பில் ஒரு நாளும் அவன் அழுததில்லை : அழ அவனுக்கு வெட்கம். கையை உதறி 'ஆ.. ஊ..



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் நாட்டிலே தலை வணங்காத எழுத்தாளர் என்றும், உள்ளதை உள்ளபடி சொல்பவர் என்றும் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமெனின் வல்லிக் கண்ணன் அவர்களைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் பிரபலமான எழுத்தாளர் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் எழுத்தாளர் கல்கி அவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இருவரும் ஒரேமுகமாக நல்ல கதைகளை எழுதுபவர் எனக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்தான் 'கசின்' என்ற மூன்றெழுத்துக்களால் குறிக்கப்படும் அன்பர் க.சிவகுருநாதன் அவர்கள்.

கனக. செந்திநாதன்

இல்லை சேர்' என்ற பிரலாபங்களைக் கூட அவன் மொழிந்ததில்லை. உணர்ச்சியற்ற ஜடமாட்டம் நீட்டிய கைகள் மடங்காமல், அத்தனை அடிகளையும் தாங்கி, அசமந்து, நானென்ற கர்வம் போல் அவன் காட்சியளிப்பான். அதுவே அதிபருக்கு ஆத்திரத்தை மேலும் தூண்டுகிறது.

அடிகள்...

உதைகள்..........

ஏச்சுக்கள்.......

''போடா, போய் தரவையிலை மாட்டுச் சாணாம் அள்ளு, போ.. போ.... உனக்கேன் படிப்பு? இங்கை வந்து, வாங்கிலை மினைக்கெடுக்காதை.... போ...''

அடிகள், உதைகள், ஏச்சுக்கள், அவனை நிர்த்தாட்சணையாய்த் தாக்கி... ஓ.. ஓ..! அவன் உள்ளதில் அழுகை நீர்ப்பிரவாகமாக முட்டி மோதி, அவனுள் விளைவிக்கும் உணர்ச்சிப் பிழம்புகளை யாருக்குத் தெரியும் ?

"சின்னையா...... இங்கே கிட்டவா. ஏன் லேற்? டேய் உன்னைத்தான். ஏன் பேசாமல் மசுங்குகிறாய்? நானுனக்கு என்ன சொல்லியிருக்கிறன்? ஒரு நாள், இரண்டு நாள், நீ 'லேற்'றாக வில்லை.... ஒவ்வொரு நாளும் 'லேற்' தான். அதுமட்டுமா? ஏன்ரா.. ஆடு திருடின கள்ளன் மாதிரி முழிக்கிறாய்..? ஊத்தை உடுப்புப் போட்டுப் பள்ளிக்கூடம் வராதையென்று எத்தனை தடவை சொல்லியிருப்பேன்?"

பதில் சொல்ல முடியவில்லை. மொழி வழங்காமற் போகுமளவுக்கு நாக்கு நடுங்குகிறது.

வேண்டிய மட்டும் அவர் அவனை மட்டரகமாகப் பேசிப்போட்டுப் போகட்டும் : பரவாயில்லை. வளைந்த பிரம்பால் மட்டும், அவனை ருசிக்கக்கூடாதென அவனுள், கோடி கோடி உச்சரிப்புக்கள்...

''டேய் வரமாட்டியா... உம்... கிட்ட... என்னால் இனியும் உன்னோடு மாரடிக்க ஏலாது.. பிடிச்சனெண்டால் தோல் உரிச்சுப் போடுவன்...''

பதுங்கிப் பதுங்கி, தயங்கித் தயங்கி, அவன் ஒவ்வொரு அடிகளையும் பெயர்த்து, ஒவ்வொரு வாங்கில்களையும் கடந்து, முன்னுக்கு - மேஜையடிக்கு - வருவதற்கிடையில், நேற்றைய இறந்த சம்பவங்கள் அவனது தாயின் கண்ணீரைப் போலவே அவனுள் பொல பொலக்கின்றன. நேற்று, உடுப்புத் தோய்க்க தாயிடம் அவன் சவற்காரத்துக்குப் பணம் கேட்டிருந்தான் : கிடைக்கவில்லை.

இப்பொழுது, கையில் விழப்போகும் வலிவு மிக்க ஒவ்வொரு அடிகளும் தந்தைமேல், தாயின்மேல், சகோதரங்கள் மேல் - எல்லாவற்றுக்கும் மேலாகக் கடவுளென வர்ணிக்கிறார்களே, அந்த ஒரு பண்டத்தின்மேல்- விழ வேண்டிய அடிகளென வெஞ்சினப் பகைமையை ஊட்டுகின்றன.

''சீ... உதென்ன உடுப்பு.. உனக்கேன் படிப்பு... தரவையிலை சாணி அள்ளப் போவன்....''

''.....................''

"நான் என்ன சொல்லுகிறன்? நீ உன்ரை பாடு, நீட்டடா கை...''

அவனுக்கும் அவனது தோற்றம் அலங்கோலமென்று தெரியத்தான் செய்கிறது. இருந்தும் இன்றைக்கு கல்லூரிக்கு அவன் வரவேண்டும் என்றால் அந்த உடுப்பிலே தான் அவன் வரவேண்டியுமிருக்கிறது. அவனையறியாமலே அவன் தன்னைப் பார்த்துக் கொள்கிறான். நன்றாக, விழித்து தனது உடையின் அலங்கோலத்தைக் காணக் காண, அவன் கடைசியாகப் புதுச் சட்டை தைப்பித்த காலம் படமாகத் தெரிகிறது.

அது ஒரு சித்'திரை வருஷப் பிறப்பு...

சின்னையாவுக்கு அவன் வளர்த்த ஆட்டுக்கிடாய் விற்ற பணம் செலவிடப்படுகிறது. அந்த சம்பவம் நடந்து ஒரு வருஷத்துக்கு மேலாகி, இன்று சருகாகியும் விட்டது. அதிலிருந்து இன்று வரை, ஏதாவது ஒரு நாள் ஒரு சேட், காற்சட்டை எடுக்க வசதி வரவேயில்லை. ஓரிரு சந்தர்ப்பங்களில் அவன் தாயிடம், தனக்குப் புது உடுப்புத் தேவையெனக்கு கூறிப்பார்த்தான். 'பாப்போமே' என்ற பதில் கிடைத்தது. நெடுக இப்படித்தான், 'பார்ப்போமே' என்று பதில் கிடைக்கும்.

அவனும் கேட்பதை நிறுத்திக்கொள்கிறான்.

இருக்கும் ஓரிரு உடுப்புகளுடன் வாழ்க்கைச் சிக்கனத்தை அவன் பயின்று வருவது, அவனை ஒரு குடும்பச் சுமை நிறைந்தவன் போலாக்குகிறது.

அது அதிபருக்கு விளங்க வேண்டுமா, என்ன?

அதிபரிடம் கையை நீட்டி அடிவாங்க இஷ்டம் இல்லை. கை ஏய்க்காட்டுகிறது. ஏய்க்காட்ட, ஏய்க்காட்ட அடிகள் உக்கிரமமாகின்றன. காலையில் நிலத்தைக் கொத்தி கைகளில் உண்டான, பன்னைப்பழக் கொப்பளங்களில் ஒன்று உடைந்து அதனிலிருந்து உவர்ப்பான சிறு நீர்த் துளிகள் சிதற மனம் பதறிப் பதறி ஓலமிடுகிறது.

'ஏன் பிறந்தேன்? ஏன் பிறந்தேன்?'

'அந்தத் தலைமை வாத்தியார் காற்சட்டை, சேர்ட்டு ஊத்தையாயிருக்கெண்டு உசிரெடுத்துப் போடுவான். ஒரு நாளே... இரண்டு நாளே.... என்ரை அம்மாவெல்லே, இனியும் என்னாலை தாங்கேலாது, மற்றப் பிள்ளைகளுக்கு முன்னாலை - வகுப்பிலை, அவையளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க நான் அடி


படிப்பகம்

www.padippakam.com

வாங்கிறது உனக்கு விருப்பமோ சொல்லன்...... காது கன்னம் பாராமல் அந்தக் கொதிகுடலன், அடிக்கப் பிடிச்சானெண்டால் உலையிலை பிறகு அரிசி போடத் தேவையில்லை. கொண்டு போட்டு விட்டுடுவான்...ஒரு 'சன்லைற்' றாவது வாங்கித் தாவன்... தோய்ப்பம்..'

அவளுக்கு மகனைப் பார்க்கவே வெட்கமாய், அவனது ஒவ்வொரு சொற்களும் அவள் இதயத்தைப் பிடுங்கி பிடுங்கிய இடத்தில் வடியும் செங்குருதி அனைத்தையும் வெளியேற்றுகிறது போல - மயக்கம் வருகிறது. அவள் ஒன்றும் சொல்ல இயலாதவளாய், காதிலே விழுந்தது போலக் காட்டிக் கொள்ளாதவளாய், ஸ்தம்பிப்பிக்கிறாள்.

"ஏன்னணை... நான் சொல்லுறன்.... நீ பேசாமல் இருக்கிறாய்....? இந்த ஊத்தை உடுப்போடை நான் என்னெண்டு பள்ளிக்கூடம் போவான்... நீ நம்பாட்டில்...... கொடியிலை இருந்து உடுப்பை எடுத்துக் கொண்டந்து காட்டட்டே.. சரியான ஊத்தையாப் போச்சு... அதைத் தோய்க்கப் போறன்"

அவன் கிட்ட வந்து, அவள் மோவாயைத் திருப்பி, தன் முகத்தருகே அவள் முகத்தை நிறுத்திக் கொஞ்சுகிறான்.

"என்னணை.... ஒரு சன்லையிற் சோப்பாவது வாங்கித் தரமாட்டியே? பொழுது படக்குமுந்தித் தோய்ச்சுப் போட்டன் எண்டால், ஆட்டுக்குக் குழையும் வெட்டிப் போட்டுட்டு நான் படிக்கலாம் ... சோதனையும் கெதியா வரப்பொகுது..."

அவளது மௌனத்துக்குள்ளே அடித்து வைத்த உணர்ச்சிகளெல்லாம் வெளியில் ஒரு நதியின் அமைதி. உள்ளே பயங்கரச் சுழிகள் நிறைந்த நதியின் வேகமான சுழல். கடலலைகளின் மோசமான கொந்தளிப்பு.

"கடைசியாகக் கேட்கிறன். ஒரு சவுக்காரம் வாங்கித் தரமாட்டியே... உடுப்பெல்லாம் நாற்றம் அடிக்குது... தோய்க்க வேணும்..."

அவள் சேலைத் தலைப்பை அவிழ்க்கிறாள். சேலைத் தலைப்பிற்றான் கை காவலாக அவள் பணத்தை முடிந்திருப்பாள்.

அவிழ்த்த சேலைத் தலைப்பினை வெறுமை தவழப் பார்க்கும் பொழுது, உலகமடங்கிலும் வானத்தில் அழுது வடியும் முகில் கறுப்புகள் திரண்டு, அவள் முகத்திலே ஒட்டிக் கொள்கின்றன. சிரிக்கிறாள். சிரிப்பது போன்ற அழுகை கலந்த ஜீவ ஓட்டமற்ற சிரிப்பு அது. பல்லைத்திறந்து வேதனையுடன் அனுங்குவதனைத்தும் சிரிப்பென்றும் கதையென்றும் பொருள் கற்பித்துவிட முடிகின்றதா என்ன?

"இங்கை கிட்டவா.... தம்பி வாவன்...."

அவள், அவனது சுருண்ட சுருள் சுருளான கேசத்தை இதமாகத் தடவிக் கொடுக்கிறாள். அவள் செய்த ஒரு குற்றத்துக்குக் கேட்கும் மன்னிப்புப் போல, வாஞ்சை தவழ்கிறது. சமாதான சமரஸம் தெரிந்தவள் அவள்.

"என்ரை குஞ்சலலே... என்ரை ராசா... நாளைப் பாட்டுக்குப் போ... சத்தியமா நாளைக்கு வேண்டி வைக்கிறன். ஒரே ஒரு நாள்ப் பொழுதுதானே... வேணுமெண்டாப் பார்... என்னெட்டை இருக்கிறதே ஐந்து சதம்தான்."

கோதிய தலைமயிரை அவுக்கென விடுவித்துக்கொண்டே, மன்னாரைத் தாக்கும் புயலாக எழுகிறான்.

"எப்பதான் நீ, புறக்கணம் பாடமல் விடுவாய்... எப்ப உன்ரை தரித்திர மூஞ்சி விடியப்போகுது"

கொதி நீர் படுகிறது. படட்டுமே.

கொதிநீரை ஆறவைக்கும் இதமான சொற்கள் அவளிடம் இருக்கின்றன.

"நீ கூட உணராவிட்டால் நான் என்னடா செய்வன்? பக்கத்து வீட்டு செல்லத்தட்டை ஒரு இருபத்தைஞ்சு சதம் கடன் வேண்டி இப்பதான் தங்கச்சியை விட்டு மண்ணெண்ணெய் வாங்குவிச்சனான். கொஞ்சம் முந்தி சொல்லியிருந்தா விளக்கு எரியாட்டிலும் பரவாயில்லையெண்டு தந்திருப்பன். இனி, ஆரட்டை நான் கடனுக்குப் போறது? அவள் செல்லம் கூட முதலிலை, பிள்ளையாணைக் காசில்லையெண்டு சொல்லிப் போட்டாள். என்ரை முகம் போன போக்கைப் பார்த்து அவளின்ரை தாய் மனுஷி, தன்னெட்டை ஒரு இருபத்தைஞ்சு சதம் இருக்குதெண்டு அவளுக்கு சொல்லிச்சுது... நாளைக்கு எப்படியும் வாங்கித்தாறன்."

"சத்தியமா"

"சத்தியம்"

"நீ சொல்றதை நான் நம்பமாட்டன்... நாளைக்கும் இப்படிச் சொல்லுவாய்..."

"நான் ஏன் பொய் சொல்லுறன்... இருந்து பாரன்..."

அவளின் சத்தியத்தின் நம்பிக்கையில் ஒருநாள் உடுப்புத் தோய்க்காததால் ஒன்றும் குடிமுழுகாது எனும் மனத்தேற்றம் அவனைக் கல்லூரிக்கு வர அனுமதித்திருக்கிறது.

"இண்டைக்காவது, எப்பிடியாவது, சவுக்காரம் வாங்கித் தோய்ச்சுப்போட வேணும். இப்படி, இனியும் அடிவாங்கிக் கட்டாது. மற்றவங்கள் எல்லாம் பார்த்து சிரிக்கிறாங்கள்... அவங்களுக்கென்ன - ஆக - பல்லை இளிக்கத்தான் தெரியும். அவனவன்ரை கஷ்டம் அவனவனுக்கு.... உம்..... இனியும் அடிவாங்காமை நான் நடக்க வேணும்..."

மாலையில் கல்லூரியால் வந்ததும் ஆட்டுக்கு குழை தேடுவது சின்னையாவுக்கோர்அன்றாடப் பிரச்சினை...

முற்றத்திலிருந்த பூவரச மரங்களில் கொதிக்கும் இந்தப் பாலை வெய்யிலுக்கிடையே எப்படித்தான் குழையை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடிகிறது? அள்ள அள்ளக் குறைவது தெரியாத, கடல் நீரா இம்மரங்கள்?

கொக்கத்தடியும் ஆளுமாகத் தொலை தூரத்திலிருந்த காணிக்குச் சென்று உச்சாரமான வேம்பில் அணிலைப் போல ஏறித் தொத்தி, குழை வெட்டிச் சரித்தாயிற்று...

யாழ்ப்பாணத்திலென்றும் ஓரளவு பசுமை குன்றாது இருக்கும் வேப்பமரம் வரப்பிரசாதமேதான். இல்லையென்றால் சின்னையாவின் நாலு ஆடுகளும் சிவராத்திரி முழித்துக் கதறிக் கத்திவிடும். ஆட்டுக் கட்டையைக் கூட்டி, அங்கிருந்த, முதல்நாள் குதறித் துப்பிய இலை தழைகளை யெல்லாம் பெட்டியில் அள்ளிக் கொண்டுபோய் குப்பையில் கொட்டும் சின்னையாவிற்கு தலை நிமிர, இரவும் வந்து நேரம் சரியாகிறது.

"இனி... நான் படிக்கப் போறன். படிக்க இருந்தனெண்டால், என்னை இடையிலை எழுப்பி, அங்கை போ இங்கை போ எண்டு ஆரும் குழப்பக்கூடாது... குழப்பினா பொல்லாத சண்டைதான் வரும்..."

சின்னையா படிக்கலாமெனப் புத்தகங்களை விரிக்கிறான். சன்லையிற் பெட்டியொன்றின் மேல் அவனது புத்தகங்கள். அவன் படிக்கும் மேஜை இந்த சன்லையிற் பெட்டிதான். எட்டாம் வகுப்பும் கடந்து, தொழில் தேடலாம் எனும் நம்பிக்கைக்குப் பாத்திரமான சீனியரும் வந்துவிட்டது. ஒருநாள் பார்த்து மேஜையிலிருந்து படித்ததாக ஞாபகம் இல்லை.

லாந்தர் காற்றில் 'பக்பக்' என்கிறது.....



படிப்பகம்

www.padippakam.com

மெல்லிய இருள் கலந்த ஒளியின் அனுங்கிய உமிழலில் சின்னையா படிக்கிறான்.

"அவன் கொஞ்சக் காலம் மட்டும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தான்... அப்பொழுது அந்த பள்ளி மாணவர்கள் அவனை எச்சில் பொறுக்கி யென்றும், ஊதாரிப்பயல் என்றும், அழுக்குக் குழியென்றும் துவேஷிப்பார்கள்... நிந்திப்பார்கள்... ஆசிரியர்களைப் பற்றியோ ஒன்றுமே சொல்லத்தேவையில்லை அவர்கள் மற்ற மாணவர்களிலிருந்து விலக்கி, ஏதோவொரு அருவருக்கத்தக்க ஜீவன் போல வெறுப்போடு கணித்தார்கள்.. இவையெல்லாம் சேர்ந்து அவனைப் படிக்கவிடவில்லை. அவன் வாழுகின்ற அந்தச் சேரியில் எந்த நேரமும் குடிகாரர்கள் கும்மாளமிட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரே இரைச்சல். ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி ஆபாசமாக, மிக ஆபாசமாக திட்டிக் கொண்டிருப்பார்கள்....."

சிறிது நேரம் புத்தகத்தைப் பார்த்தவாறே ஆழ்ந்த யோசனையில் ஒன்றிப் போகின்றான்.

பக்கென விளக்கு அணைகிறது. அவன் எழுந்து, உள்ளே, தலையைக் குனிந்தவாறு போகிறான். தலை நிமிர்ந்தால், வீட்டுக்கூரை இடித்துவிடும். பல தடவைகள் அசட்டையாக அவன் இடி வாங்கியிருக்கிறான். உள்ளே எரிந்து கொண்டிருந்த போத்தல் விளக்கை பவுத்திரமாக ஏந்தி அதன் சிறிய சுடர் அணையாவண்ணம் விரல்களி னால் மதிலமைத்து மெதுவாக ஊர்ந்து வருகிறான்.

வெளியே காற்றுப் பலமாக வீசுகிறது, வாடைக் குளிர்.

ஒரு சுழல் வந்தால் போதும்: இந்தச் சுடரும் அணைந்துவிடும்.

மீண்டும் லாந்தரில் ஒளி ஏற்றப்படுகிறது. பக்பக் சேஷ்டையைக் காணோம்.

துடைத்தாலும், தண்ணீரிற் கழுவினாலும் படிந்துள்ள கறுப்பு நீங்காத கறை மண்டிய லாந்தர். சிம்னி உடைந்து கோடு குறுக்கும் நெடுக்குமாக ஓடுகிறது. கொஞ்சக் காலம், நின்று நிலைக்கும் பவுத்திரத்தில் கடதாசி ஒட்டல்கள் போடப்பட்டுள்ளன...

ஒரு சுழல் காற்றொன்று அந்தத் திண்ணை யெங்கும் ஊடுருவி உடலைச் சிலிர்த்துச் செல்கிறது. லாந்தர் பக்பக்கென்ற சப்தத்தை ஒலி மீட்கிறது.

அங்கால், மிகு அண்மையில் அவனது சகோதரங்க ளின் கேலியும், கும்மாளமும், சிரிப்பும்...

'எனக்கு இப்ப வாற ஆத்திரத்துக்கு... எளிய பலயரங்கள்... போய் நாலு அடி குடுத்தனெண்டால் தான் எனக்கு நிம்மதி வரும்... பின்னை என்ன? ஒரு மனுஷன் நிம்மதியாப் படிக்கேலாது. நாளைக்கு.. என்னண்டு முழுப் பாட்டையும் பாடமாக்கிச் சொல்லப் போறன்... ஒவ்வொரு நாளும் அடி வேண்டுறதைவிட பள்ளிக்கு போகாமலே நிண்டு விடுறது நல்லது...'

"உடைஞ்ச சிம்னியிலை எத்தனை நாளைக்கென்று படிக்கிறது? காத்து வந்து சுற்றிச் சுற்றி அணைச்சுப் போடுது...ம்... எத்தனை நாள் சொல்லியிட்டன்... வாங்கக் காசு தந்தாத்தானே? பத்தாததுக்குப் பலயரங்களின் தொல்லையும் பொறுக்கேலாதாம்."

"ஏன்ரா புறுபுறுக்கிறாய்? அதுகள் கொஞ்ச நேரத்தாலை படுத்திடுங்கள், நீ நிம்மதியாப் படியன்."

அருகிலெ சேலையைப் பாதி அவிழ்த்து விரித்து, அதில் படுத்திருக்கும் தாயின் குறிப்புரை முடிகிறது.

ஆடுகள் திடீரென்று அலறுகின்றன.

இவன் அசையவில்லை.

படிக்கிறான்...

நெடுநேரமாக ஊர் சுற்றிய அசதியுடன் புகையிலை யைச் சுருட்டாகச் சுற்றிக் கொண்டே வந்து சேருகிறார் தகப்பன்.

அந்தத் தருணம், பக்கத்து வீட்டுப் பாதி கிழம் மகாபாரதத்தை மூடி வைத்துவிட்டு வந்து திண்ணையில் உட்காருகிறது.

"அவன் வெள்ளைக்காறன் இருக்கயிக்கை எல்லோ தம்பி எங்கடை இலங்கை இலங்கையாயிருந்தது. இப்ப சீலை ஒண்டும் வரக்கூடாது எண்டுட்டானாமே? உண்ணாணக் கேட்கிறன். இவங்களெட்டை என்ன சீலையள் இருக்கு? அந்த நாளையிலே பத்துச் சதத்துக்கு அரிசி வாங்கலாம்...."

"அதுதானே... இந்தாவன் ஒரு சுருட்டுக் குடியன்....."

இலங்கை, உலகம், வெள்ளைக்காரன் புகழ், எல்லா விமர்சனங்களும் இனி விடிய விடிய நடக்கும். அரசியல் மேதாவிலாசங்களின் வார்ப்புகள் சந்தித்த பொழுது இனி... நேரம்.....?

'ம்.... இண்டைக்கு படிச்சது போலத்தான்... காதுக்கை கை இரண்டையும் வைச்சுக் கொண்டு பெலத்து சத்தம் போட்டுப் படிக்கட்டோ? இரவு இரவா ஊர் உலாத்துகிறது பத்தாது எண்டு.... வீட்டிலும் வந்து கதையே? உவன் கிழவனுக்கு நாளைக்கு நல்ல தகடு குடுக்கவேணும்... தன்னைவிடப் பெரிய அறிவாளி இல்லையெண்ட எண்ணத்திலை விழல் கதையள் வந்து கதைச்சுக் கொண்டு இருக்கிறார். குடுக்கிற குடுவையிலை வீட்டுப்பக்கம் வராமைச் செய்யிறனோ இல்லையோ பாரப்பம்...'

அவன் புத்தகத்தை மூடுகிறான்.

நித்திரை வருகிறது.......

ஆகா.....! என்ன சுகம்.

(1965)


## தமிழ்ப் பதிப்பில் இன்னொரு புதுமை

ஈழத்தில் பிறந்து இங்கிலாந்தில் பாரிஸ்டர் ஆகி இலக்கியத்தை நேசித்து சர்வதேச ரீதியாகப் படைப்பாளியாக அறியப்பட்டவர் அழகு சுப்ரமணியம். அவரது எழுத்தைத் தமிழிலே மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டவர் எழுத்தாளர் ராஜ ஸ்ரீகாந்தன். 'நீதிபதியின் மகன்' என்ற அந்த நூலின் இரண்டாவது பதிப்பு, இப்போது சர்வதேசப் பதிப்பாக மிக அழகிய வடிவமைப்போடு வெளியாகியுள்ளது. தமிழில் சர்வதேசப் பதிப்பாக வெளிவந்த முதல் தமிழ்ப் பதிப்பு 'நீதிபதியின் மகன்' தான். 'கிறிப்ஸ்' பதிப்பகத்தையும் ராஜ ஸ்ரீகாந்தனையும் இதற்காகப் பாராட்டலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# பூவும் நடக்குது.. பிஞ்சும் நடக்குது...

கவிஞர் புதுவை இரத்தினதுரை.

பூவும் நடக்குது
பிஞ்சும் நடக்குது
போகும் இடம் தெரியாமல்

இங்கு சாகும் வயதினில்
வேரும் நடக்குது
தங்கும் இடம் தெரியாமல்

கூடு கலைந்திட்ட குருவிகள்
இடம் மாறி நடக்கின்ற அருவிகள்

பூவும் நடக்குது
பிஞ்சும் நடக்குது
போகும் இடம் தெரியாமல்.





பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (B.B.C.) தனது எழுபதாண்டு நிறைவினை ஒட்டி சர்வதேசரீதியாக இணையத் தளத்தின் ஊடாகச் சிறந்த பாடலைத் தெரிவு செய்வதற்கான போட்டி ஒன்றினை நடத்தியது.

இதில் 1,60000 விருப்பு வாக்குகளைப் பெற்று கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவும் நடக்குது' பாடல் நான்காம் இடத்தினைப் பெற்றிருக்கிறது.

முதலாம் இடத்தினை அல்ஜீரிய விடுதலைப் பாடல், இரண்டாம் இடத்தினை இந்தியாவின் 'வந்தே மாதரம்', மூன்றாம் இடத்தினை பாகிஸ்தான் விடுதலைப் பாடல் என்பன பெற்றுள்ளன.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட 'முகம்' திரைப் படத்திலே இந்தப் பாடல் இடம் பெற்றுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# நெருப்பும் நீரும்



ஜெயந்த சந்திரசிறீ

Shantha k. Herrath

அண்மையில் வெளிவந்து, சர்வதேச திரைப்பட விழாக்கள் பலவற்றிலும் திரையிடப்பட்டு பேசப்பட்டுக் கொண்டிருக்கிற சிங்களத் திரைப் படம் 'அக்கினி தாகயோ' தமிழில் 'நெருப்பும் நீரும்'. இந்தப் படத்தின் திரைக்கதை உரையாடல் எழுதி தயாரித்து இயக்கியிருப்பவர் ஜெயந்த சந்திரசிறீ.

பத்திரிகையாளரான ஜெயந்த சந்திரசிறீயின் முதற்படம் இது. நாடகம், தொலைக்காட்சித் துறைகளில் மிகப் பங்களிப்புச் செய்து விருதுக ளைப் பெற்றவர், சிறந்த நடிகரும்.

1976 இலிருந்து இன்றுவரை ஐந்து மேடை நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து இயக்கியவர்.

'மோரா' நாடகம், 7 துறைகளுக்கான சிறந்த தேசிய விருதுகளைப் பெற்று சாதனைகளை நிலைநாட்டியது.

இந்த வளமான பின்னணியோடு 'அக்கினி தாகயோ' வை உருவாக்கிய ஜெயந்த சந்தரசிறீ, தனது முதல்படத்தின் மூலமே சர்வதேச திரை யுலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளார். இதை ஒரு பாய்ச்சலாகவே கொள்ள வேண்டும். 'அக்கினி தாகயோ' கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கனின் ஆட்சிக் காலமான 1664ஐ பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட படம். பதினெட்டாம் நுற்றாண்டின் மக்கள் வாழ்வு, குணாம்சம், உணர்வு என்பவற்றை கவித்துவமும் யதார்த்தமும் செறிய சிறந்த கால ஆக்கமாக ஜெயந்த சந்திரசிறீ உருவாக்கி யுள்ளார். பார்வையாளர்களை கதை நிகழும் இடத்திற்கும், காலத்திற்கும், களத்திற்கும் நுட்பமாக அழைத்துச் சென்று விடுகிறார் ஜெயந்த சந்திரசிறீ.

திரைப்படத் துறையின் அடிப்படைக் காரணங் களில் ஒன்றும் முதன்மையானதும் இயக்குனர், சிறந்த தொழில் நுட்ப இயலாளர்களையும், கலைஞர்களையும் தனது வழிநடத்தலில் கூட்டாக இயங்கவைப்பது ஆகும்.

நீண்டகாலத் திரைப்பட விமர்சன எழுத்தாளராயிருந்த சந்திரசிறீ படத்துறையில் தரமாக உள்ளவர் களைத் தன்னோடு இணைத்து, இத்திரைப்படத்தை ஒரு காவிய மாக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்.

'அக்னிதாகயோ'வில் யசோதா விமலதர்ம, ஜக்சன் அந்தனி,

www.padippakam.com

கமால் அத்தரஆராச்சி, புத்ததாச விதானாராச்சி, சனெத் குணத்திலக, காமினி ஜயலத் ஆகியோர் நடித்துள்ளனர். இதன் இசையினை பிரேமசிறி ஹேமதாசா மிகச் சிறப்பாக அமைத்துள்ளார். ஒளிப்பதிவாளர், நுவான் கொஸ்த்தா.

நடிப்பில் மிக இயற்கையான மனிதரை, அப்பாத்திரங்களாகவே கண்டு கொள்ள முடிகிறது.


சிறப்பான ஒளி நுணுக்கம் படத்தின் இன்னொரு தனிச் சிறப்பு. அந்தக் காலத்தை அப்படியே கொண்டு வரும் தேர்ந்த நுணுக்கம்.

சிங்களப்பட உலக வரலாற்றில் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ், சுமித்ரா பீரிஸ், ஸ்ரீ குணசிங்கா, தர்மசறீ பண்டாரநாயக்கா, காமினிபொன்சேகா, சுனில் ஆரியரட்ண, பிரசன்ன விதானகே போன்றோர் புதிய தளங்களையும் தடங்களையும் தொட்டவர்கள், இவ்வரிசையில் மேலும் திறமையுடன் அறிமுகமாகியிருப்பவர் சந்திரசிறீ.

சர்வதேச திரைப் படங்களைப் பார்ப்பது இவரின் பிரியம். நமது திரைப்படங்களை அறிய விரும்பும் இவருக்கு தமிழகப் படங்களின் பரிச்சயம் உண்டு, 'நிதர்சனம்' படங்களை அறிமுகம் செய்துள்ளேன், வியக்கிறார்.

'புதுமை' வாசகர்கள் இனிவரும் இதழில் இவரின் 'நேர்காணலை' படிக்கலாம்.

செ.யோ.



www.padippakam.com

# கள்ளப்பொருள்

யோ. சத்யன்

ருஷ்ய மொழிக்கதை
மூலம்: நோவோகோஷ் ப்ரிபொயீ

தமீத்ரி ருஷ்யாவின் ஒரு நகரத்தில் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு புரட்சி வீரன். அவனுடைய நண்பன் கைதாகிவிட்டான். பொலீஸ் இவனையும் தேடிக் கொண்டிருந்தது. அவர்களின் பார்வையிலிருந்து தப்புவதற்காக ஒரு சிறிய சாப்பாட்டுக் கடையில் இரண்டு மணி நேரம் அவன் உட்கார்ந்திருந்தான். அவனுக்குள் ஒரு யோசனை: கையில் ஆறு ரூபிள் தான் மிச்சம்... மேற்கொண்டு என்ன செய்வது?

அப்போது, அருகில் இருந்த மேசையில் இரண்டு பேர் வந்து உட்கார்ந்தார்கள். அவர்களின் பேச்சிலிருந்து, தமீத்ரிக்கு அவர்கள் மாலுமிகள் என்பதும், கப்பலின் உலையில் கரி எரிய விடுபவர்களாக வேலை செய்பவர்கள் என்பதும் புரியத் தொடங்கிற்று.

அவர்களின் கப்பல் அப்போது லண்டன் போய்க் கொண்டிருந்தது. தமீத்ரி மனத்துக்குள் முணு முணுத்தான். 'இவர்களிடம் போய், நாம் ஏன் பேச்சுக் கொடுக்கக் கூடாது? என்னையும் லண்டனுக்கு அழை த்துச் செல்லுமாறு ஏன் கேட்கக் கூடாது? அங்கு போய் விட்டால், நாம் சுதந்திரமாகப் பறந்து திரியலாமே.....!'

தமீத்ரி எழுந்து அவர்களது மேஜையின் எதிரே போய் அமர்ந்தான். மாலுமிகளின் பேச்சில் பங்கு எடுத்துக் கொண்டான்.

"நீங்கள் யார்....? ஏதாவது கப்பலில் வேலை செய்கிறீர்களா, என்ன...?"

"ஆம்... நீங்களுமா?" என்றான் அவர்களில் ஒருவன்.

"நான், கடற்படையில் ஏழு வருடம் உலையடியில் வேலை பார்த்தேன்..."

"உன்னைச் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி. என் பெயர், "த்ரோஃபிமோஃப்". இது க்ரீ..."

இருவரும் தம்மை அறிமுகம் செய்து கொண்டனர்.

"என் பெயர் தமீத்ரி... உங்களால் பயணி எவரையும் கப்பலில் கூட அழைத்துப்போக முடியுமா?"

"நீ ? ஏதாவது ஆபத்தில் இருக்கிறாயா?"

த்ரோஃபிமோஃப் தமீத்ரி கேட்டதைப் புரிந்து கொண்டுவிட்டான்.

"ஆம்...!" என்றான் தமீத்ரி: "மெல்லப் பேசுங்கள்..."

"என்ன அரசியல் குற்றவாளியா? ஏதேனும் பெரிய பிரச்சனையோ?...

"ஆம் நான் தூக்கில் இடப்படலாம்..."

த்ரோஃபிமோஃப் அவனை இரக்கத்துடன் பார்க்கத் தொடங்கினான். கொஞ்ச நேரம் யோசித்தான். "நீ என்ன கள்ளப் பொருளாகச் செல்லத் தயாரா?"

அவன் சொன்னது தமீத்ரிக்குப் புரியவில்லை.

"அப்படியென்றால்?"

"ஒளிந்து பயணம் செய்பவர். அதாவது, நீ கப்பலில் ஏதாவது ஒரு மூலையில் மறைந்து உடன் வரத் தயாராக இருக்கிறாயா?"

"சரி....." தமீத்ரியின் விருப்பம் தெரிந்தது.

"அப்படியானால், இரவு எட்டு மணி கிட்டத்தட்டக் கப்பலுக்குள் நுழைந்து விடு... மூன்று 'ரூபிள்' பணம், ஒரு "வோத்கா' மற்றும் உப்பிட்ட மீன் கூடவே எடுத்துக் கொண்டு வந்து விடு..."

தமீத்ரி, "சரி"என்றான்.

அதற்குள் க்ரீ, "நண்பனே...! ஷியோர்ோவ்'க்கு என்ன ஆவது....?"

"அடே.... அவனைப் பற்றி நீ கவலைப்படாதே...!"

உடனே தமீத்ரி, "யேர்ஷோவ் யார்....?" என்றான்.

"அவன் எங்களோடு கோயலா கரி உடைப்பவன். காப்டனின் முழு விசுவாசமான உளவாளி. கப்டனும் இரக்கம் அற்றவன்தான். எவரையும் மயானத்துக்கு அனுப்புவது அவனுக்கு ஒரு விளையாட்டு.... நீ கவலைப் படாதே! நாங்கள் உன்னை ஒளித்து வைத்து விடுகிறோம்..."

த்ரோஃபிமோஃப் அவனுக்கு ஆறுதல் சொன்னான்.

அவர்கள் இருவரும், தமீத்ரிக்குக் கப்பல் வரையில் செல்வதற்கு வழியைப் புரிய வைத்துவிட்டுச் சென்று விட்டனர். அரை மணி நேரத்துக்குப் பிறகு, தமீத்ரி கப்பலில் ஏறுவதற்குத் துறைமுகம் சென்றான் கப்பல் துறையிலிருந்து, அவன், பொலிசார் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் கப்பலில் ஏறிவிட்டான். விரைந்து சென்று, உலை அறையினுள் நுழைந்து விட்டான்.

த்ரோஃபிமோஃப் கேட்டான்: "நீ இங்கு வருவதை எவரும் பார்த்துவிடவில்லையே...?"

"இல்லை..." என்றான் தமீத்ரி.

எல்லாரும் சேர்ந்து வோத்கா குடித்தனர். மீன்களைத் தின்றனர். அப்போது, ஒரு உலைப்பணியாளன் உள்ளே வந்தான். அவன் த்ரோஃபிமோஃபிடம் ,"இன்னொரு ஆள் கள்ளப்பொருளாக நம்முடன் வரப் போகிறான். அவன் 'பேத்ரோவ்' விடம் பேசி முடித்து விட்டான். நல்ல இளைஞன்... எட்டு ரூபிள் தருகிறான். அவனை என்ன செய்யலாம்...?" என்றான்.

"ரொம்ப சரி... ஒன்றுக்காக ஏங்கிக் கொண்டிருந்தவன், இரண்டுக்கு ஒத்துக் கொண்டு விட்டான்..." என்றான் யாரோ ஒருவன்.

தமீத்ரி ஒளிந்து கொள்ள ஏற்பாடு செய்த பிறகு, புதிய பயணியை அழைத்து வர நிச்சயிக்கப்பட்டது.

த்ரோஃபிமோஃப், உலையில் கரி போடுகிறவனுக்குரிய ஒரு அழுக்குப் படிந்த சீருடையைத் தமீத்ரியிடம் கொடுத்தான். அவன் முகம் முழுதும் கரித்தூசி அப்பிக் கொண்டது. பிறகு,



படிப்பகம்

www.padippakam.com

தமீத்ரியை அவன், கப்பலின் அடித்தளத்தில் இருந்த கோயலாக்கரி அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு சில இரும்பு நாற்காலிகள் கிடந்தன. த்ரோஃபிமோஃப் குனிந்து ஒன்றைத் தூக்கினான். அதற்கு அப்பால் சிறிது காலி இடம்....

"இதுற்குள் போய் விடு..." த்ரோஃபிமோஃப் காலி இடத்தில் இருந்த இருட்டான துவாரம் ஒன்றைச் சுட்டிக்காட்டினான். "பிற்பாடு நாங்கள் வேறு ஏதாவது ஒரு மூலையில் உன்னை ஒளிய வைக்கிறோம்..."

தமீத்ரி அந்தப் படிக்கட்டு அறையினுள் சென்றான். கதவு அடைக்கப்பட்டு விட்டது. உள்ளே, அவன் மிகவும் கஷ்டப்பட்டு நேராக உட்கார்ந்து கொண்டான். பக்கச்சுவரில் பசைபோல் ஏதோ ஒட்டியது. காலடியில் ஈரத் தளம். அதோடு கும்மிருட்டு

சற்று நேரத்துக்குப் பிறகு, கீழ் அறைக் கதவு திறந்தது. யாரோ ஒருவன் உள்ளே புகுந்து கொண்டான்.

த்ரோஃபிமோஃப் மேலே இருந்து, "எத்தனை மணி நேரம் இங்கு நீ இருக்க வேண்டும் என்று தெரியாது. இந்தா, இவை உனக்கு உதவும்..." என்றவாறு தமீத்ரியடம் ஒரு பொதியைப் போட்டான். அதில், சாப்பிடவும் குடிக்கவும் தேவையான பொருள்கள் இருந்தன.

மேலேயிருந்து குரல் தொடர்ந்தது: "நாங்கள், நீ இருக்கும் இந்த கீழறைக்கு மேல், கோயலாக்கரியைப் போட்டுவிடுவோம். மிகுந்த பாதுகாப்பாக இருக்கும். நல்லது... முடியுமானால் நாளை சந்திப்போம்."

மேல் கதவு மூடப்பட்டது. தொடர்ந்து அதன் மீது கரி கொட்டப்படும் சத்தம் கேட்டது.

தமீம்ரியால், இருட்டில் தன்னுடன் இருந்த சகபயணியைப் பாக்க முடியவில்லை. அவன் தூங்கிப் போய்விட்டான். தடதடவென்ற சத்தம். அவன் தூக்கம் கலைந்தது. அவனது உடை நனைந்திருந்தது. தளத்தில் கொஞ்ச உயரம் வரையில் தண்ணீர் நிரம்பியிருந்தது. தாகமாக இருந்தது. கையை நீட்டித் தண்ணீர் டின்னை எடுத்தான். அது கவிழ்ந்து கிடந்தது. அவனுக்கு நல்ல பசி. தாகம். குளிரில் நடுங்கத் தொடங்கினான்.

சக பயணி கிசுகிசுத்தான். "என் பெயர் வாஸ்யா. எனக்கு மிகவும் குளிர்கிறது. அவர்கள் நம்மை இங்கேயே வைத்து விடப்போகிறார்களோ...?"

"வேறு இடத்துக்கு அழைத்துப் போய் விடுகிறோம் என்று தான் சொன்னார்கள்... சரி ... நீ எப்போதாவது இது போன்ற பயணத்தை மேற்கொண்டிருக்கிறாயா?" என்றான் தமீத்ரி.

"ஒரு போதும் இல்லை..."

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, கப்பல் மிக மோசமாக ஆடத் தொடங்கியது. வெளியில் கடும் புயல். எனவே தான் கப்பலின் இந்த ஆட்டம்.!

தனி அறையில் தண்ணீர் புகுந்து விட்டது. குளிரால் இருவர் உடலும் உறையத் தொடங்கின.

வாஸ்யா சொன்னான்: "இனி என்னால் தாக்குப் பிடிக்க முடியாது. நான் நினைவை இழந்து கொண்டிருக்கிறேன்...."

அவன் எங்கேயாவது தண்ணீரில் விழுந்துவிடக் கூடாதே.... எனவே தமீத்ரி அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். ஆனால், சற்று நேரத்தில் அவனாலும் குளிரைத் தாங்க முடியவில்லை. அவனும் நினைவிழக்கத் தொடங்கினான். அவனுக்குக் கூச்சலிட விருப்பம்தான் ஆனால், 'பிடிபட்டு விடுவோமோ' என்ற



www.padippakam.com

பயம். தனி அறைக்கதவைத் திறக்க விரும்பினான். முடியவில்லை. அதன் மீது தான் பல டன் எடைக்குக் கோயலாகரி குவிக்கப் பட்டுள்ளதே!

எழுந்து நிற்க விரும்பி எழும்பினான். உயரே தலை இரும்பில் இடித்தது. காயம் பட்டு, ரத்தம் கொட்டத் தொடங்கியது. அவன் மயக்கம் அடைந்து விட்டான்....

"அவன் உயிரோடு தான் இருக்கிறான்!"

குரல் கேட்டு தமீத்ரி லேசாய் கண்ணைத் திறந்தான். பிறகு ஒரு குரல்!...

"இன்னொருவன் எங்கே...? அவனையும் வெளியிலே இழுத்துவா....!"

மெல்ல மெல்லத் தமீத்ரி நன்றாக கண் திறந்தான். ஏதோ ஒரு புதிய இடத்தில் இருப்பதை உணர்ந்தான். அந்தப் புதிய அறை கதகதப்பாக இருந்தது. ஒரு சமயம், நீராவித் தொட்டியின் மேற்கூரை மீது இருக்கிறோமோ? மெல்ல மெல்ல, வாஸ்யாவுக்கும் நினைவு திரும்பியது. பிறகு மற்றவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

முதலில் அந்த அறை நல்லதாகத் தோன்றியது. பிற்பாடு, போகப் போகச் சூடு பொறுக்க முடியவில்லை. வெப்ப நிலை 50 டிகிரி சி.சி.க்கு அதிகம். பயங்கரமான இருள். கடுமையான வெப்பம் சூடேறிச்சுட்டுப் பொசுக்கும். இரும்பு. எல்லாமாகச் சேர்ந்து, மோசமாகத் தகித்தது. துளித் தண்ணீர் குடித்தாலும், அது உடனே வியர்வையாக வெளியில் வந்துவிடும்.

அப்போது ஒரு உலைப் பணியாள் அவர்களுக்கு உணவு கொண்டு வந்தான். தமீத்ரி அவனிடம், "இன்னும் எத்தனை நாள் பயணம் பாக்கி உள்ளது?" என்றான்.

"ஐந்து நாட்கள்...."

வாஸ்யாவிடம் பதற்றம்: "அப்படியானால்... நான் இறந்தே போய் விடுவேன்..."

உணவை, அவன் சாப்பிடத் தொடங்கவே இல்லை. பகிர்ந்து கொள்ள விரும்பிய தமீத்ரி அவனிடம், "லண்டனில் உனக்கு யாராவது இருக்கிறார்களா?" என்றான்.

"ஆம்... ஒரு நல்ல நண்பன் இருக்கிறான்..."

அவனது பேசும் சக்தி, அவனுடன் ஒத்துழைக்கவில்லை. மெல்ல மெல்ல, அவன் நினை விழந்தான். அவனையடுத்துத் தமீத்ரியும் சாய்ந்துவிட்டான்.

கொஞ்ச நேரத்தில், இன்னொருவன் உணவுடன் அங்கு வந்தான். இருவரும் மயங்கிக் கிடப்பதைக் கண்டு, அவர்களைக் கோயலா அறைக்கு இழுத்துச் சென்றான்.

அங்கு இருவர் மீதும், வாளி வாளியாகக் குளிர்ந்த நீரை ஊற்றினார்கள். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, தமீத்ரி கண் திறந்தான். ஒரு தம்ளர் குளிர்ந்த நீரைக் கொடுத்து, அவனைக் குடிக்கச் செய்தனர். அவன் உடல் ஒரு பக்கமாக வெந்து பொசுங்கியிருந்தது. முகமும் கூடத்தான்.

வாஸ்யாவுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை.

வெற்றுமுகத்தில் நீரைத் தெளித்தனர். ஒரு பணியாள், அவனை நெருங்கி, அவனுடைய சட்டைப் பித்தானைக் கழற்றினான். குளிர்ந்த நீர் வாளியை அவன் மீது கவிழ்த்தான். நீர்த் தாரையின் வேகம், அவனது சட்டைத் துணியை இடம் பெயரச் செய்தது. அடுத்த கணம், அனைவரிடமும் அதிர்ச்சி. அதிச யித்துப் போய், திறந்த கண் மூடச் சக்தியற்று, வாஸ்யாவின் திறந்த உடலை வெறித்தனர்!

அதுவொரு பெண்ணின் உடம்பு!

உடனே அனைவரும் பயந்து நடுங்கினர். அதற்குள் வாஸ்யாவுக்கு நினைவு திரும்பிவிட்டது. தான் அந்த நிலையில் இருப்பதை உணர்ந்து, அவள் அழத்தொடங்கி விட்டாள். மற்றவர்கள் அனைவரும், அவ்விருவரையும் அங்கேயே விட்டு விட்டு அறையிலிருந்து வெளியேறினர்.

தமீத்ரி அவளுக்குக் குளிர்ந்த நீரைக் கொடுத்துக் குடிக்க வைத்தான். மெல்ல, அவள் அழுகை ஓய்ந்து அமைதி ஆனாள். அவளுக்கும் கடும் காய்ச்சல். மிகவும் சிரமத்துடன் மூச்சு விட்டாள். அவளது கை மிக மோசமாகப் பொசுங்கியிருந்தது.

தமீத்ரி அவளிடம், ஆண் வேடமிட்டு வந்துள்ளதற்கான காரணத்தைக் கேட்டான். மெல்ல மெல்ல, அவள் சொல்லத் தொடங்கினாள்:

"என் பெயர் 'நதாஷா' ருஷ்யாவில் சிறையில் இருந்தேன். பைத்தியம் பிடித்தவளாக நடித்து, மருத்துவ மனையை அடைந்து. அங்கிருந்து ஓடிவந்துவிட்டேன். அப்போது, பொலீசாரிடமிருந்து தப்புவதற்காக, என் உருவத்தை வேஷமிட்டு மாற்றிக் கொண்டேன். இந்தக் கப்பல் மூலம், நான் என் காதலருடன் சேரப் போய்க் கொண்டிருக்கிறேன். அவர் ஏற்கெனவே இதேபோலக் கள்ளப்பொருளாக லண்டன் சென்றடைந்து விட்டார்."

பேசிக் கொண்டிருக்கும் போதே, அவளுக்கு ரத்த வாந்தியெடுத்து, அவள் மயக்கமடைந்துவிட்டாள்.

கப்பல் ஆடி அசைந்தது. அந்த ஆட்டத்தில் இருவரும் ஒரு பக்கமாகக் கவிழ்ந்தனர். அப்போது, நிலக்கரித் துண்டுகளும் அவர்கள் மீது சரிந்து விழுந்தன. அவர்கள் உடலில் ஏற்கெனவே தீப்புண்கள். அந்தப் புண்களில் பட்ட கரித்துண்டுகள் அவற்றை மேலும் குத்தி, அவர்களைத் துன்புறுத்தின.

நதாஷா அரைகுறை நினைவில் உளறிக் கொண்டிருந்தாள்.

"யோதோர் நான், உன்னைத் தேடி, உன் அருகில் வந்து கொண்டிருக்கிறேன்... நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டு, நலமாக வாழலாம்...."

அவள் பேச்சு பாதியிலேயே நின்றது. தமீத்ரி அவள் கையைத் தடவி, அவளுடைய நாடியைக் கண்டு பிடித்து, அதன் துடிப்பை விரல்களால் உணர முயன்றான்.

அவளது கை துடிப்பற்று நின்று போயிருந்தது. தமீத்ரி நிலை குலைந்து தொய்ந்தான். அவனால் அழவும் முடியவில்லை.


**ஐரோப்பாவில்**
**'புதுமை' விநியோகஸ்தர்**

**S. CHANDRAKUMAR**
No. 5, Avenued Oradour Surq Lane
16, Estate Porte No: 201
94380- Bonnevil
France.




படிப்பகம்

www.padippakam.com

# புத்தகங்கள்

## ANCIENT COINS OF SRI LANKAN TAMIL RULERS

DR. P. PUSPARATNAM

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. புஷ்பரட்ணம் ஆய்வுத்துறையில் இன்று மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு வரலாற்றாசிரியர்.

தமிழகத்திலுள்ள முக்கியமான ஆய்வாளர்களுடன் தொடர்பு கொண்டு, அகழ்வாராய்ச்சித் தேடுதலோடு சிறந்த முறையில் இந்த ஆய்வை புஷ்பரட்ணம் மேற்கொண்டு நூலாக்கியுள்ளார்.

இதன் தமிழ்மொழி பெயர்ப்பினை ஆசிரியரே செய்து வெளியிட வேண்டியதும் அவசியமாகும்.

பவானிபதிப்பகம்
புத்தூர் கிழக்கு, யாழ்ப்பாணம்
விலை ரூபா 200 (இந்திய விலை)

## காற்றும் சுழிமாறும்

செ. யோகநாதன்

இசை, திரைப்படத்துறையைப் பின்னணியாகக் கொண்டு செ.யோகநாதன் எழுதியுள்ள "மூன்று குறுநாவல்களின் தொகுதி, "காற்றும் சுழிமாறும்."

தமிழில் வெளியாகியுள்ள சிறந்த குறுநாவல்களில் ஒன்றாக "காற்றும் சுழிமாறும்" மை குறிப்பிடுகின்றார் விமர்சகர் வல்லிக்கண்ணன். இக்கதை கணையாழியின் குறுநாவல் போட்டியிலும் பரிசு பெற்றதாகும்.

திரைப்பட உலகின் உள்ளையும் புறத்தையும் ஏனைய இரண்டு குறுநாவல்களும் தத்ரூபமாக விபரிக்கின்றன.

எம்.டி.குணசேன
217 ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 11
விலை ரூபா 160.

## வாசல் ஒவ்வொன்றும்

ஈழத்து தற்காலப் படைப்பிலக்கிய வரலாறு இனிமேல் தான் சரியான முறையில் ஒழுங்கமைப்போடு எழுதப்பட வேண்டும். தற்கால வாழ்வினை நிர்ப்பந்தமாகச் சூழ்ந்திருந்த அரச பயங்கரவாதக் கொடுமைகள் மக்களின் வாழ்வினை வெகுவாகவே சிதைத்திருந்தன. மக்களை கொத்துக் கொத்தாக ஒவ்வொரு திசையிலும் தூக்கி வீசி எறிந்திருந்தன.

இந்தச் சூழலின் நடுவே இத்தகைய வெம்மைத் தகிப்பின் இடையே, இந்தத் தளங்களில் எல்லாம் கலை இலக்கியம் என்பன தனி அடையாளமாக வளர்ச்சியடைந்தே வந்திருக்கின்றன. வன்னிப் பகுதியிலும் இந்த வரலாறு நிகழ்ந்தது.

அரச பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் நடந்த போது மறுபுறத்திலே இந்த நெருப்பு கலை இலக்கியத் துறையிம் சுடர் விட்டெரிந்தது. இந்தக் குரலினை சஞ்சிகைகளின் பக்கங்களிலே துல்லியமாக கேட்க முடிந்தது.

வன்னியில் வெளியான "வெளிச்சம்" இதழிலே இவ்வுணர்வோடு சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பன உயிர்ப்போடு மக்களின் குரலாகவும் காலத்தின் முழக்கமாகவும் ஒலித்தன.

அந்த ஆக்கங்கள் இப்போது தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. வெளிச்சத்தில் பிரசுரமான 19 படைப்பாளிகளின் தரமான சிறுகதைகளின் தொகுப்பாக, "வாசல் ஒவ்வொன்றும்" உள்ளது. நெஞ்சையும் சிந்தனையையும் தொடும் அருமையான சிறுகதைத் தொகுதி. வரலாற்று ஆவணம்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம். நடுவண் பணியகம்.

நாலாம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
விலை ரூபா 100.

## வலை

சிங்கள மொழிச் சிறுகதைகள்
தமிழில்
மடுளுகிரிய விஜேரட்ண

சிங்கள மொழியில் பேசப்பட்ட சிறுகதைகளைத் தெரிந்தெடுத்து அவற்றை தமிழிலே மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார், சிங்களப் படைப்பாளியும், மொழி பெயர்ப்பாளரும் திறனாய்வாளருமான மடுளுகிரிய விஜேரட்ண.

தொகுதியில் உள்ளன சிறந்தகதைகள், வெளியான போதே சிங்களப் படைப்பில் பரபரப்பாகப் பேசப்பட்டவை. விமர்சனங்கள் எழுப்பப்பட்டவை. விவாதிக்கப்பட்டவை. ஆனால் இவை யாவுமே யதார்த்த வாழ்வினை மிகவும் துல்லியமாகவும் கலாபூர்வமாகவும் சித்தரிக்கின்றன.

இன்றைய சிங்களப் படைப்பிலக்கியத்தின் தெளிந்த போக்கினை வெளிப்படுத்தும் இக்கதைகளை தமிழில் மொழி பெயர்த்த மடுளுகிரிய விஜேரட்ண பாராட்டுக்குரியவர்.

## சுதந்திரன் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்
"செங்கை ஆழியான்"

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகை சுதந்திரன். ஆயினும் தன்காலத்து இலக்கியப் போக்கினை இது பதிவு செய்ய முயன்றிருக்கிறது. ஈழத்தின் பல திக்குகளிலும் இருந்து வந்த கதைகளை "சுதந்திரன்" பிரசுரித்து வந்திருக்கிறது.

சுதந்திரனில் வெளியான 780 கதைகளிலிருந்து இத்தொகுதிக்காக 109 கதைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். "செங்கை ஆழியான்"

இந்தத் தொகுதியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், கொழும்பு, தென்னிலங்கைப் பகுதியைச் சேர்ந்த படைப்பாளிகளின் கதைகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் இவை தரத்தில் சமமானவை அல்ல.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதிய படைப்பாளிகளின் ஆக்கங்கள் என்று இவற்றை ஒரு சேர ஆவணப்படுத்தியிருக்கும் முயற்சியாக இதனைப் பாராட்ட வேண்டும். அழகிய கட்டமைப்பு. திறனாய்வாளருக்கு பெரிதும் உதவும் நூல்.

யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.
விலை ரூபா 600.

**கன்னங்கரா:** இலங்கையின் முதல் கல்வி மந்திரி. சோமசிறி சூரியா ஆராய்ச்சி.

ஆங்கிலம் வழி தமிழில்: யோ. சுந்தரலட்சுமி.

இலங்கையில் இலவசக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் முதற் கல்வி மந்திரியான சி. டபிளியூ. டபிள்யூ கன்னங்கரா. இதன் மூலம் இலங்கை மக்களின் வாழ்க்கைப் போக்கினையே மாற்றியமைத்தவர். தனது பள்ளிப்பருவத்து அனுபவங்களின் மூலமே இத்தகைய கல்வித் திட்டத்தினை உருவாக் வேண்டுமென்ற இலட்சியத்துக்கு அவர் தன்னை வரித்துக் கொண்டார்.

சூரியாராய்ச்சி, கன்னங்கராவின் வாழ்க்கை வரலாற்றினை இளம் பருவத்தினருக்காக மிக எளிமையாகவும், அழகாகவும் எழுதியிருக்கிறார். கன்னங்கராவே தனது வாழ்க்கை வரலாற்றை நேரடியாகச் சொல்வது போல இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. இது எந்த இளம் பருவத்து வாசகரையும் மிகவும் கவரத்தக்கது.

சிங்களத்திலே இந்தக் குழந்தை இலக்கியம் இரு பதிப்புகளைக் கண்டது. இதன் ஆங்கில மொழி பெயர்ப்பும் வெளியாகி உள்ளது.

இப்போது இதைத் தமிழிலே யோ. சுந்தரலட்சுமி சிறப்பாகவும் சரளமாகவும் மொழி பெயர்த்துள்ளார்.

இளந்தலை முறையினர் தவறாது படிக்க வேண்டிய அருமையான நூல்.

- கொடகே சகோதரர்கள், மருதானை.
விலை ரூபா 75.


படிப்பகம்

www.padippakam.com

# புத்தகங்கள்

## கணநேர நினைவலைகள்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

தன்னைச் சுற்றியுள்ள வாழ்வை மிகவும் நுணுக்கமாகப் பார்த்து மென்மையாகவும், எளிமையாகவும் எழுதிவரும் யோகேஸ்வரியின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இது.

பதினைந்து சிறுகதைகளினதும் பொதுத் தன்மை, வாழ்வின் நம்பிக்கையும், மானிட நேயமும் ஆகும்.

பிரணவன் வெளியீட்டகம்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
விலை, ரூபா:125.

## தேசத்தின் பாடல்கள்

1974ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டுவரை 'வளவை வளவன்' எழுதி பல்வேறு இதழ்கள், வானொலி ஊடகங்களில் வெளியான இருபத்தொரு தரமான கதைகளை தொகுதியாக வெளியிட் டிருக்கின்றார்.

இக்காலப் பகுதியில் ஈழமக்கள் பல்வேறு மட்டங்களிலும் அனுபவித்த துயரங்கள், வேதனைகள், கொண்ட சீற்றங்கள் என்பன கதைகளில் மெய்ம்மை சேரப் பதிவாகியுள்ளன. இன்னலுற்ற மக்களை அதிகார வர்க்கம் எவ்விதம் காயப்படுத்தியது என்பதை தீயின் தகிப்பினோடு ஆசிரியர் படைத்திருக்கிறார்.

எளியநடை. மனதைத்தொடும் விதத்திலே ஆசிரியர் கதைகளைச் சொல்லி இருக்கிறார்.

நீதிவளவன் வெளியீடு
வளலாய், அச்சுவேலி.
விலை ரூபா 150.

## அக்னி திரவம்

தேவகாந்தன்

புலம் பெயர்ந்து தமிழகத்தில் வாழும் ஈழத்தவரான தேவகாந்தனின் நாவல்த் தொடரின் 1989 - 1993 காலப்பகுதி ஈழத்து வாழ்வைக் கூறும் மூன்றாம் பாகம். இடம் பெயர்ந்திருப்பதால் பல செய்திகளை அழுத்தமாகக் கூறமுடியவில்லை.

-பல்கலைப் பதிப்பகம்
48, தெற்குச் சிவன் கோவில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
விலை ரூபா: 100 (இந்திய விலை)

## சர்ப்ப வியூகம்

செம்பியன் செல்வன்

அண்மைக்காலத்தில் வெளியான சிறந்த கதைத் தொகுதிகளில் ஒன்று இந்த 'சர்ப்ப வியூகம்'. செம்பியன் செல்வன் தனது எழுத்து நடையில் மிகுந்த அக்கறை காட்டுபவர். 1968 முதல் 1995 வரையுள்ள காலப் பகுதி வாழ்வை மிகவும் அவதானமாகவும், கலாரீதியாகவும் சொல்லுகிற நேர்த்தியான கதைகள்.

விருதுகளுக்கு எல்லா விதங்களிலும் மிகவும் தகுதியான கதைத் தொகுதி. வடிவமைப்பில் செம்பியன் செல்வன் மிகுந்த அக்கறை காட்டி, ஓவியர் ரமணியின் உயிர்ச் சித்திரங்களோடு ஒவ்வொரு பக்கங்களையும் அருமையாக ஆக்கியுள்ளார். இலக்கியக் குழுவினர், சிறந்த வடிவமைப்புக்கான விருதை எந்தத் தயக்கமுமின்றி 'சர்ப்ப வியூக'த்திற்கு வழங்கி தமிழிற்கு மேன்மை சேர்க்கலாம்.

ஈழத்துப் பதிப்புத்துறை வளர்சிக்கு இன்னொரு உதாரணம். இத்தொகுதி.

யாழ். இலக்கிய வட்டம்
யாழ்ப்பாணம்.
விலை, ரூபா:250

## வாழ்வற்ற வாழ்வு

சி.வி.வேலுப்பிள்ளை

இலங்கையில் வெளியான தலை சிறந்த பத்து நாவல்களில் ஒன்றாக சி.வி.வேலுப்பிள்ளையின் 'வாழ்வற்ற வாழ்வி' னைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்த சமகால வரலாற்று நாவலினை நுட்பமும் கவித்துவமும் செறிய சி.வி.வேலுப்பிள்ளை ஆங்கிலத்திலே எழுதினார்.

இதை பொ.கிருஷ்ணசாமி அழகாகத் தமிழிலே மொழி பெயர்த்தார். தினகரனில் இந்த நாவல் தொடராக வெளிவந்தது. இன்னொரு படைப்பாளியான சாரல் நாடன் பெரிதும் முயன்று இந்த நாவலை வெளியிட்டுள்ளார். பாராட்டத்தக்க முயற்சி.

சாரல் வெளியீட்டகம்
கோட்டக்கலை
விலை, ரூபா:340.

## துன்ப அலைகள்

செ.குணரத்தினம்

தேசிய கலை இலக்கியப் பேரவையும் சுபமங்களாவும் இணைந்து நடத்திய குறுநாவற் போட்டியில் முதற்பரிசு பெற்ற படைப்பு.

ஈழத்து வாழ்வு அவலங்களையும், பெருமூச்சினையும் வெகு யதார்த்தமாகவும், மனதை நெகிழ்த்தும் விதத்திலும் சொல்லுகின்ற ஆக்கம். காலப்பதிவு.

வசந்தம் புத்தகநிலையம்
5-44, மூன்றாவது தளம்
சி.எஸ்.எம்.கொம்பிளெக்ஸ்
கொழும்பு-11
விலை, ரூபா:125

---

**புதுமை**

புத்தகங்கள் பகுதியில்
நூல்
அறிமுகம் இடம்பெற
வேண்டுமென்று
விரும்புவோர்
நூலின் இரண்டு பிரதிகளை
எமக்குத் தவறாது அனுப்பி
வைக்க வேண்டும்

தனிப்பிரதி - 40 ரூபா
ஆண்டுச் சந்தா - 500 ரூபா
(சிறப்பு மலர் உட்பட)

ஆசிரியர்
**புதுமை**
'சத்யபாரதி'
202-1 காலி வீதி,
கல்கிசை.
இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா எங்கே போகிறது?

அமெரிக்கா யாருடன் யுத்தம் செய்கின்றது? விமானக் கடத்தல்காரர்கள் சிலரின் அடையாளங் குறித்து சந்தேகங்கள் இருப்பதாக செப்டெம்பர் 20ந் திகதி மத்திய புலனாய்வுத்துறை அறிவித்தது. அதேதினத்தில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் "இவர்கள் யாரென்றும், இவர்களுக்கு ஆதரவு வழங்கும் அரசுகள் எவையென்றும் எமக்குச் சரியாகத்தெரியும்'' என்று கூறினார். இது மத்திய புலனாய்வுத்துறையும், அமெரிக்கப் பொதுமக்களும் அறியாத ஒன்றை ஜனாதிபதி அறிந்திருப்பது போலத் தோன்றுகிறது.

செப்டெம்பர் 20ந் திகதி அமெரிக்க காங்கிரசுக்கு ஆற்றிய உரையில் அமெரிக்காவின் எதிரிகளை "சுதந்திரத்தின் எதிரிகள்'' என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்ததுடன் இவர்கள் ஏன் எம்மை வெறுக்கிறார்களென்று அமெரிக்கர்கள் கேட்பதாகவும் அவர் கூறினார். இவர்கள் எமது மத சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், வாக்களிப்பதற்கான சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் மற்றும் ஒருவரோ டொருவர் முரண்படும் சுதந்திரம் போன்ற சுதந்திரங்களை வெறுப்பதாகவும் அவர் கூறினார். இங்கு விடயங்களை ஏற்றுக் கொள்ளுமாறு மக்கள் கேட்கப்படுகின்றனர். முதலாவது எதிரி யாரென்று அமெரிக்க அரசாங்கம் கூறுவதை ஏனையோர் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தக் கூற்றுக்கு ஆதரவான தேவையான ஆதாரம் இல்லையென்றாலும் பரவாயில்லை. இரண்டாவது, எதிரியின் நோக்கங்களென்று அமெரிக்க அரசாங்கம் கூறுவதை ஏனையோர் நம்பவேண்டும். அவற்றுக்கு ஆதாரங்கள் இருப்பது அவசியமில்லை.



போர்த்தந்திர இராணுவ மற்றும் பொருளாதாரக் காரணங்களின் நிமித்தம் அமெரிக்க அரசாங்கம், சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் அமெரிக்க வாழ்க்கைமுறை குறித்த அவர்களின் அர்ப்பணிப்புணர்வு தாக்குதலுக்கு இலக்காகியுள்ள தென்று தனது பொதுமக்களை நம்பவைக்க வேண் டியுள்ளது. துயரம் மற்றும் கோபம் நிறைந்துள்ள தற்போதைய சூழலில் இந்தப் பாண்டங்களை இலகுவாக விற்பனை செய்யலாம். இது உண்மையென்றால், அமெரிக்கப் பொருளாதாரமும் மற்றும் இராணுவ ஆதிக்கச் சின்னங்களான உலக வர்த்தக நிலையத்தின் மீதும், பென்டகன் மீதும் ஏன் குறிவைக்கப்பட்டதென்று ஒருவர் நியாயமாகவே சிந்திக்கலாம். ஏன் சுதந்திரச் சிலையை நொருக்கி யிருக்கக்கூடாது, இந்தத் தாக்குதலுக்கு இட்டுச் சென்ற தீராக்கோபமும் அதன் வேர்களும் அமெரிக்க சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்கும் எதிரானவையல்ல, மாறாக அவை அமெரிக்காவுக்கு வெளியில் இடம் பெறும் இராணுவ, பொருளாதார பயங்கரவாதம், அரசு எதிர்ப்புக் கிளர்ச்சிகள், மற்றும் கற்பனை செய்யவும் முடியாத இனப்படுகொலைகள் போன்ற சுதந்திரவிரோத, ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிரான கொள்கையாக இருக்கக் கூடுமோ வென்றும் பலர் சிந்திக்கின்றனர். மிகச் சமீபத்தில் உறவினரைப் பறிகொடுத்த சாதாரண அமெரிக்கர்கள் கண்ணீருடன் உலகத்தை நோக்கும்போது அங்கு



படிப்பகம்

www.padippakam.com

அக்கறையின்மை போலத் தோற்றமளிக்கும் ஒன்றைக் காணுவது அவர்களுக்குக் கஷ்டமாக விருக்கலாம். இது அக்கறையின்மை அல்ல. மாறாக இது எதிர்பார்த்த ஒன்றாகும். ஆச்சரியம் எதுவுமில்லாத ஒரு நிலைமையாகும். மற்றவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் இறுதியில் தம்மைநோக்கி வருமென்ற மிகப்பழமையான நம்பிக்கையை அறிந்திருப்பதாகும். வெறுப்புக்கு உள்ளாகியிருப்பது தாமல்ல வென்பதையும், தமது அரசாங்கத்தின் கொள்கைகளே என்பதையும் அமெரிக்க மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கும் அவர்களது உன்னதமான சங்கீத விற்பன்னர்கள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் திரைப் படங்களுக்கும் உலகம் முழுவதிலும் பெரும் வரவேற்பு உள்ளது. தாக்குதலைத் தொடர்ந்த நாட்களில் தீயணைப்புப் படையினர், மீட்புப்பணியாளர் மற்றும் ஏனைய சாதாரண அலுவலகப்பதவியினர் காண்பித்த தைரியம், துணிச்சல் மற்றும் கௌரவ நிலைப்பாடு என்பவற்றை அவர்கள் மதித்துப்போற்றுகின்றனர்.

அமெரிக்காவின் துயரம் மிகப்பெரிய ஒன்றாகும். அதன் துயர அங்கலாய்ப்பை அளவிடுவதோ, இசைவுபடுத்துவதோ, எண்ணிப்பார்க்கவும் முடியாத ஒன்றாகும். ஆயினும் செப்டெம்பர் 11ந் திகதிச் சம்பவங்களை உண்மையில் ஏன் இடம்பெற்றன வென்று ஆழமாய்ச் சிந்திப்பதற்கு இச்சந்தாப்பத்தைப் பயன்படுத்தாமல், அமெரிக்கர்கள் தமது சொந்தத்துக்கத்துக்காக அழுவதற்கும் பழிவாங்குவதற்கும் முழு உலகினதும் துக்கத்தை அபகரிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதைப்பயன்படுத்துவார்களாயின் அது பரிதாபத்துக்குரிய ஒன்றாகும். ஏனென்றால் அதன் பின்னர் எஞ்சியிருக்கும் நாங்கள் கடுமையான வினாக்களைத் தொடுத்து, மனதை உறுத்தும் விடயங்களைக் கூறவேண்டி வரும். விமானக் கடத்தல்காரர்கள் விமானங்களைக் குறிப்பிட்ட அமெரிக்கக் கட்டிடங்களில் மோதுமாறு செய்ததற்கான காரணம் எதுவென்று அனேகமாக உலகம் என்றுமே அறிந்துக்கொள்ளப் போவதில்லை. அவர்கள் புகழ்தேடும் பையன்கள் அல்ல. அவர்கள் தற்கொலைக் குறிப்புகளையோ, அரசியல் செய்திகளையோ, விட்டுச் செல்லவில்லை, எந்த அமைப்பும் தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை. எமக்குத் தொரிந்ததெல்லாம் அவர்கள் செய்த விடயம் குறித்த அவர்களின் நம்பிக்கை இயற்கையான உயிர் வாழ்க்கைக்கான மனிதஇயல் பூக்கத்தையும், தம்மைப் பிறர் நினைவில் வைத்திருக்க வேண்டுமென்ற விருப்பத்தையும் மிஞ்சியதாக இருந்துள்ளது என்பது மட்டுமேயாகும். அவர்களின் கோபத்தின் பாரிய அளவை அவர்கள் செய்த செயலின் பாரிய தன்மையோடு மாத்திரமே ஒப்பிடலாம் போலத் தோன்றுகிறது. அவர்கள் செய்த காரியம் நாங்கள் அறிந்திருந்த உலகில் ஓர் ஓட்டையை ஏற்படுத்திவிட்டது. தகவல் இல்லாமையால் அரசியல்வாதிகளும், அரசியல் கருத்துரையாளர்களும், எழுத்தாளர்களும் தமது சொந்த அரசியல் மற்றும் தமது எழுத்துக்கள் மூலம் அவர்களின் செயலை விளக்க முயலுவர்.

அமெரிக்கா தன்னை பயங்கரவாதத்துக்கொதிரான சர்வதேசகூட்டணியின் தலைவராக ஏகமனதாக நிமித்துக்கொள்ள முன்னர், தனது கடவுளையொத்த திருப்பணியில் ஏனைய நாடுகளையும் முடிவற்ற நீதிக்கான, நடவடிக்கை என்பதில் பங்கு கொள்ளுமாறு அழைப்பதற்கு (பலவந்தப் படுத்துவதற்கு) முன்னர் சில சிறு தெளிவுப்படுத்தல்கள் இடம் பெற்றால் உதவியாகவிருக்கும் உதாரணமாக முடிவற்ற நீதி/ நிலையான சுதந்திரம் யாருக்கு? இதில் அமெரிக்காவில் பயங்கரவாதத்துக்கெதிராக நிகழும் அமெரிக்காவின் யுத்தமா, அல்லது பொதுவாகப் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமா? இங்கு சரியாக எதற்குப் பழிவாங்கப்படுகிறது? 7000 பேரின் அவல மரணமா, மான்ஹட்டனில் 5 மில்லியன் சதுர அடி அலுவலக இடம் தீக்கிரையானதா, பென்டகனின் ஒரு பகுதியின் அழிவா, பல லட்சக் கணக்கானோர் வேலை இழந்தமையா, சில விமானப் போக்குவரத்து கம்பனிகள் வங்குரொத்து நிலையடைந்தமையா அல்லது நியூயோர்க் பங்குச் சந்தையில் இடம்பெற்ற வீழ்ச்சியா? அல்லது அதைவிட அதிகமான ஒன்றா? 1996 இல், அப்போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளராகவிருந்த மடெலின் அல்பிரைட் 500,000 ஈராக் சிறுவர்கள் அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் காரணமாக மரணமடைந்தது குறித்து தொலைகாட்சிப் பேட்டியொன்றின்போது கருத்து வெளியிட்டபோது அவர் அது மிகவும் கடினமான ஒரு தெரிவாக இருந்ததென்றும், ஆயினும் அனைத்தையும் கருத்தில் கொள்ளும் போது இந்த விலை சரியென்று நாம் எண்ணுகிறோம் என்றும் தெரிவித்தார். இதைக் கூறிய காரணத்தால் அல்பிரைட் வேலையை இழக்கவில்லை. மாறாக, அவர் அமெரிக்க அரசாங்கத்தின் கருத்துக்கள் மற்றும் அபிலாஷைகளின் பிரதிநிதியாக உலகெங்கும் வலம் வந்தார். மேலும் முக்கியமாக, ஈராக் நாட்டுக்கெதிரான பொருளாதாரத் தடைகள் இன்னமும் தொடருகின்றன. சிறுவர்கள் தொடர்ந்தும் உயிரிழக்கின்றனர். ஆகவே, இதுவே நிலைமையாகும் நாகரீகத்துக்கும், காட்டுமிராண்டித் தனத்துக்கும் இடையிலானதும், அப்பாவி மக்களின் படுகொலைக்கும் அல்லது நாகரீ கங்களின் மோதலுக்கும் இடையிலான சந்தேகத்துக்கிடமான வேறுபாடு இதுவே ஆகும். இதுவே முடிவற்ற நீதியின் சொற்புரட்டும், பெரும் எதிர்பார்ப்பிலான அட்சரக்கணிதமுமாகும். உலகை மேலும் சிறந்த ஓர் இடமாக மாற்றுவதற்கு இன்னும் எத்தனை ஈராக் மக்கள் மரணமடைய வேண்டும்? மரணமடைகின்ற ஒவ்வொரு அமெரிக்கர்களுக்கும் எத்தனை



படிப்பகம்

www.padippakam.com



அருந்ததிரோய்

ஆப்கான் மக்கள் மரணமடைய வேண்டும்? இறந்த ஒவ்வொரு ஆணுக்கும் பதிலாக எத்தனை பெண்களும், சிறுவர்களும் பலியாக வேண்டும். இறந்த ஒவ்வொரு முதலீட்டு வங்கியாளர்களுக்கும் எத்தனை முஜாஹிதீன் போராளிகள் மரணமடைய வேண்டும்? நாம் ஈடுபாட்டுடன் அவதானிக்கும் போது நிலையான சுதந்திரத்துக்கான நடவடிக்கைகள் தொலைக் காட்சித் திரைகளில் எம் கண்முன்னே விளங்குகிறது. உலக வல்லரசுகளின் கூட்டணியொன்று, உலகிலேயே ஏழ்மை நாடுகளில் ஒன்றானதும், யுத்தத்தினால் சீரழிக்கப்பட்டதுமான ஆப்கனிஸ்தானை மேலும் அழிப்பதற்காக நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. ஆ.ப்கானிஸ்தானின் ஆட்சியாளர்களாகிய தலிபான் அரசு செப்டெம்பர் 11ந் திகதி தாக்குதல்களுக்குப் பொறுப்பானதென்று கூறுப்படும் ஓசாமா பின்லாடனை பாதுகாத்துப் புகலிடமறிந்து வைத்திருப்பதாகக் குற்றஞ் சாட்டப் படுகிறது.

பெறுமதிமிக்கதென்று ஆப்கானிஸ்தானில் கணிப்பிடக்கூடியது அதன் குடிமக்கள் மாத்திரமே. (இவர்களுள் ஐந்து இலட்சம்பேர் அங்கவீனர்களாகிய அநாதைகளாகும். தொலைதூர போக்குவரத்து வசதியற்ற கிராமங்களில் விமானத்திலிருந்து செயற்கைக் கால்கள் போடப்படும்போது நொண்டியவாறு முண்டியடிப்போர் குறித்து அறிக்கைகள் தெரிவித்துள்ளன.)

ஆப்கனிஸ்தானின் பொருளாதாரமும் அதல பாதாளத்துக்குச் சென்றுள்ளது. உண்மையில் ஊடுருவல் செய்யும் படைக்குள்ள பிரச்சினை அங்கு எதைத்தாக்குவது என்பதாகும். பெரிய நகரங்கள், தொழிற்சாலைகள், பெருந் தெருக்கள், தண்ணீர் சுத்திகரிப்பு பொறிக்கோப்புக்கள் என்று எதுவுமே இல்லை. பண்ணைகள் இறந்தோருக்கு பாரிய புதைகுழிகளாக மாற்றப் பட்டுள்ளன. கிராமப்புறங்களில் எங்கும் நிலக்கண்ணிவெடிகள் புதைக் கப்பட்டுள்ளன. சமீபத்தில் மதிப்பீடுகள் இவற்றின் தொகை சுமார் ஒருகோடியென்று கூறியுள்ளன. அமெரிக்க இராணுவம் முதலில் கண்ணி வெடிகளை அகற்றி, வீதிகளை அமைத்த பின்னரே வீரர்களை உள்ளே கொண்டுவர முடியும்.

அமெரிக்கத் தாக்குதலுக்கு பயந்து 10 இலட்சம் குடிமக்கள் வீடுகளைவிட்டு உயிர்பிழைக்க ஓடி, பாகிஸ்தான் ஆப்கனிஸ்தான் எல்லைப்புறங்களுக்கு வந்துசேர்ந்துள்ளனர். 80 லட்சம் ஆப்கன் குடிமக்களுக்கு அவரசகால உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. வழங்கல்கள் தீர்ந்துவிட்டன. உணவு மற்றும் உதவி முகவர் நிலையங்கள் வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளன. சமீபகால வரலாற்றில் மிகவும் மோசமான மானிட அழிவுகள் ஆரம்பித்திருப்பதாக பீபீசி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

1979 இல் ஆப்கனிஸ்தானில் சோவியத் படையெடுப்புக்குப் பின்னர் சீஐஏ யும், பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ (உளவுச் சேவை) அமைப்பும் சிஐஏ யின் வரலாற்றிலேயே மாபெரும் இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டன. அவர்களின் நோக்கம் ஆப்கன் மக்களின் சோவியத் எதிர்ப்புப் போராட்டத்தின் அவதியைப் பயன்படுத்தி, அதை ஒரு புனித யுத்தமாக வியாபகப் படுத்தி சோவியத் யூனியனிலுள்ள முஸ்லிம் தேசங்களை கம்யூனிச ஆட்சியாளர்களுக்கெதிராகத் திருப்பி, இறுதியில் அதன் ஸ்தீர நிலையைக் குலைப்பதாகும். இது ஆரம்பமாகிய போது, ஆப்கனிஸ்தானை ரஷ்யாவின் வியட்நாமாக மாற்றுவதே நோக்கமாகவிருந்தது. ஆயினும் அது அதைவிட மோசமானதாக மாறியது. அமெரிக்காவின் பதிலாளர் யுத்தத்தில் பலவருட காலமாக சீஐஏ யும், ஐஎஸ்ஐ அமைப்பும் சுமார் ஒரு லட்சம் தீவிரவாத முஜாஹிடீன்களை 40 இஸ்லாமிய நாடுகளிலிருந்து போர்வீரர்களாக ஆட்சேர்ப்புச் செய்தன, முஜாஹிடீன் படையின் சாதாரண வீரர்கள் தாம் உண்மையில் போரிடுவது அமெரிக்காவின் சார்பில் என்பதை அறியாதிருந்தனர். தனக்கெதிரான ஓர் எதிர்கால யுத்தத்துக்கு, தானே நியதியளிப்பதை அமெரிக்கா அறியவில்லை என்பதாகும்.

10 வருடகால ஈவிரக்கமற்ற மோதலின் பின்னர் 1989 இல் ரஷ்யர்கள் வாபஸ் பெற்றனர். அவர்கள் விட்டுச் சென்றது வெறுங் கற்குவியல்களாக மாற்றப்பட்ட ஒரு நாகரீகத்தையேயாகும். ஆப்கனிஸ்தானில் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்தது. புனித யுத்தம் செச்னியா, கோசோவா மற்றும் காஷ்மீருக்கு பரவியது. சீஐஏ பணத்தையும், இராணுவ உபகரணங்களையும் கொண்டுவந்து குவித்தது. எனினும் மேலதிக செலவுகள் பெரிதும் அதிகரித்ததோடு, மேலும் பணம் தேவைப்பட்டது. 'புரட்சி வரியாக' விவசாயிகளை அபின் பயிரிடுமாறு மொஜாஹிதீன் கட்டளை பிறப்பித்தது. ஐஎஸ்ஐ அமைப்பு ஆப்கனிஸ்தான் முழுவதுமே நூற்றுக்கணக்கான



படிப்பகம்

www.padippakam.com

ஹெரோயின் ஆய்வு கூடங்களை அமைத்தது. சீஐஏ வந்து சேர்ந்து இரண்டு வருடங்களுள் பாகிஸ்தான் ஆப்கனிஸ்தானின் எல்லைப்பிரதேசம் உலகிலேயே அதிக அளவிலான ஹெரோயின் உற்பத்தி செய்யும் இடமாக மாறியது. அது அமெரிக்கத் தெருக்களில் கிடைக்கும் ஹெரோயினுக்கும் தனிப்பெரும் மூலஸ்தானமாகவும் மாறியது. 100 பில்லியன் டொலர்களுக்கும் 200 பில்லியன் டொலர்களுக்கும் இடையில் என்று தெரிவிக்கப்பட்ட வருடாந்த இலாபங்கள் மீண்டும் போராளிகளையும் பயிற்றுவிப்பதற்கும், ஆயுதபாணிகளாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

1995 இல் ஓர் அபாயகரமான, தீவிர அடிப்படைவாதிகளாயிருந்த, ஓரப்படுத்தப்பட்ட குழுவாக விளங்கிய தலிபான் போராடி, ஆப்கனிஸ்தானில் அரசைக் கைப்பற்றியது. அதற்கு சீஐஏ யின் பழைய கூட்டாளியாகிய ஐஎஸ்ஐ அமைப்பு நிதியுதவி வழங்கியது.

பாகிஸ்தானிலுள்ள பல அரசியல் கட்சிகளும் அதற்கு ஆதரவளித்தன. தலிபான் பயங்கரவாத ஆட்சிக்கும்பலாக மாறியது. அதன் சொந்த மக்களே அதற்கு முதலில் பலியாகினர். முக்கியமாகப் பெண்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். பெண் பாடசாலைகள் மூடப்பட்டு அரசாங்க உத்தியோகங்களிலிருந்து பெண்கள் நீக்கப்பட்டு ஷரியா சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. 'நெறிபிறழ்ந்தோர்' என்று கருதப்பட்ட பெண்கள் கற்களால் எறிந்து கொல்லப்பட்டனர். விபச்சார நடத்தையில் ஈடுபடும் விதவைகள் உயிரோடு புதைக்கப்பட்டனர். தலிபான் அரசாங்கத்தின் கடந்தகால மனித உரிமை மீறல் செயற்பாடுகளை பார்க்கும் போது, யுத்தம் மூலம் அல்லது மக்களின் உயிர்களுக்கும் பயமுறுத்தல் மூலம் அதன் நோக்கங்களி விருந்து திசையைத் திருப்புவதோ சாத்தியமாகப்படவில்லை.

இவ்வளவும் நடந்து முடிந்த பின்னர் ஆப்கனிஸ்தானை மீண்டும் அழிப்பதற்கும் ரஷ்யாவும், அமெரிக்காவும் கைகோர்த்துள்ளதைவிட மோசமான விந்தை இருக்க முடியுமா? அழிவை மேலும் அழிக்க முடியுமா என்பதே கேள்வியாகும். ஆப்கனிஸ்தானில் மேலும் குண்டுகளை வீசுவது கற்குவியல்களைக் சிறிது அசைக்கக்கூடும், சில பழைய கல்லறைகளை உருக்குலைக்கக்கூடும், மரணித்தவர்களுக்கு தொல்லை கொடுக்கக்கூடும்.

அமெரிக்காவின் விசுவாசம் மிக்க கூட்டாளியின் விடயம் எப்படியுள்ளது? பாகிஸ்தானும் பெருமளவுக்கு கஷ்டப்பட்டுள்ளது. நாட்டில் ஜனநாயகக் கருத்துக்கள் வேரூன்றுவதைத்தடுக்கும் இராணுவ சர்வாதிகாரிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு அமெரிக்கா வெட்கப்படவில்லை. சீஐஏ வந்து சேருவதற்கு முன்னர் பாகிஸ்தானில் ஒரு சிறு கிராமிய அபின் சந்தை இருந்தது. 1979-1985 காலப்பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள்களுக்கு அடிமையாகியோரின் தொகை பூச்சியத்திலிருந்து 15 இலட்சமாக மாறியது. செப்டம்பர் 11ம் திகதிக்கு முன்னரும் எல்லையில் கூடார முகாம்களில் 30 லட்சம் ஆப்கன் அகதிகள் வாழ்ந்தனர். பாகிஸ்தானின் பொருளாதாரம் சரிந்து விழுந்து வருகிறது. கோஷ்டி வன்செயல், உலக மயமாக்களின் கட்டமைப்பு போதைப் பொருள் முதலாளிமார் போன்றோரால் நாடு சீரழ்ந்து வருகின்றது. ரஷ்யாவுக்கெதிராகப் போரிடுவதற்கு ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாதப் பயிற்சி நிலைய்ஙகளும், மத்ரஸாக்களும் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டு பாகிஸ்தானுள் பெருமளவு மக்கள் ஆதரவுள்ள அடிப்படைவாதிகளை உருவாக்கியுள்ளன. பாகிஸ்தான் அரசு, பல வருடகாலமாக நிதியளித்து ஆதரவளித்து வந்த தலிபான் பாகிஸ்தானின் சொந்த அரசியல் கட்சிகளோடு பொருளாதார மற்றும் ரூபாய்க் கூட்டக்களை ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது பாகிஸ்தான இத்தனை வருடகாலமாகத் தனது வீட்டில் வைத்து செல்லமாக வளர்த்த பிராணியின் கழுத்தைத் திருகுமாறு அமெரிக்கா கேட்கிறது. (கேட்கிறது?) ஜனாதிபதி முஷாரப் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால் உள்நாட்டு போருக்கு முகம் கொடுக்கும் அபாயம் உள்ளது.

இந்தியா, அதன் புவியியல் அமைப்புக்காரணமாகவும், அதன் முன்னாள் தலைவர்களின் காரணமாகவும் அதிர்ஷ்டவசமாக இந்த விளையாட்டுக்களில் சிக்கிக் கொள்ளவில்லை. இல்லையென்றால் இப்பொழுதிருக்கும் அதன் ஜனநாயகம் என்றோ மரணித்திருக்கும். இன்று இந்திய அரசு, அமெரிக்கா தனது தளத்தைப் பாகிஸ்தானில் அமைக்காமல் இந்தியாவில் அமைக்குமாறு கெஞ்சுவது பயங்கரமான ஒரு விடயமாகும். பாகிஸ்தானின் மோசமான தலைவிதியை இத்தனை அருகிலிருந்து அவதானித்த பின்னரும் இந்தியா இவ்வாறு நடந்துகொள்வது நினைத்துப்பார்க்கவும் முடியாத ஒரு விடயமாகம். நொய்தான பொருளாதாரம் மற்றும் சிக்கலான ஒரு சமூகத்தளம் என்பவற்றைக்கொண்ட ஒரு மூன்றாம் உலகநாடு அமெரிக்கா போன்ற ஒரு வல்லரசுக்கு அழைப்பு விடுப்பது (அமெரிக்கா தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகத் தங்குவதாகக் கூறியபோதிலும்) தலைமேல் அழிவை வரவழைக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

வெளிப்படையாக நிலையான சுதந்திரத்துக்கான நடவடிக்கை இடம்பெறுவது அமெரிக்க வாழ்க்கை முறையை பாதுகாக்கும் வகையிலாகும். அது அநேகமாக அதைப் பூரணமாகக் குடை கவிழ்ப்பதில் முடியக்கூடும். அது உலகம் முழுவதிலும் மேலும் அதிகரித்த கோபத்தையும், பயங்கரவாத நடவடிக்கைகளையும் உருவாக்கும். சாதாரண அமெரிக்க மக்களைப்



படிப்பகம்

பொறுத்த வரையில், அதன் கருத்து மனவுளைச்சல் ஏற்படுத்தப்படும் நிச்சயமற்ற நிலையில் வாழ்க்கை நடத்துவதாகும். எனது பிள்ளை, பாடசாலையில் பாதுகாப்பாக இருப்பது சாத்தியமா? சுரங்கப் பாதையில் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் வாயு காத்திருக்குமா? இன்றிரவு என் அன்புக்குரிய கணவன் வீடு திரும்புவாரா? சின்னம்மை, கொள்ளைநோய், அந்திரக்ஸ் நோய்க்கிருமிகள் சாதாரணமானவை போலத் தோற்றமளிக்கும் விமானங்களிலிருந்து வீசப்படும் உயிரியல் போரியல் குறித்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. அணுகுண்டுகளால் இலட்சக்கணக்கில் ஒரேயடியாக அழிப்பதைவிட, சிறு சிறு கூட்டங்களாகக் கொல்லுவது மேலும் மோசமானதாக அமையும்.

அமெரிக்க அரசாங்கம், சந்தேகமின்றி உலகெங்கிலுமுள்ள சகல அரசாங்கங்களும் யுத்தச் சூழலை ஒரு சாட்டாகப் பயன்படுத்தி மக்கள் உரிமைகளைப் மட்டுப்படுத்தி, பேச்சு சுதந்திரத்தை ஒடுக்கி, தொழிலாளர்களுக்கு கதவடைப்புச் செய்து, இனத்துவ மற்றும் மதச்சிறுபான்மையோருக்குத் தொல்லை விளைவித்து, பொதுநலனோம்புகைச் செலவினங்களை வெட்டிக் குறைத்து, பாரிய நிதி வளங்களை பாதுகாப்புக் கைத்தொழில்களில் பிரயோகிக்க முனைவர். இவற்றினால் விளையக்கூடிய நன்மை என்ன? ஜனாதிபதி புஷ் உலகத்தைப் புனிதர்களால் நிரப்ப முடியாது. அதுபோன்றே 'தீங்கு விளைவுப்போரை உலகிலிருந்து அகற்றவும்'முடியாது. கூடுதலான வன் செயல் மற்றும் அடக்குமுறை மூலம் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியுமென்ற அமெரிக்க அரசு எண்ணுவது அர்த்தமில்லத ஒன்றாகும். பயங்கர வாதம் நோயின் அறிகுறி அன்றீ, நோய் அல்ல. இது கோக்காக அல்லது பெப்சி போன்ற பல தேசியக் கம்பனிகளைப் போன்ற அகல ரீதியிலான ஒரு புலன் நிகழ்வாகும். பிரச்சினை ஏற்படுமென்று கண்டால், மேலும் சிறந்த ஒரு நிலைமையைப் பெற்றுக்கொள்வதற்காக தமது "தொழிற்சாலைகளை" வேறு தேசத்துக்கு மாற்றும் அவர்களின் இயல்பு பல்தேசியக் கம்பனிகளின் நடவடிக்கைகளை ஒத்ததாகும்.

பயங்கரவாதம் ஒரு புலன் நிகழ்வு என்ற வகையில் ஒரு போதும் ஒழியாதிருக்கக்கூடும். ஆயினும் அதைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதென்றால் அமெரிக்கா எடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை ஏனைய தேசங்களுக்கும், மனித இனங்களுக்கும் இந்தப் பூமியில் பங்காளர்களாக வாழ்வதற்கான உரிமையுண்டு என்பதை ஏற்றுக் கொள்வதாகும் இந்த மனிதர்கள் தொலைக்காட்சிகளில் தோன்றாவிட்டாலும் விருப்புகள், துன்பங்கள், வரலாறுகள், பாடல்கள், மனத்துயரங்கள் மற்றம் உரிமைகள் உள்ளவரென்பதை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பதிலாக, அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் அமெரிக்காவின் புதிய யுத்தத்தில் வெற்றியென்று அவர் கருதக்கூடியது எதுவென்று தொலைக்காட்சியில் வினவப்பட்டபொழுது, "அமெரிக்கர்கள் தமது வாழ்க்கை முறையைத் தொடருவதற்கு உலகம் அனுமதிக்கவேண்டுமென்று நம்பவைக்க இயலுமாயின் அதுவே பாரிய வெற்றி" என்ற கூறினார்.

செப்டம்பர் 11ந் திகதியத் தாக்குதல்கள் பாரதூரமாக திடம் மாறிய ஓர் உலகத்தின் வெளிப்பாடாகும் செய்தியை எழுதியது பின்லாடனாக இருக்கலாம். (யார் கண்டார்கள்) அதை விநியொகித்தது அவரின் தூதுவர்களாக இருக்கலாம். ஆயினும் அதில் கையொப்பமிட்டது அமெரிக்காவின் பழைய யுத்தங்களில் பலியானவர்களின் ஆவிகளாக இருக்கலாம். கொரியாவில், வியட்நாமில், கம்போடியாவில் கொல்லப்பட்ட பல பத்துலட்சக் கணக்கானோர் 1982 இல் லெபனானை அமெரிக்க ஆதரவுடன் இஸ்ரேல் ஆக்கிரமித்தபோது கொல்லப்பட்ட 17500 பேர், பாலைவனப் புயல் நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 200,000 ஈராக்கியர், மேற்குக்கரையில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி இறந்த ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் மற்றும் யூகோஸ்லாவியா, சோமாலியா, ஹைத்தி, சிலி, நிக்கரகுவா, எல்செல்வடோர், டொமினிக்கன் குடியரசு, பனாமா போன்ற நாடுகளில் அமெரிக்கநிதி, பயிற்சி, ஆயுத உதவியுடன் பயங்கரவாதிகள், சர்வாதிகாரிகள் மற்றும் இனப்படுகொலையாளர் கரங்களில் உயிர்நீத்த பத்துலட்சக்கணக்கானோரின் ஆவிகள் இந்தச் செய்தியில் கையொப்பமிட்டிருக்கலாம். இந்த நிரல் எந்த வகையிலும் பூரணமான ஒன்றல்ல.

அமெரிக்கா இந்த அளவுக்கு யுத்தங்கள் மற்றும் மோதல்களில் ஈடுபட்டிருந்தபோதிலும் அமெரிக்க மக்கள் பெருமளவுக்கு அதிஷ்டசாலிகளாகவோ இருந்துள்ளனர். ஒரு நூற்றாண்டு காலமாக அமெரிக்க மண்ணில் இடம் பெற்ற தாக்குதல்களில் செப்டம்பர் 11 நிகழ்ச்சி இரண்டாவது மட்டுமேயாகும். முதலாவது சம்பவம் பேர்ள் துறைமுகத்தில் இடம் பெற்றதாகும். இதற்கான பழி வாங்கல் நடவடிக்கை நீண்டபாதையில் சென்று ஹிரோஷிமாவிலும், நாகசாக்கியிலும் முடிவடைந்தது. இந்தத்தடவை என்ன நிகழுமென்று பார்ப்பதற்கு உலகம் காத்திருக்கிறது.

ஒசாமா பின்லாடன் என்று ஒருவர் இல்லாவிடினும் அமெரிக்கா அவரை கண்டுபிடிக்க வேண்டியிருந்திருக்குமென்ற சமீபத்தில் சிலர் கூறினார்கள். ஆயினும் ஒரு வழியில் பார்த்தால் அமெரிக்காவே அவரைக் கண்டுபிடித்தது. 1979ல சிஐஏ தனது நடவடிக்கைகள் ஆப்கனிஸ்தானில் ஆரம்பித்தபோது அங்கு சென்ற புனித போராளிகள் மத்தியில் பின்லாடனும் இருந்தார். சிஐஏ யினால் உருவாக்கப்பட்டு, மத்திய புலன்வாய்வுத் துறையினால் தேடப்படும் தனித்தன்மை பின்லாடனுக்கு மாத்திரமே உரியது. இரு வாரங்களுள் அவர் சந்தேக

www.padippakam.com

நபரென்ற இடத்திலிருந்து பிரதான சந்தேக நபரென்று பதவி உயர்த்தப்பட்டு, அதன் பின்னர், உண்மையான சான்றுகள் எதுவும் அவருக்கெதிராக இல்லாத நிலையிலும், உயிரோடு அல்லது பிணமாகத் தேவைப்படும் நிலைக்குச் சென்றுள்ளனர். விடயங்களை பார்க்கையில் பின்லாடன் செப்டெம்பர் 11 தாக்குகலில் தொடர்புற்றதாக (நீதி மன்ற மொன்றில்) ஏற்றக்கொள்ளப்படக்கூடிய) சான்று எதையம் சமர்ப்பிப்பது இயலாத காரியமாகும். இதுவரையில், அவருக்கெதிராகவுள்ள மிகவும் பாரதூரமான குற்றஞ்சாட்டு அவர் தாக்குதலைக் கண்டிக்கவில்லை என்பது மட்டுமேயாகும்.

பின்லாடன் இருக்கும் இடத்தையும், அவர் செயற்படும் வாழ்க்கைச் சூழல்களையும் பார்க்கும்பொழுது இத்தாக்குதல்களை அவர் தனிப்பட்ட முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியவரென்றோ அல்லது அதற்கு ஊக்கமளித்தவரென்றோ, கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரென்றோ கூறுதல் கடினமானதாகும். வழமையான தலிபான் ஆட்சியாளர் தமது நடவடிக்கையில் நியாயத்தைக் கடைபிடிக்காதபோதிலும், பன்லாடனைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற அமெரிக்காவின் கோரிக்கை விடயத்தில் சான்றை சமர்ப்பித்தால் தாம் அவரைக் கையளிக்கத் தயாராவுள்ளோமென்று நியாயமாகப் பதிலளித்துள்ளனர். கோரிக்கை குறித்து "கலந்துரையாடவே இடமில்லை" என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார். (பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களைக் கையளிக்கும் விடயம் பேசப்படவில்லை. அமெரிக்காவின் வாரன் அன்டேர்சனைக் கையளிக்குமாற இந்தியாவும் ஒரு வேண்டுகோளை ஒரு பக்கத்தில் சமர்ப்பிக்கலாமா? 1984 இல் போபாலில் வாயுக்கசிவு காரணமாக 16000 மக்கள் கொள்ளப்பட்டபோது அவர் யூனியன் கார்பைட் தவிசாளராகவிருந்தார். நாம் தேவையான சான்றுகளை திரட்டியுள்ளோம். கோப்புகள் தயாராகவுள்ளன. அவரை எம்மிடம் ஒப்படைக்க முடியுமா?

ஒசாமா பின்லாடன் உண்மையில் யார்? அதை வேறு முறையில் கேட்பதானால் ஒசாமா பின்லாடன் என்றால் என்ன? அவர் அமெரிக்காவின் குடும்ப இரகசியமாவார். அவர் அமெரிக்க ஜனாதிபதியின் இரகசிய இரட்டை நபர் ஆவார். அழகானது மற்றும் நாகரீகமயப்பட்டதென்று கூறப்படும் அனைத்தினதும் காட்டுமிராண்டித்தன்மை கொண்ட இரட்டைப் பிறவியாவர். அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கை, அதன் துப்பாக்கிப்படகு இராஜதந்திரம், அதன் அணுகுண்டுப் போர்தளபாடக் களஞ்சியசாலை, அதன் 'முழு அளவிலான ஆதிக்க கொள்கை, அமெரிக்கர் அல்லாதோரின் உயிர்கள் விடயத்தில் அதுகாட்டும் உதாசீனம், அதன் காட்டுமிராண்த்தனமான இராணுவத்தலையீடுகள், சர்வாதிகார ஆட்சிக் கும்பல்களுக்கு, அது வழங்கும் ஆதரவு, வெட்டுக்கிளிக் கூட்டத்தைப்போன்ற ஏழை நாடுகளின் பொருளாதாரங்களைச் சாப்பிடும் அதன் இறுக்கமற்ற பொருளாதார நிகழ்ச்சி நிரல்போன்றவற்றால் பாலைவனமாகியுள்ள உலகத்தின் மேலதிக விலா எழும்பிலிருந்து உருவாக்கப்பட்டவரே பின்லாடன். நாம் சுவாசிக்கும் காற்றையும், நாம் நிற்கும் நிலத்தையும், குடிக்கும் தண்ணீரையும், நாம் சிந்திக்கும் சிந்தனைகளையும் திருடிக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் கொள்ளைக்கார பல்தேசியக் கம்பனிகள் இது விடயத்தில் வழங்கிய பங்கு சிறியதல்ல. இப்பொழுது குடும்ப ரகசியம் வெளியாகியுள்ளதால் இரட்டையர்கள் இருவருள் ஒருவர் ஐக்கியமாகி படிப்படியாக மாற்றீடு செய்யப்படக்கூடியவர்களாக மாறிவருகின்றனர். அவர்களின் துப்பாக்கிகளும், குண்டுகளும், பணமும், போதைப்பொருட்களும், உலகை நீண்டகாலமாக வலம் வருகின்றன". (அமெரிக்க ஹெலிகொப்டர்களை வரவேற்கக் காத்திருக்கும் ஸ்டிஞ்சர் ஏவுகணைகள் சீஐஏ யினால் வழங்கப்பட்டவையாகும். அமெரிக்காவின் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு ஹெரோயின் வருவது ஆப்கனிஸ்தானிலிருந்தாகும். புஷ் நிர்வாகம் சமீபத்தில், ஆப்கனிஸ்தானுக்கு 43 மில்லியன் டொலர் மானியத்தை "போதைப்பொருட்கள் மீதான யுத்தத்துக்காக" வழங்கியுள்ளது.

இப்பொழுது புஷ்ஷும், பின்லாடனும் ஒருவரின் பேச்சை மற்றவர் இரவல் வாங்குகின்றனர். ஒருவர் மற்றவரை "பாம்பின் தலை" என்று வர்ணிக்கின்றனர். இருவருமே கடவுளைத் துணைக்கு அழைப்பதோடு, இக்காலத்தில் இறுக்கமற்ற நன்மை, தீமை குறித்த பதங்களை... உபயோகிக்கின்றனர். இருவருமே சந்தேகத்துக்கிடமற்ற அரசியல் குற்றவாளிகளாவர். இருவருமே அபாயகரமான ஆயுதங்களைக் கொண்டுள்ளனர். ஒருவர் அணுகுண்டு போர்தளபாட களஞ்சியசாலையுடன் கூடிய ஆபாசரீதியிலான அதிகாரத்தைக் கொண்டுள்ளார். அடுத்தவர் விரக்தியின் உச்சியிலுள்ளவையின் ஒளிவீசும் அழிவுச் சக்திகளாகக் கொண்டுள்ளனர்.

"நீங்கள் எங்கள் பக்கத்தில் இல்லையென்றால் எங்களுக்கு எதிரானவர்கள் என்றால்" என்ற உலகின் மக்களுக்கு ஜனாதிபதி புஷ் விடுத்த எச்சரிக்கை ஆணவம். மற்றும் அகங்காரத்தின் வெளிப்பாடாகும். இந்தச் தெரிவைச் செய்வதற்கு மக்கள் விரும்பவில்லை. இது அவர்களுக்குத் தேவையில்லை. இதைச் செய்தாக வேண்டுமெனற் கட்டாயமும் அவர்களுக்கில்லை.

மூலம்: அருந்ததிரோய்
இந்திய நாவலாசிரியை
சூழல் இயலாளர்



படிப்பகம்

www.padippakam.com

# சொலிதிரீகள்.

சொந்த இருப்பிடங்களில் வாழ்வதையே விரும்புகின்றனர்.

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டதால் பெரும்பாலான உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் இன்னமும் நலன் புரி நிலையங்களிலும் வாடகை வீடுகளிலும் மிகவும் பரிதாபகரமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களது நீண்ட சேமிப்புகளைச் செலவழித்து முடிந்த நிலையில் தற்போது புதிய கடனாளிகளாக வாழ்கின்றனர்.

நாட்டில் அவசரகால நிலைகள் செயலிழந்ததன் பின்னரும் பாதுகாப்புப்படையினர் பொதுமக்களின் வீடுகளைப் பலவந்தமாகப் பயன்படுத்திக் கொள்வது மனிதஉரிமை மீறல்கள் அல்லவா? எனவே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் 'சரத்து 2இல் குறிப்பிட்ட இயல்பு நிலையை ஏற்படுத்தல் விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

எனவே இது விடயத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மீள்குடியமர்வு தொடர்பான முரண்பாடுகளுக்குத் தீர்வுகளைக் கண்டு வாழு-வாழ விடு எனும் கொள்கைப்பிரகாரம் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களும், அகதிகளும் எதிர் கொள்கின்ற பல பிரச்சினைகளைத் தீர்த்து வாழக் கூடிய நிலையை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும் என ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட மனித நேய அமைப்பகள் ஒன்றியத்தின் அறிக்கை.

(வீரகேசரியில்)

யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டும். அங்கு தமிழுக்காக உயிரையும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தன்மானத் தமிழர்களின் முகங்களைத் தரிசிக்க வேண்டும் என்பது என் நெடுநாளைய அவா, இந்த ஆசை இன்று தான் நிறைவேறியுள்ளது. 1985ஆம் ஆண்டில் போர் நடந்து கொண்டிருந்த போது இந்த மக்கள் படும் இன்னல்களைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறும்வகையில் யாழ்ப்பாணம் வரமுயன்றேன். அதற்கு அன்றைய அரசு தடைபோட்டது.

தமிழகத்திலுள்ள தேசியப் பத்திரிகைகள் தமிழர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி எழுதுகின்றன. தவிரவும் பொடா சட்டம், ஈழத் தமிழர் குறித்த செய்திகளுக்கு மட்டுமன்றி ஆதரவுக்கும் தடை விதிக்கிறது. இந்து மதத்தைத் தழுவுகின்ற வாஜ்பாய் அரசு ஈழத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை உணரமறுக்கிறது.

விடுதலை உணர்வு இந்தியாவில் மேலோங்கும் என்ற அச்சம் காரணமாகவே ஈழப்போராட்டத்தை நசுக்க அது முற்படுகிறது. உரிமைகளை வழங்கப் பேரினவாதிகள் மறுக்கும் போது வெகுண்டெழுவதும் அவற்றைப் பெறப் போரிடுவதும் சிறுபான்மை இனங்களின் இயல்பாகும். இதில் தவறில்லை.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்லும் விடுதலைப் புலிகள் பாராட்டத்தக்கவர்கள். இவர்களின் வழி நடத்தல், அர்ப்பணிப்பு இன்றி விடுதலைப் போர் சாத்தியமில்லை. இவர்களின் குறிக்கோள் வெற்றிபெற வேண்டுமென்பதே என் விருப்பமாகும்.

தமிழர்களின் இன்றைய நிலையை உள்ளது உள்ளவாறு தமிழகத்தில் போய்ச் சொல்ல 'பொடா சட்டம்' தடையாகவுள்ளது. ஆனாலும் இவற்றை எப்படியாவது தமிழக மக்களுக்கு அறியவைப்பது எனது கடமை.

- கவிக்கோ அப்துல் ரகுமான்.

(வீரகேசரியில்)

நாடு சிறந்து விளங்கவும் மக்கள் சமாதானமாகவும் ஒற்றுமையுடனும் வாழவும், சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கவும் எழுத்தாளர்கள் காரணமாகத் திகழ்கின்றனர். எனவே அவர்களுடைய படைப்புக்கள் எதிர்கால சமுதாயத்திற்கு பயனுள்ளதாக அமைய வேண்டும்.

இங்கு 90 எழுத்தாளர்கள் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களின் படைப்புகள் சுமார் 16 லட்சம் ரூபாவிற்கு அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டன.

- அமைச்சர் ராதாகிருஷ்ணன்.

(வீரகேசரியில்)

சென்னையில் ஜனவரி 9 முதல் 19 முடிய 11 நாட்கள் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. தினசரி பெருங்கூட்டம். மொத்தம் 10 கோடி ரூபாவுக்கு புத்தகங்கள் விற்பனை ஆயின என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஆங்கில நூல்களே அதிகம் விலை போயின. தமிழ்ப் புத்தகங்களில் தன் முன்னேற்ற நூல்கள், சமையல், ஜோதிடம், வாஸ்த்து சாஸ்திரம், வைத்திய நூல்களே அதிகம் விற்றன. நவீன இலக்கிய நூல்கள் சுமாராகத்தான் விற்றுள்ளன. என்று பதிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

- வல்லிக் கண்ணன். (ஒரு கடிதத்தில்)

**யாழ்ப்பாணத்திற்கு செல்லும் ஏ-9 பாதையைத் திறப்பதற்கு விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் கருணாவுடன் யுத்தஞ் செய்தார் ஜெனரல் ரத்வத்தை. யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக இராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் குவித்ததுடன், இராணுவ நடவடிக்கை இடம் பெறும் பிரதேசங்களுக்குச் சென்று இராணுவத்தினருக்கு உற்சாகம் வழங்கினார்.**

**ஒரு தடவை ஜெனரல் ரத்வத்தை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர் சென்ற ஹெலிகொப்டர் இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்ட சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பி இருந்தார். இச் சம்பவம் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்றவாறாக விடுதலைப் புலிகளுக்கு அமைந்தது.**

**ஜெனரல் ரத்வத்தையை அழிக்க முடியாவினும் இராணுவத்தினரை பின்னடையச் செய்வதற்கு கருணா தனது முயற்சியில் சோர்வடையவில்லை.**

**ஆனால் கருணா இன்று அவர்களது பாதுகாப்புப்பிரச்சினைகள் தொடர்பாகவும் சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கு சொந்தமான ஹெலிகொப்டர்களிலும் வாகனங்களிலும் வடக்கிற்கும் தெற்கிற்கும் சென்று வருகையில் ஜெனரல் ரத்வத்தை சிறைச்சாலை வண்டிகளில் சிறைச்சாலைக்கும் நீதிமன்றத்துக்கும் சென்று வருகிறார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கருணா உலகையே சுற்றி வரும் பொழுது ரத்வத்தை சிறைச்சாலையில் நான்கு சுவர்களை இன்று சுற்றி வருகின்றார்.**

**('லங்காதீப' (சிங்கள இதழில்)**



படிப்பகம்

www.padippakam.com

# சொல்கிறார்கள்.



கலைகள் எதிலுமே, கலையழகு எனப்படுவது அந்தக் கலைப் பொருளுக்குப் புறம்பானது அல்ல. கலைஞன் எடுத்துக் கொண்ட பாடுபொருள், அதற்குக் கொடுக்கும் உருவம். எல்லாவற்றுக்கும் மேலாக அதில் தன்னை இணைத்துக் கொண்ட சத்தியம் எல்லாவற்றினதும் இயைபும் இறுக்கமும் தான் கலையின் அழகு. இவை எல்லாம் கச்சிதமாக அமையப் பெற்று கலையழகால் வென்ற அரசியற் கவிதைகளும் உண்டு. சரிவரப் பொருந்தப் பெறாமல் துருத்திக் கொண்டு கலையழகால் தோற்றுப்போனதற் சார்புக் கவிதைகளும் உண்டு. எனவே பாடுபொருளால் மட்டும் அழகியலால் உயர்ந்த ஒரு படைப்பைப் படைத்து விட முடியாது.

அத்தோடு கலைத்துவத்தால் ஒரு கவிதை சாகாவரம் பெற்றுவிடும் என்பதையும் நிராகரிக்கிறேன். காலத்தை மீறி ஒரு படைப்பு இருக்க முடியாது. காலத்துடன் அது தன்னுடைய பணியை முடித்துக் கொள்ளும். நாயன்மார்களின் திருமுறைப் பாடல்கள் பலவற்றைக் கறையான் தின்றுவிட்டது என்று ஒரு கதை இருக்கின்றது. கறையான் அல்ல; காலத்துக்கு உதவாததைக் காலமே அரித்தது என்பதுதான் உண்மை. என்னைப் பொறுத்தவரையில் படைப்புக்களை எடைபோட காலத்தை தவிர வேறு எந்தத் தராசு படியும் கிடையாது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை
(தினக்குரலில்)

இனப்பிரச்சினை காரணமாக சமூகங்களுக்கு இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டன. நாட்டின் பொருளாதாரமும் அழிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் முகமாக இன்றைய அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு நாட்டின் எதிர்காலம் கருதி ஆதரவு அளிப்பது எங்களது கடமையாகும். அரசின் முயற்சி வெற்றிபெற மக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும். இந்த ஆதரவை நாம் வெளிப்படையாக காண்பிக்கவும் வேண்டும்.

இந்த நாட்டில் பாட்டாளிகள் யுகம் மலரவேண்டும் என்றால் இன ஒற்றுமை பேணப்பட வேண்டும். அதற்கு நாட்டில் நிலவும் இன்றைய சமாதான சூழ்நிலை நல்ல சகுனமாகும்.

இனப்பிரச்சினைக்கு முடிவுகட்டினாலேயே இன்றைய சமானதானம் நீடித்து நிலைக்கும். எனவே நாட்டின் வளமான எதிர்காலத்தை விரும்பும் சகலரும் அரசின் இன்றைய சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும்.

ராஜா கொலுரே
இலங்கை கம்யூஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர்
(வீரகேசரியில்)

தற்போதைய நிலைமையில் எம்மால் கூறக் கூடியது பிரபாகரனை கைது செய்வதானால் அதற்கு முன்பதாக அவருடன் நெருங்கிய தொடர்புகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோரை முதலில் கைது செய்ய வேண்டும். எமது அறிவுக்கு எட்டியவரை பிரபாகரனுடன் கொடுக்கல் வாங்கல் செய்பவர்களில் முதலாவது நபர் ரணில் விக்கிரமசிங்க, இரண்டாவது மூன்றாவது நபர்கள் விதார் ஹெல்ஹிசன், எரிக் சொல்ஹெய்ம் போன்றோராகும். இவ்விருவரும் வெளிநாட்டவர்களானபடியால் இவர்கள் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிப்பது கடினமானதொன்றாகும். ஆனால் ரணில் விக்ரமசிங்க இலங்கையராகும். பிரபாகரனை கைது செய்ய வேண்டுமானால் ரணில் விக்ரமசிங்காவை கைது செய்ய வேண்டும். இதனூடாக இரகசியப் பொலிசார் பிரபாகரனின் இருப்பிடத்தை ரணில் விக்ரமசிங்க மூலமாக அறிந்து கொள்ள முடியும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெற்றி பெறுவது பிரபாகரனை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமேயாகும்.

(செஞ்சக்தி)
மக்கள் விடுதலை முன்னணி
- இதழ் - ஆசிரிய தலையங்கம் டிசம்பர் 2002

இதுவரை மனித சமூகத்தின் வரலாற்றையும், சமூக மாற்றங்களையும் விளங்கிக் கொள்ளும் முயற்சிகளில் எதுவுமே மாக்ஸியத்தை மிஞ்சவில்லை. மனித விடுதலைக்கான கோட்பாடு என்ற வகையிலும், மாக்ஸியத்துக்கு ஈடாக இது வரை எதுவும் இல்லை. மாக்ஸியத்தின் சமூக விடுதலை இலக்கு மனித சமத்துவத்தை ஏற்கும் எவரும் மறுக்க இயலாதது. எனினும், மாக்ஸியம் அதை அடையும் பாதையைச் சமுதாய யதார்த்தத்தினதும், விஞ்ஞான முறையினதும் அடிப்படையிற் தேடுகிறது. இதைவிட விரிவாக இங்கு சொல்ல வசதி போதாது.

பன்னிரெண்டு ஆண்டுகள் முன்பு சோவியத் யூனியனின் சரிவையொட்டி மாக்ஸியம் செல்லாக் காசாகி விட்டது என்று முதலாளிய வல்லரசுகளும் அதன் ஆதரவாளர்களும் கொக்கரித்தனர். அவர்களது வாய் மூடமுதலே முதலாளியம், பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கத் தொடங்கிவிட்டது. முதலாளித்துவத்துக்கு ஒரு மாற்று வழி வேண்டுகிறவர்களுக்கு மாக்ஸியத்தை விட்டால் உருப்படியான பாதை எதுவுமே இல்லை.

மாக்ஸியவாதிகள் தமது போராட்டத் தந்திரோபாயங்களை சமகால யதார்த்தத்துக்கேற்ப மாற்ற வேண்டும். எனினும், சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அவர்கள் முன்னணியில் நிற்கும் வரை அவர்களை யாரும் வீழ்த்த முடியாது. எங்குமே வரலாறு நேர்கோட்டில் விருத்தியடைந்ததில்லை. ஒவ்வொரு பின்னடைவும், புதிய பாய்ச்சலுக்கான தயாரிப்பாக அமைய வேண்டும். வரலாறு சமூக நீதியின் தரப்பிலேயே தனது இறுதித் தீர்ப்பை வழங்கும். எனினும் எதுவுமே தானாக நிகழ்வதில்லை. போராடாமல் எதுவுமே வெல்லப்பட்டதுமில்லை.

- பேராசிரியர் சி. சிவசேகரம்
தினக்குரலில்.

பல்லாயிரக்கணக்கான வீடுகள், வர்த்தகக் கட்டிடங்கள், ஆலயங்கள் பாடசாலைகள் போன்றவை முற்றாக அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன.

பல நூற்றுக் கணக்கான வீடுகள் பலவந்தமாக பாதுகாப்புப்படையினரால் பாவிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படைத்தேவைகள், வசதிகள் அற்ற நிலையில் மிகவும் பரிதாபகரமான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் 82 ஆயிரத்து 992 பேர் வேலையற்றவர்களாகவும் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 61 பேர் கீழுழைப்பு உள்ளவர்களாகவும் உள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் சுமார் 4 ஆயிரம் பொதுமக்களின் வீடுகளில் படையினர் தங்கியுள்ளனர். பாதுகாப்புப்படையினரின் தங்கலுக்கு இருப்பிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் இலங்கை அரசு பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். ஆனால் அது குடியிருப்பாளர்களின் செலவீனத்தில் அமைவதாக இருக்கக்கூடாது. இடம்பெயர்ந்த மக்கள் தமது



படிப்பகம்

www.padippakam.com

# திசைகள்

http://www.thisaigal.com/main.html

## திசைகீள்? அது என்ன?

இணையத்தில் நீங்கள் இம்மாதம் முதல் உலகளாவிய தமிழ் இலக்கிய இதழை சந்திக்கலாம். உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழர்களின் படைப்புகளை இந்த இதழ் மூலம் நீங்கள் அறிமுகம் செய்து கொள்ளலாம். தமிழின் பல்வேறு முகங்களையும், தளங்களையும் அறிந்து கொள்ளும் வாய்பைத் திசைகள் உங்களுக்கு அளிக்கும்.

## என்ன நோக்கம்?

.இணையம் மூலம் தமிழைச் செழுமைப்படுத்துவது. புதிய தலைமுறை எழுத்துக்களை வளர்த்தெடுப்பது. வாழ்க்கை இனிது என மெய்ப்பிப்பது.

## நோக்கங்களை எப்படி நிறைவேற்றுவதாக எண்ணம்?

இலக்கியத்தை ஒரு கருவியாகக் கொண்டு இவற்றை நிறைவேற்ற விருப்பம். இதழ் என்றால் எத்தனை நாள்களுக்கொருமுறை? திங்கள் இதழாக மலரும். பின் மெல்ல வளரும்.

## ஆசிரியர் குழுவில் யார் யார்?

உலகில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் தேர்ந்த படைப்பாளிகளைக் கொண்டு ஒரு குழு உருவாக்கப்படும். முன்னணிப் பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த, இலக்கிய மனம் கொண்ட எழுத்தாளர் மாலன் தலைமையில் அந்தக் குழு செயலாற்றும்.

## இதழின் இலக்கியக் கொள்கைகள் என்னவாக இருக்கும்?

மகாகவி பாரதி வகுத்தளித்துச் சென்றிருக்கிற இலக்கிய கோட்பாடுகள் இதழை வழிநடத்தும் கொள்கைகளாக இருக்கும். "வசன நடை, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது, தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை": "காசிப்பட்டுப் போல பாட்டு நெய்ய வேண்டும்: அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போல நெய்ய வேண்டும்." மல் நெசவு கூடாது. பாட்டிலே வலிமை தெளிவு, மேன்மை இத்தனையும் இருந்தாக வேண்டும்" என்ற மகாகவின் வாக்குகளே நமக்கு வழிகாட்டி. புதியன விரும்பு என்ற சொல் நமக்கு வேதம்.

## என்ன மாதிரியான படைப்புகளுக்கு இடம் அளிப்பீர்கள்?

வாழ்க்கை, சக மனிதர்கள், இவற்றின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்கிற எழுத்துக்கள், தமிழ் மொழிக்கு கனமும், வளமும் சேர்க்கிற படைப்புக்கள், சமூகம் மற்றும் தனிமனித மேம்பாட்டுக்கு உதவும் எழுத்துக்கள். இவற்றை மகிழ்வுடன் வரவேற்கிறோம். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் என்ற பாரதியின் நம்பிக்கையை திசைகளும் ஏற்றுக்கொள்கிறது. தனி மனித அவதூறுகள், மத சழக்குகள், பெண்களை எள்ளும் அல்லது உடல் ரீதியாக எதிர் கொள்ளும் மனப் போக்குகள், இளைஞர்களை ஆற்றல் குறைந்தவர்களாக, பலகீனர்களாகக் கருதும் மனோபாவம் இவற்றைத் திசைகள் நிராகரிக்கும்.

## என்னென்ன பகுதிகள் இடம் பெறும்?

- சிறுகதைகள்
- கவிதைகள்
- சிந்தனைகள்
- புத்தகச் சுருக்கங்கள்
- நூல், இசை, கலை, திரைப்பட விமர்சனங்கள்
- பேட்டிகள்
- விவாதங்கள்
- தமிழ் கணினிப் பயன்பாடு பற்றிய தகவல்கள், விவாதங்கள்
- இன்னும் பல.

## வாக்குறுதி ஏதேனும் உண்டா?

செய்வதைச் சிறப்புறச் செய்வது, செய்வதை ஆக்க பூர்வமாகச் செய்வது. இவற்றில் திசைகள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறது.

*உலகின் பல்வேறு திசைகளிலும் வாழ்கின்ற தமிழை மேன்மைப் படுத்தும் படைப்பாளிகள் 'திசைகள்' இதழின் மதியுரைக் குழு உறுப்பினராகப் பணியாற்றவுள்ளனர்.*
*இலங்கை உறுப்பினர் செ. யோகநாதன்.*



படிப்பகம்

# வண்டில்

சிங்கள மூலம் .
சோமரத்ன பாலசூரிய

தமிழில் .
மடுளுகிரியே விஜேரத்ன

சுற்றிவர முள்ளுக் கம்பிகளாலும், மணல் மூடைகளாலும் பாதுகாப்பு செய்யப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவர் ஒரு பொலிஸ் சாரதியாகும். பொலிஸ் உடையை அணிந்து கொண்டு வண்டியை ஓட்டிக்கொண்டு வரும் அவரைக் கண்டவர்கள் எவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு பயத்தினால் வேறு பக்கம் திரும்பிக் கொண்டனர். துப்பாக்கியைத் தாங்கிக் கொண்டு காவலுக்கு நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு 'குபீர்' என்று சிரிப்பு வந்து விட்டது. பொலிஸ் சீருடை அணிந்திருந்த படியாலே அவர் மௌனமாக தலையை குனிந்த வண்ணம் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றார். அவர் மாட்டை அவிழ்த்து வண்டிச் சில்லில் கட்டிவிட்டு பொலிஸ் நிலையத்தை நோக்கி வரும்பொழுது வண்டிக்காரனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வண்டிக்காரன்தானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அந்த சாரதி சற்று நேரம் வண்டிக்காரனையும் இன்னும் சொற்ப நேரம் வண்டியையும் மாட்டையும் ஏறெடுத்துப் பார்த்து "இவன்தானா" என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமலிருந்தார்.

"பெயர்?"

"ரணசிங்க"

"வயது?"

"நாற்பத்தினாலு"

"தொழில்?"

"வண்டித் ஓட்டுவது"

"கல்யாணம் முடித்தவரா?"

"இல்லை"

"வசிப்பிடம்?"

"வண்டியில்"

"பிறந்தது எங்கே என்றுதான் நான் கேட்கிறேன்"

"பிறந்தது திவுல்லேவ. வசிப்பது வண்டியில்."

"நீர் படித்திருக்கிறீரா?"

"ஆம்"

"எத்தனையாம் வகுப்பு"

"சிரேஷ்ட தராதரம் பாஸ்"

பொலிஸ் உத்தியோகஸ்தன் சற்று ஓய்வெடுத்தான். சந்தேகப் பேர்வழிக்குத் தெரியாமலேயே உச்சிமுதல் உள்ளங்கால்வரை அடர்த்தியாகவும், கருப்பாகவும் வளர்ந்து சுருண்டிருந்த தலை முடியையும், தாடியையும், இடைக்கிடையே நரைத்திருந்த மயிரையும் வெற்றிலை சாப்பிட்டதனால் காவிபிடித்து தேய்ந்து போயிருந்த பற்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். உள்வாங்கியிருந்த கூர்மையான சிறிய கண்கள் தன்னுடைய பொலிஸ் உத்தியோக குறிப்பை நோக்கி படிந்திருந்ததை அவன் கண்டான்.

"நீர் அந்தக் காலத்தில் அவ்வளவுக்குப் படித்திருந்தும் ஏன் வேலைக்குப் போகவில்லை."

"ஏன் நான் தான் வேலை செய்கிறேனே?"

"படிப்புக்கு ஏற்ற உத்தியோகத்தைப் பற்றித்தான் நான் கேட்கிறேன்?"

"அப்படியென்று ஒன்று இருக்கின்றதா?"

இப்படியான ஒரு பதிலை அவனிடமிருந்து எதிர்பார்த்த பொலிஸ் உத்தியோகஸ்தன் இரு விரல்களுக்கிடையே இருந்த பேனாகையோடேயே அவனுடைய கன்னத்தில் இரண்டு அறைகள் விட்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனின் அடிகளை பொறுமையுடன் வாங்கிக் கொண்ட வண்டிக்காரன் அதுபற்றி எதுவுமே அலட்டிக் கொள்ளவில்லை. எந்தவிதமான உணர்ச்சிகளும் அவனிடமிருந்து வெளிப்படவில்லை. அவனின் உள்வாங்கிய விழிக்கோளங்கள் உணர்ச்சியில்லாமல் பொலிஸ் உத்தியோகஸ்தனுடைய குறிப்பை நோக்கியே நிலைத்திருந்தது. தன்னுடைய கையிலிருந்து தவறிவிழுந்த 'போல்போய்ன்ட்' பேனாவை அவன் பொறுக்கித் தருவான் என்று பொலிஸ் உத்தியோகஸ்தன் நினைத்தான். கொஞ்ச நேரம் பாத்துவிட்டு ஆவேசம் வந்தவனைப் போல் எழுந்து நின்ற பொலிஸ் உத்தியொகஸ்தன் இரண்டு கைகளாலும் வண்டிக்காரன் தலை மயிரைப் பிடித்து பல தடவை ஆட்டி நிறுத்தி வைத்தான்.

"நல்லாப் புரிந்துக் கொள். கேட்பதற்கு மட்டும் பதில் சொல். சும்மா பண்டிதனாக கதைத்துவிட்டு படிப்பைக் காட்டி சாகாதே. நீ எங்கே இருகிறாய் என்று நல்லா நினைத்துக் கொள்."

வண்டிக்காரன் அதொன்றும் கேளாதவன் போல் இருந்தான். அதேவேளை பொலிஸ் உத்தியோகஸ்தன் ஏதோ ஒரு காரணத்திற்காகப் போவது போல் நடந்து, வீசப்பட்டிருந்த பேனாவை பொறுக்கிக் கொண்டு திரும்பவும் தன்னுடைய ஆசனத்தில் வந்து சரியாக அமர்ந்து கொண்டான்.

அடுத்த கேள்வி என்னவென்று அவன் சொற்ப நேரம் யோசித்தான். இத்தகைய கேள்விகள் கேட்டுப் பழக்கமில்லாத படியாலும் பல்வேறு சந்தேகப் பேர்வழிகளிடம் அடுக்கடுக்காக கேட்கும் கேள்விகளுக்கும், அவர்கள் கொடுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

மறுமொழிக்கும் எதிர்மாறாக, இந்த வண்டிக் காரனிடம் தான் கேட்கும் கேள்விக்கும் அதற்கு அவன் கூறும் பதில்களும் வித்தியாசமாக இருப்பது அவனுக்கு சிறிது அதிர்ச்சியையும், அதேசமயம், கோப உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. அவன் அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு வண்டிக்காரன் முகத்தைப் பாரத்தான். தலைமயிரைப் பிடித்திழுத்ததால் கலைந்துபோன சுருண்ட நீண்ட மயிர் பொம்மிப்போய் ஆறடி உயரமான அவனை இன்னும் உயரமானவனாக எடுத்துக் காட்டி நின்றது. அவனுடைய பரந்த தோள்களும், அங்கொன்றும், இங்கொன்றுமாக நரைத்து வளாந்திருந்த தாடியும் தன்னையே பாாத்திருந்த கூர்மையான கண்ணும் முழங்கால்வரை நீண்டிருந்த மெலிந்த நீண்ட கரங்களும் பொலிஸ் உத்தியோக்ஸ்தனின் மனதில் பீதியை உருவாக்கியது.

தன்னிடமிருந்து 'போல் பொயிண்ட' பேனாவை புத்தகத்தின் நடுவில் வைத்து புத்தகத்தை மூடிய பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனைப் பாாக்காமலே அப்பால் போனான். வண்டிக்காரன் அப்படியே நின்று கொண்டிருந்தான். பொலிஸ் கட்டிடத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு ஜீப் வண்டியும், அதற்கும் கொஞ்சம் தள்ளியிருந்த வண்டியும் சில்லில் கட்டப்பட்டிருந்த மாடும் அந்த மாட்டின் வாயிலிருந்து தள்ளிக் கொண்டிருந்த நுரையும் அவன் கண்களுக்குப்பட்டன. கண நேரத்தில் அந்த உருவங்கள் கரைந்து போவதைப் போல் அவனுக்குத் தெரிந்தது. முண்டாசு கட்டிக் கொண்ட மனிதர்கள் வெகு வேகமான நடையில் பொலிஸ் நிலையத்தைப் பார்த்தும் பாராமலும் குனிந்தபடி முன்நோக்கி நடக்கின்றனர்.

'என்னுடைய உத்தியோகம் எனக்குப் பொருந்தமானது; மற்றவர்களுக்குப் பொருத் தமில்லாதது போல் படுகிறது. படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் யாராவது செய்கிறார்களா? ஆங்கில மொழியும் இலக்கியமும் உட்பட, நான் சிரேஷ்ட தராதரப்பத்திரத் தேர்வில் நன்றாக சித்தியடைந்துள்ளேன். தமிழ் முதலாளிகளிடம் நான் தமிழில்தான் பேசுவேன். என்னுடன் படித்த குணரத்ன அன்று 'பிலம் பெயர்' சஞ்சிகையில் வெளிவந்த நர்கிஸ் போன்ற அழகான நடிகைகளின் படங்களை வெட்டி ஒட்டிக் கொண்டிருந்தவன், இன்று அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்று கிறான். டிமை பேப்பரில் நாள் முழுதும் தூயகணிதப் பயிற்சி செய்த நான் இன்று வண்டி ஓட்டுகிறேன். அவர்கள் அந்தந்த இடத்திற்கு எப்படிப் போனார்கள் என்றுதான் கேள்வி கேட்க வேண்டுமே தவிர என்னுடைய தொழில் பொருத்தமானதல்ல என்றா கேட்பது?,

"ஆ.............. இப்போது இரு. இருந்து நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லு."

பொலிஸ் உத்தியோகஸ்தனின் முரட்டுக் குரலும் அவனுடைய தோற்றமும் இப்போது தளர்ந்துவிட்டது போல் அவனுக்குத் தெரிந்தது. மேசை மீதிருந்த தொப்பியை அவன் அணிந்தது ஏனென்று வண்டிக்காரனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அது அவனுடைய கடமை என்று அவன் நினைத்தான். வண்டிக்காரன் ஆசுவாசமாக மனசில் எந்தவித பயமுமில்லாமல் தன்னுடைய இடம் போல் கருதி வாங்கின்மேல் இருந்ததையும் தன்னுடைய இரு கைகளையும் அவன் மேசை மீது வைத்துக் கொண்டு முன்னால் தலைசாய்ந்த வண்ணம் இருந்ததையும் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு இந்த வண்டிக்காரன் தன்னையே கேள்வி கேட்கப் போகிறானோ என்று மனதுக்குப் பட்டது. கைகளை மேசை மீதிருந்து எடுக்கும்படி கட்டளையிடும் மனோபாவம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. கடைசியாகக் கேட்ட கேள்வி என்னவென்று அறிந்து கொள்வதற்கு மீண்டும் அவன் புத்தகத்தைப் புரட்டினான்.

"உன்னுடைய நெருங்கிய நண்பர்கள் யார்?"

"மாடும், நாயும்"

"அடப் பேயா நீ என்ன சொல்கிறாய்?"

"வண்டி இழுக்கும் மாடும், படங்கில் இருக்கும் நாயும்."

பொலிஸ் உத்தியோகஸ்தன் எழுந்து நின்றான். ஆறு, ஏழு அடி நீளமான மேசையை வளைய எட்டி நடந்து பாதி சுவருக்குப் பின்னால் சுற்றிவரும் பொழுது வண்டிக்காரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். வண்டிக்காரனின் புறங்கை இரண்டும் பெரிய குறடு இடுக்கில் அகப்பட்டது போல் அவனுக்குப்பட்டது. அத்துடன் அவன் பாதி சுவருக்கு மேல் இழுபட்டு மண்டபத்துக்குள் போனான். அவன் முட்டிய சுவர் காறை பெயர்ந்து சிதறிக் கிடந்தது. அத்தோடு வட்டத்தின் நாலில் மூன்று சுழற்சி சுழன்று அவனது வலது கையால் ஒரு மனிதனால் தாங்கவே முடியாத பலத்த அறையொன்றை வண்டிக்காரன் கன்னத்திற்கு ஓங்கிவிட்டான். வண்டிக்காரன் அதை எதிர்பார்த்தே இருந்தான். இடுப்பின் வலியைப் பொறுத்துக் கொண்ட அவன் பின்பக்கம் ஒருபாகை குனிந்தபடி அவன் அறைந்த அறையைத் தவிர்த்துக் கொண்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அவன் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இரு கால்களும் பின்னிக் கொண்டன. முழங்கால் குத்திட்டபடி கையை ஊன்றிக் கொண்ட அவன், கைகள் இடுக்கின் வழியாக வண்டிக்காரனைப் பார்த்தான். வண்டிக்காரன் தலையைத் திரும்பியபடி பின்னால் பாாத்த வண்ணமே வலது கையால் இடுப்பைத் தடவிக் கொண்டிருந்தான்.

அத்துடன் மெல்ல விசிலடித்துக் கொண்டு கைகளிரண்டையும் தடவியபடியே, ஏதோ காரணத்தையொட்டி மண்டபத்தைப் பார்த்து விட்டுப்போக அங்கு வந்த இன்னொரு பொலிஸ் காரன் நடந்ததை மோப்பம் பிடித்தவனைப்போல் 'வேலையைக் கொடுக்கவா' என்று சொல்லிக்




படிப்பகம்

www.padippakam.com

கொண்டு சட்டென்று வண்டிக்காரனுடைய கையை முறுக்கிச் சுழற்றி வெகுதூரத்திற்குத் தள்ளி விட்டான். அத்தோடு பழையநிலையில் மீண்டும் எழுந்து ஆயத்தமாக இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனுடைய விலாப்புறத்தை நோக்கி காலால் எட்டி உதைத்தான். வண்டிக்காரன் பின்னால் உந்தப்பட்டுப் போக அடுத்த பொலிஸ் உத்தியோகஸ்தன் முன்னே குனிந்து கையைத் தட்டி குதித்து எழுந்து அவனது முகத்தில் அறை விட்டான். வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் கறுத்துப்போய், பதமான ஓரளவு வற்றிப்போன அவனது கன்னங்கள் வெடிக்குமளவுக்கு வீங்கின. வண்டிக்காரன் தனது வலது கை நடுவிரலால் கன்னத்தை பட்டும் படாமலும் தடவிப் பார்க்கும் பொழுதே அவன் அடிவயிற்றில் விழுந்த கால் உதையினால் ஒரு மரம் அடியற்று விழுவது போல் விழுந்தான்.

அவனுக்கு உணர்வு வந்து விழித்தபோது அவன் சிறைக் கூண்டுக்குள்ளே இருந்தான். பொறுக்கமுடியாத அளவு சிறுநீர் கழிக்க வேண்டியும், விலா எலும்புக்ள நொறுங்கியது போது ஏற்படும் வேதனையும் தண்ணீர்த் தாகமும் அவனுக்கு உண்டானது. ஏதோ ஒரு காரணத்தினால் கண்ணில் நீர் திரைகட்டிக் கொண்டது. அவன் மிக சிரமத்தோடு குனிந்து தன் இரு கண்களையும், நெற்றியையும் துடைத்துக் கொண்டான். இடைக்கிடையே புறப்படும், வரும் ஜீப் இரைச்சல்களும் சப்பாத்து ஓசைகளும் பின்னர் யாரோ ஒருவர் விசில் ஊதும் சத்தமும். அதன் பின்னர் அமைதியான நிலையும் ஏற்பட்டது. மாடும், நாயும், வண்டியும் அவன் நினைவுக்கு வந்தன. அவன் மெதுவாகக் காலை ஊன்றி கூண்டிலிருக்கும் கம்பிகளைப் பிடித்தபடி அண்ணாந்து அரைச் சுவருக்கு மேலாக பொலிஸ் மேசைக்கு அப்பால் வீதியைப் பாத்தான். மாடு காலைத் தூக்கிய வண்ணம் முன்னர் இருந்தபடியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தது. வண்டியின் நுகத்தடி கீழே வைக்கப்பட்டிருந் ததனால் வண்டி மிகவும் ஏற்றத்தோடு இருந்தது என்பதை உணர்ந்து கொண்டான். நுகத்தடி உடைந்து போய் விட்டதோ என்று அவனுக்குள் ஒரு யோசனை உண்டானது. போர்ட்டிகோவிலிருந்த தூண் மறைத்தபடியால் வண்டி



www.padippakam.com

இரண்டாகி விட்டதுபோன்ற தோற்றம் தருவதை கடைசியாக தீர்மானித்தான். இப்படித் தொடர்ந்து சில தினங்கள் கடந்துபோனால் நுகத்தடியை கறையான் அரித்துவிடும். எந்த நேரத்திலாவது கேள்விகேட்க கூப்பிட்டால் தனது மாட்டுக்கும், நாய்க்கும் உணவும், தண்ணீரும் கொடுக்கும்படி கூறவேண்டும். நாய் படங்கில் படுத்துக்கிடக்கும் என்று இறுதியாக யோசித்தான்.

ஆனாலும் மாலைப் பொழுதில் அவனை யாருமே விசாரணைக்கு உட்படுத்தவில்லை. அடிக்கடி ஜீப் வண்டியில் கொண்டு வருபவர்கள் வரவர கூடுதலாக இருந்தது. வந்து சரணடைந்தவர்களும் இருந்தார்கள். அவனிருந்த கூண்டுக்குள் இன்னும் இரண்டு பேரை உள்ளே போட்டார்கள். அவர்களை உள்ளே தள்ளிவிட்ட பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனை ஏறெடுத்துப் பார்க்காமலேயே சிறைக் கதவை மூடிவிட்டுப் போனான்.

அந்திப்பொழுதில் அவனை ஓ. ஐ. சி. யின் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அவனுடன் இன்னும் ஒருவர் சிவில் உடையுடன் நின்றார். இரண்டு பேரும் அவனைப் பற்றித் தெரிந்த விபரங்களை ஆங்கிலத்தில் சுருக்கமாக பேசிக் கொண்டார்கள்.

கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். வண்டிக்காரன் மாட்டுக்கும், நாய்க்கும் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டான். ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரை அழைத்து மிருகங்களுக்கு உணவும், தண்ணீரும் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

"மாட்டுக்கும், நாய்க்கும் தின்னவும், தண்ணீரும் கொடுக்கும் நிலையும் எங்களுக்கல்லவா ஏற்பட்டிருக்கிறது." அப்பால் போகும் பொலிஸ் உத்தியோகஸ்தர் சொல்வது காதில் விழுந்தாலும் அதைக் கணக்கில் எடுக்காமல் இருந்தார்கள்.

"நீ அன்று பயங்கரவாதிகளுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தாயா?"

"நான் சில பேருக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தேன். ஆனால் அவர்கள் பயங்கரவாதிகளா இல்லையா என்று எனக்குத் தெரியாது."

"ஏன் சமைத்துக் கொடுக்க நினைவு வந்தது?"

"நான் பின்னேரம் சமைக்க ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அவர்களுக்கும் சாப்பாடு சமைத்துத்தர வேண்டும் என்று கேட்டார்கள். என்னிடம் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் சிறியவை. அவர்கள் பெரிய தட்டு முட்டுச் சாமான்களைக் கொண்டு வந்திருந்தார்கள். நான் சமைத்தேன். அவர்களும் ஒத்தாசை செய்தார்கள்."

"அவர்கள் யார் என்று உனக்கு முன்பே தெரிந்திருக்கவில்லையா?"

"இல்லை"

"முன்பு தெரியாதவர்களுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுக்கும் பழக்கம் உண்டா?"

"பசியால் இருப்பவர்கள் என்றால் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் கூட இருக்கும் அளவு சாப்பாடு கொடுப்பேன்."

"அது உன்னுடைய வீடு இல்லைத்தானே?"

"எனக்கு வீடு இல்லை. ஏழு நாட்களும் ஏழு இடங்களில் கழிந்து போகும். பின்னேரம் ஒரு சந்தையில் சாமான்களை இறக்கிவிட்டு, மறுநாள் அந்தச் சந்தை முடிந்த பிறகு சாமான்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு மற்ற சந்தைக்குக் கொண்டு போவேன்."

"சாப்பாடு சமைக்க ஏன் உன்னையேதேடிக் கொண்டு வந்தனர்?"

"அது எனக்குத் தெரியாது. நான் சனிக்கிழமை ஓடைப் பக்கம் போவேன். மாட்டை நன்றாகக் குளிப்பாட்டுவேன். நாயையும் குளிப்பாட்டுவேன். அங்கு நல்ல நிழல். ஒரு வீட்டை விட சுகமாக இருக்கும். அன்றுதான் நான் வண்டிச் சில்லுகளுக்கு எண்ணெய் போடுவேன். என்னுடைய மாட்டின் கொம்புகளுக்கும், நெற்றிக்கும் வேப்பெண்ணை பூசுவேன், ஈக்கள் மொய்க்காமல் இருக்க. அப்போது எனக்கு நன்றாகப் பசிவரும். தனிமனிதனுக்கு சமைப்பது ஒரு சோம்பேறித் தனமான வேலை. அதுவும் கதைத்துக் கதைத்துச் சமைத்தால் கஷ்டம் தெரியாது"

"யாரோடு பேசுவாய்?"

"மாட்டோடும், நாயோடும்."

"என்ன மொழியில்?"

"நேரத்திற்கு ஏற்றது போல வாய்க்கு வந்தபடி எந்த மொழியிலும் பேசுவேன். எங்களைப் போல அவைகளுக்கும் பேசும் முறையில் புரியும். குளிக்கச் செல்லும் போது நாய்க்குத் தெரியும். ஆனால் ஒரேயடியாகத் தாவிச் சென்று

## ஈழத் தமிழில் எமிலிஜோலா

**எமிலிஜொலா புகழ் பெற்ற பிரஞ் நாவலாசிரியர். இவரது 'நாநா' என்ற நாவல் உலக இலக்கியத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பல மொழிகளில் 'நாநா' மொழிமாற்றம் செய்யப்பட்டது. நூலாக வெளிவந்து விற்பனையில் சாதனை படைத்தது.**

**தமிழிலே 'நாநா'வை. முழுமையாக மொழி பெயர்த்து சுதந்திரன் இதழில் வெளியிட அ. ந. கந்தசாமி முயன்றார். முயற்சியில் வெற்றி கண்டார். அப்போது இங்கும் அது பரபரப்பை உண்டாக்கிற்று.**

**'நாநா'வை முழுமையான நூலாக வெளியிட அ. ந. கந்தசாமி ஆசைப்பட்டார். இன்றுவரை அது தமிழிலே சாத்தியமாகவில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

ஓடையில் குளிக்காது. ஆதற்குக் குளிக்கச் சொல்லும் போது அது வேறுபக்கமாக ஓடிச்செல்லும். அப்போது தூஷணத்தால் பேச வேண்டும். ஒரு தரம் அதட்ட வேண்டும். அப்போது ஓடிப்போய் ஓடைக்குள் பாயும். மாடும் அப்படித்தான்''

"ஓ சும்மா இருக்கும் போது புத்தகம் ஏதாவது வாசிப்பாயா?"

"பிரயோசனம் இல்லை. ஒரு பிரயோசனமும் இல்லை. ஏதாவது பேப்பர் துண்டுகளைப் பொறுக்கி கொண்டால் வாசிப்பேன்''

"அரசியல் கட்டுரைகள் இருந்தால்?''

"இல்லை எழுத்து மறந்து போகாமலிருக்க''

அவனைப் பார்க்கும் போது மடையனைப் போலத் தெரியவில்லை. அடையாள அணிவகுப்பு வைப்பது நல்லதென்று அவர்கள் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண் டார்கள்.

"நீ எவ்வளவுவரை படித்திருக்கிறாய்?''

சிரேஷ்ட தராதரம் சித்தியடைந்தவன் என்றும் தான் ஆங்கில மொழி மூலம் படித்தவனென்றும், தமிழைப் பேசுவதற்கும் முடியும். ஆயினும் எழுதுவதற்கு எழுத்தெல்லாம் மறந்து போய்விட்டதென்றும் கவனமாக தெரிந்தெடுத்த வாத்தைகளால் இலக்கணப் பிழையற்ற ஆங்கிலத்தில் சொன்னான். சிறிது காலம் பேசாதபடியாலும் வெற்றிலை போட்ட நாக்குத் தடித்தபடியாலும் வாயில் வார்த்தை தட்டுத் தடுமாறி சிதறியதுபோல் அவனுக்குத் தெரிந்தது.

அதே வேளை ஒரு அமைதியும் அங்கு உண்டானது. திகைத்துப்போன அந்த உத்தியோகஸ்தர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல் கதிரையில் மௌனமாக இருந்தனர்.

சிறிது நேரத்தின் பின் பெருமூச்சுவிட்ட சிவில் உடையிலிருந்த அதிகாரி அடையாள அணிவகுப்பு வைத்து முடித்து விடுவோமா என்று சிங்களத்தில் கேட்டார்.

**பொ**லிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஐந்தாறு இளைஞர்களை வரிசையாக நிற்பாட்டி வைத்தார். அவர்களுக்குள் தாடிக்காரர்களும், மீசை அரும்பாதவர்களும் இருந்தனர். ஆனாலும் இவர்களுக்கு இரண்டு பொதுத் தன்மை இருந்தது. அதில் ஒன்று புருவம், மூக்கு உதடு வீங்கி இரத்தம் கசிந்து விகாரமாக இருந்தது. மற்றது ஒருவருக்கும் பாரிய உடம்பு இருக்கவில்லை.

"அன்று சாப்பாடு சாப்பிட்ட யாராவது இங்கு இருக்கிறீர்களா?

அவன் சற்றுநேரம் அந்த முகங்களை கவனித்துப்பார்த்தான். இருந்தாலும் சொல்ல வேண்டுமா என்ன? அடுத்து மற்றவர்களைப் பற்றி அக்கறையோடு பார்ப்பதும் அவர்களைக் கவனிப்பதும் அவனுக்கு ஒரு பழக்கமான விசயமல்ல. ஆரம்ப விசயங்களையும் முடிவான விசயங்களையும் கேட்பது இவனுடைய பழக்கமுமல்ல. அவனுக்கு எல்லோரும் ஒன்று தான்.

"அப்படியென்றால் ஒருவரையும் தெரியாது? அவனை உள்ளே போடு.''

பொலிஸ் உத்தியோகஸ்தர் அவனை இழுத்துக் கொண்டு போய் சிறைக் கூண்டுக்குள் தள்ளி விட்டான். கூண்டின் ஒரு மூலையில் சாய்ந்து கொண்டிருந்த முகம் வீங்கி கறுத்துப் போயிருந்த இருவரும் திடுக்கிட்டு எழும்புவதற்கு முயன்று மீண்டும் நித்திரையானார்கள். சிறுநீர்கடுப்பு, நெஞ்சும், விலாப்புற வேதனையும் இவ்வளவு தூரம் இருக்கிறதென்றால் மயங்கி விடுவோமோ என்று அவன் நினைத்தான். இரவில் அடிக்க கேட்ட புலம்பலும், சத்தங்களும், வெடிச் சத்தங்களும் நித்திரைக்கு ஒரு தடையாக இருந்தன. ஓரிரு நாட்கள் கழிந்து போக தாகம், பசி, நெடி, புலம்பல், தூசணங்கள் பழகி ஏற்கத்தக்கதாக இருந்தன.

ஆனாலும் தாங்க முடியாத துர்நாற்றம்தான். இதையெல்லாம் மறந்து நல்லதொன்றை நினைப்பதற்கு முடிந்தால் எவ்வளவோ இதமாக இருக்கும்?

'நான் இங்கு சிறுநீர் கழித்தாலும் என்னுடைய நாய் வெகுதூரம் போய்விட்டு என்னைப் பார்த்து, தவறில்லை என்று நினைத்ததன் பின் தான் சிறுநீர் கழிக்கும். என்னுடைய மாடு தண்ணீரில் சிறுநீர் கழிப்பதோ சாணம் போடுவதோ இல்லை. குளிப்பதற்கு முன்பு அது அந்த இரண்டு காரியங்களையும் செய்யும். கடந்த நாட்களிலே நான் ஒரு வேதனையுடனேயே வாழ்ந்தேன். எதைப் பற்றியும், தீவிரமாக யோசிப்பதற்கோ, தவறைப் பற்றி யோசிப்பதற்கோ முனைவதில்லை. ஒரு கிழமைக்கு ஒரு தடவை கடந்து போகும் வயல் வெளிகள், பாலங்கள், வடிகால்கள், சேற்றுக் கிடங்குகளில் கிடக்கும் எருமை மாடுகள், வயல் வெளி மீதாகப் பறந்தோடும் கொக்குகள், கிளிகள் தேக்குமரத் தோட்டங்களில் சாம்பல் நிறமான மேகங்களைத் தழுவும் மலை, மழை, வெயில் என்னுடைய உலகமாகும். மாடும், நாயுமே என் நண்பர்களாகும். நான் அதிகமாக மாட்டோடுதான் கதைத்துள்ளேன். நான் அதற்கு பாட்டுகள் படிப்பேன்.'

இந்த எண்ணங்களுக்குள் அவனுக்கு மாட்டின் நினைவு வந்த விட்டது, அதன் கொம்பிலிருக்கும் பித்தளைப் பூணைபளபளக்கத் தேய்க்க வேண்டும் என்றும், தேய்ந்துபோன லாடத்தை அடிக்க வேண்டும் என்றும் யோசித்தான். லாடம் அடிப்பதற்கு மாட்டைப் புரட்டிப் போட்டு வதையும் கொடுக்க வேண்டும். லாடம் அடிக்காவிட்டால் வழுக்கி கால்கள் உடைந்துவிடும். இந்த இரண்டு கிரியைகளிலிருந்தும் விடைபெறுவதற்கு என்றைக்குமே முடியாது. அடிமட்டம்வரை தேய்ந்துப் போவதைப் பார்த்துக் கொண்டிருப்பதை விடலாடம் அடிப்பதே சரி.

அன்று பகல் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் வந்து கூண்டுக்குள்ளிருந்து அவனை வெளியில் எடுத்தார்.

"ஏன்டா உன்னுடைய ஊரெது''

ஒரு தடவை என்னுடைய வசிப்பிடத்தை தெரிந்து சொல்லப்போய் என் விலா எலும்பை உடைத்தார்கள். வசிப்பிடம் வண்டியில் என்றும்



படிப்பகம்

www.padippakam.com

## ஈழத்தமிழில் ருஷ்ய இலக்கியம்

**ஈழத்து இலக்கிய முன்னோடிகளான இலங்கையர் கோனும், சி. வைத்திலிங்கமும் ருஷ்ய இலக்கிய மேதையான ஐவான் துர்க்கனேவை மிகவும் விரும்பிப் படித்தவர்கள். இவர்கள் இருவரும் ஐவான் துர்க்கனேவின் படைப்புக்களை தமிழிலே மொழிபெயர்த்திருக்கிறார்கள்.**

**உலகின் பல மொழிகளிலும், மொழி பெயர்க்கப்பட்ட துர்க்கனேவின் 'முதற் காதல்' என்ற நாவலை அதே பெயரில் இலங்கையர்கோன் மொழிபெயர்த்து தமிழகத்தில் 'கலைமகள்' வெளியீடாக வெளிவந்து பெருத்த பாராட்டைப் பெற்றது.**

பிறந்த இடம் திவுல்லேவ என்றும் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இப்பொழுது வசிப்பிடம் எங்கே என்று மீண்டும் கேட்கிறார்கள். தேவையான விடயத்தைத் தெரிந்து கொள்வதற்கு யாரும் எவரும் எதையும் கேட்பார்கள். அதற்கு அப்பாற்பட்ட பல உண்மைகள் என்பன அவர்களுக்கு சந்தோசத்தைத் தரக் கூடியதல்ல.

"சொல்லுடா உன் ஊரை?"

"திவுல்லேவ ஐயா. என்னுடைய மாடு?"

"அட மாடு. மாட்டைப் பார்க்க உனக்கு நேரமிருக்கு. எங்களுக்கு இல்லை. உனக்குத் தெரிந்த இரண்டு பேருடைய பெயர்களைச் சொல்லு"

"அண்ணே........... மிஸ்டர் குணசிங்க.......?"

"வேற யார்?. கிராமசேவகர்?"

"கிராம சேவகர் யாரென்று தெரியாது. பழைய விதானையாரைத் தெரியும்."

ஜீப் வண்டியின் பின் புறத்தில் அவனைப் போட்டுக் கொண்டார்கள். அவனிடம் கேள்வி கேட்ட உத்தியோகஸ்தர்கள் இரண்டு பேரும் முன்னால் இருந்தார்கள். அவன் பக்கத்திலே ஆயுதத்தோடு ஒரு பொலிஸ்காரன் இருந்தான். வண்டிக்காரனுடைய வழிகாட்டலில் மரஞ் செடிகள், காடுகள், பிளவுகள், கடந்துபோய்க் கொண்டிருந்தன.

ஜீப் வண்டி அண்ணனுடைய வீட்டு முற்றத்தில் போய் நின்றது. அண்ணன் வெற்றிலையில் பாதியைச் சப்பிக் கொண்டு ஜீப்பை நோக்கி முன்னால் வந்தான். அவன் எந்தவிதமான சலனமும் இல்லாமல் தம்பியைப் பாத்துக் கொண்டிருந்தான்.

"யாரிது?"

"தம்பி"

"இவனுடைய தட்டு முட்டுச் சாமான்கள், புத்தகங்கள் இங்கே இருக்கின்றனவா?"

"ஆம்"

அண்ணன் அவனுடைய தட்டு முட்டு சாமான்கள் நிறைத்து வைத்திருந்த பெரிய ட்ரங்குப் பெட்டி ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து வெளியில் வைத்தான். அதை அவனைக் கொண்டே திறக்க வைத்தார்கள். அதைத் திறக்கும் போது வண்டிக்காரன் மனதுக்கு அவனது இளமைப் பருவம் நினைவுக்கு வந்தது. பாடசாலையில் படிக்கும்போது அவன் தங்கும் விடுதிக்கு இதே பெட்டியைத் தான் எடுத்துக் கொண்டு போனான். அன்று அதனிலிருந்து வந்த புதிய உடைகள், புத்தகங்கள், சவர்க்காரம், பௌடர், ஒன்று கலந்து வந்த வாசம் இருக்கிறதா என்பதை சுவாசிப்பதற்கு மூக்குத் துவாரத்தை பெரிதாக்கியபடி உறிஞ்சினான்.

புத்தகங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் சோதனை செய்தார்கள். சிவப்பு மொனிட்டர் புத்தகக் கட்டும், ஆங்கில, சிங்கள புத்தகக் கட்டும், தமிழ்ப் பாட்டுப் புத்தகங் களும் மேலே இருந்தன.

பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒவ்வொன்றாகப் பரிசீலித்தார். அந்தப் புத்தகங்களில் இரண்டில் பின்புற அட்டையில் இரண்டு தாடி மீசைக்காரர்களின் புகைப் படத்தைக் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் கைப்பற்றிக் கொண்டு தன்னுடைய சட்டைகளாலேயே தூசியைத் துடைத்துக் கொண்டு மேலதிகாரி கைகளில் கொடுத்தான். அவை சேக்ஸ்பியருடைய மெக்பத்தும், தாகூருடைய படமும் ஆகும்.

"நீர் அந்தக் காலத்தில் ஒரு நாடகக்காரன் போலும்."

"அந்தக் காலத்தில் எங்களுடைய பாடப்புத்தகங்கள் தான் அவை"

அதற்குக் கீழ், கையால் கட்டப்பட்ட டிமைப் புத்தகம் இருந்து. அது, அவன் கணக்குகள் செய்வதற்குப் பாவித்ததாகும். அதற்குக் கீழே 'அரச பணி' யென்று அச்சிட்ட ஒரு பெரிய தபாலுறை இருந்தது. அதற்குள் அவனுடைய விளையாட்டு சான்றிதழ்களும், சிரேஷ்ட தராதரப் பத்திரமும் இருந்தன. அதைக் கவனமாக எடுத்துக்கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் இரண்டு தரம் தூசிபோகதட்டி விட்டு ஓ.ஐ.சி.யிடம் கொடுத்தார். மண்ணிறமான அரக்கு முத்திரையைத் தவிர அனைத்தும் வெள்ளிப் பூச்சியால் அரிக்கப்பட்டிருந்தன.

"அக்காலத்திற்கு ஏற்றபடி அவனுக்கு



படிப்பகம்

www.padippakam.com

நல்லதொரு உத்தியோகத்திற்கு போகும் வாய்ப்பிருந்தது'' ஓ.ஐ.சி. மற்ற உத்தியாகஸ்தரருக்கு இரகசியமாகக் கூறுவதைப் போல் மெல்லிய குரலிலே ஆங்கிலத்தில் சொன்னார்.

''அதுதான் சேர்''

தங்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளுக்கு மறுமொழி கொடுத்த கிராமத்தவருடைய பதிலுக்கு இரண்டு உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

வெயிலில் காய்ந்து தேமல் பிடித்துப் போயிருந்த கறுப்புத்தோலும், வெற்றிலை சப்பிச் சிவந்து போயிருந்த உதடும், எண்ணெய் பூசி பளபளக்கும் சாடையான வழுக்கைத் தலையும் உடைய வீட்டுக்காரன், எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமலேயே அங்கு பார்த்துக்கொண்டிருந்தான். ஆனாலும் அவனுடைய நாக்கு, கன்னத்துக்குள், சுழன்று சுழன்று அங்கு ஒரு மூலைக்குள் மிஞ்சியிருந்த பாக்குத்துண்டுகளைத் தேடி அவனுக்கு கட்டுப்படாமலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தது.

"நீ என்ன செய்கிறாய்?''

"கமம் செய்கிறேன்.''

வண்டிக்காரனை ஜீப் வண்டிக்குள் திரும்பவும் ஏற்றிக் கொண்டார்கள். அண்ணனும் தம்பியும் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் பரிமாறிக் கொள்ளவில்லை.

புறப்பட்டுப் போகும் ஜீப் வண்டியை வெகு நேரம் பாத்துக் கொண்டிருந்த அண்ணன் ''அவன் குற்றம் செய்பவனல்ல'' என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் போனான்.

மறுநாள் காலை, ஆயுதபாணிகள் பலர் புறப்பட்டுப் போனார்கள். தனியார் வாகனங்களை எடுத்துக் கொண்டு சந்தேகப் பேர்வழிகளை வேறிடங்களுக்குக் கொண்டு சென்றார்கள். பகற்பொழுதாகும்போது, வேறு சிலர் வந்து சரணடைந்தார்கள். அவர்களுக்கு ஆளுக்கொரு உதை கொடுத்து 'லாக்கப்' பில் போட்டுவிட்டார்கள்.

மாலைவரையும் ஒருவருக்குமே ஒரு துளி தண்ணீரும் கிடைக்கவில்லை. சாரம் அணிந்திருந்த சில உத்தியோகஸ்தர்கள் அங்கு வந்ததுடன், அங்கிருந்த பாழடைந்த அமைதி கலைந்துப் போனது. அவர்கள் கட்டைச் சுவர் மீதிருந்து சிகரட் புகைத்துக் கொண்டு வம்பளந்து கொண்டிருந்தார்கள். இதற்கிடையே வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் "முட்டாளை இன்றைக்கு விடுவிக்கச் சொன்னார்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் இதையும் மறந்து விடுவோம்'' என்று சொல்லிக் கொண்டு கூண்டின் கதவைத் திறந்தனர்.

"இப்போ நீ எங்கேயும் தொலைந்து போ''

வண்டிக்காரன் எழுந்து குந்திக் கொண்டான். எழும்பி நின்ற அவன், தெருவை ஏறெடுத்து சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டி இருந்த இடத்திலேயே சாய்ந்து போயிருந்தது.

"ஐயா மாடு?''

"உன்னைவிடப் பெரிய மாடு எங்கே ஓய். இப்போதாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போ, [illegible]ன்னும் எங்களை வதைக்காமல். இன்னும் ஒரு மணித்தியாலயத்தில் ஊரடங்கு சட்டம் வந்துவிடும். போ இல்லாவிட்டால் நீ சாகத்தான் போகிறாய்.''

சீருடையற்ற உத்தியோகத்தர்கள் பல வகையில் கேலி செய்து கொண்டும், கதைகள் பேசிக் கொண்டும் சிகரட் புகைத்துக் கொண்டுமிருந்தார்கள். அவனுக்கு அதிலொன்றிலும் முன்னும், பின்னும் விளங்காமலும், கணக்கிலும் எடுக்க வில்லை. அவன் மாட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். பொலிஸ் நிலையத்தின் பின்புறத்தில் மாடு புல்லைத் தின்று கொண்டு இடைக்கிடையே தலையைத் தூக்கித் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என்ற சிந்தனை அவனுக்குள் உண்டானது. அத்தோடு, கடந்த சில நாட்களாக நையந்து போயிருக்கும் என்ற கவலையும் ஆனாலும் இன்று திரும்பவும் பழைய நிலைக்கு வரலாம் என்ற எண்ணமும் தோன்றியது. வேதனைகள் அனைத்தையும் அடக்கிக் கொண்டு அவனுக்கு மகிழ்ச்சி ததும்பியது.

"நீ போகப் போறியா? அல்லது மீண்டும் சிறைக் கூட்டுக்குள் போறியா?''

"நான் போக மாடு வேண்டும்''

"ஏன் உன்னைப் போன்ற மாட்டுக்கு வண்டியை இழுக்க முடியாதா?''

"என்னுடைய மாடு எனக்குத் தேவையென்றுதான் சொல்கிறேன்.''

"நீ உன் மாட்டைத் தேடுகின்றாய். மனிதனுக்கே இந்த நிலை ஏற்படும் போது மாட்டுக்கு என்ன நிலை ஏற்படுமோ ஓய்.''

அந்த உத்தியோகத்தர்கள் கைகொட்டி சிரிக்கத் தொடங்கினர். அவனுக்கு அதைக் கேட்பதோ அல்லது தெரிந்து கொள்வதோ அவசியமில்லை. வீங்கிக் கறுத்துப் போயிருந்த விழிகள் மேலும் சிறுத்துப் போனதாகத் தோன்றியது.

காலை எட்டி வைத்து பிராணியை வளைத்துக் கொள்வதைப்போல், பொலிஸ் உத்தியோகஸ்தரை நோக்கி நெருங்கினான். பொலிஸ்காரன் அவனைப் பார்த்தபடியே பின்னுக்குப் பின்னுக்குச் சென்று மேசை மீது வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கிப் பக்கம் பின் வாங்கினான். வண்டிக்காரனுடைய வலது கை மாயமாக நீண்டு பொலிஸ் உத்தியோகஸ்தனை இழுத்ததுபோல் பட்டது. பொலிஸ்காரனுடைய புறங்கையைப் பிடித்து சுழற்றி விடவே கட்டைச் சுவரின் கீழ் பொலிஸ்காரன் விழுந்து சாய்ந்தான். கட்டையான இயந்திரத் துப்பாக்கி, வண்டிக்காரனுடைய கைக்கும் பழக்கமில்லாமல் இருந்தாலும், அதனுடைய வடிவம் அவனுக்குப் பிடித்துவிட்டது. அவன் ஒரு 'கெடட்' வீரனாக இருக்கும் பொழுது மண் குவியலில் பதிந்திருந்த சின்னத்தை விட வேறு எந்தவிதமான பிராணிகளுக்கும், குறிவைக் கவில்லை என்பது அவனுக்கு இப்போது நினைவுக்கு வந்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com



பேராசிரியர் க. கைலாசபதி, இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருவெளிச்சம் பரப்பிய திறனாய்வாளர். திறனாய்வில் புதிய சிந்தனையை உருவாக்கி, அறிவியல் நோக்கில் சிந்திக்கும் அறிவாளிகள் பலர் தோன்றிடக் காரணமான மர்க்சிய கொள்கையாளன்.

ஒப்பியல் இலக்கியம், தமிழ் நாவல் இலக்கியம், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், இலக்கியச் சிந்தனைகள், தமிழர் வீரயுகப் பாடல்கள், உட்படப் பல நூல்களின் ஆசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத் தலைவராயிருந்து அரும் பணியாற்றியவர்

அவரது "கவிதையும் தத்துவமும்" என்ற கட்டுரையிலிருந்து....

'சமூக யதார்த்தத்தில் இருந்து எழுத்தாளன் விலகுவதால் அவன் தனிமைப்பட்டுப் போகிறான். தனிமைப்பட்டு நின்று எழுதுவதால் சமூகத்தில் அவன் ஒன்றிணைய இயலாமல் இருக்கிறது. இந்நிலையில் தனிமையை இலட்சியப்படுத்துவதாகவே அவனது படைப்பு அமைந்து விடுகிறது. கூடவே விரக்தி, வெறுப்பு, வசைபாடும் மனோபாவம் எல்லாம் தோன்றி விடுகின்றன. அந்த அவலமான எதிர் நிலைமாறி கவிஞன் சமுதாயத்தின் இயக்கங்களின் அடிப்படையிலே சங்கப்பட்டு நிற்கும் வேளையிலேயே கவிதைக்குரிய இயல்பான பண்பு சமுதாயத்தின் மனச்சாட்சியாகவும் குரலாகவும் அமையும் பண்பு உயிர்த்துடிப்புடன் விளங்கும், அப்போதுதான் கவிதை முழுமை பெறும்.'

# வரிச்செய்திகள்

கனடா இலக்கியத்தோட்ட அமைப்பு எழுத்தாளர் கே.கணேஷிற்கு இயல் விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகெங்கையும் மையப் படுத்தி இவ்வாண்டில் தமிழ்ப் புலவர் மகாநாடு ஒன்று ஈழத்தில் நடைபெற உள்ளது.

கே.டானியலின் ஆறு நாவல்களை ஒரே தொகுப்பாக நேர்த்தியான கட்டமைப்போடு 1150 பக்கங்களில் தமிழகப் பதிப்பகமான 'அடையாளம்' வெளியிடுகின்றது. பிரதி விலை ரூபா 500. முன் தொடர்பு : அடையாளம்
1208, இரண்டாவது தளம்
கருப்பூர் சாலை, புத்தாநத்தம்
621310, தமிழ்நாடு.

வீரகேசரி நிறுவனம் '2002 நிகழ்வுகள்' என்ற தலைப்பில் 240 பக்கங்கள் கொண்ட ஆண்டு மலரை வெளியிட்டுள்ளது. அரசியல், கலை, இலக்கியம், சமூகம் என்ற பல்வேறு பிரிவுகளில் நிறைய ஆக்கங்கள் அடங்கியுள்ளன. பக்கத்துக்குப் பக்கம் வண்ணப் படங்கள். 2002 நிகழ்வுகள் இணைக்கப்பட்டுள்ளன. வீரகேசரி, இணை ஆசிரியர் வீ.தேவராஜ் இந்தக் கனதியான மலரை தொகுத்துள்ளார்.

ஈழத்துப் படைப்பிலக்கியவாதிகளில் மூத்தவர் என மதிக்கப்பட்டு வந்த க.சிவகுருநாதன் (கசின்) அண்மையில் காலமானார்.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை சிங்களத்தில் மொழி பெயர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் சிங்களப் படைப்பாளரும், மொழிபெயர்ப்பாளருமான மடுல் கிரிய விஜயரட்ண. வருட இறுதிக்குள் தொகுதி வெளியாகிவிடும் என்று சொல்கிறார் விஜயரட்ண.

குழந்தை இலக்கியப் படைப்பாளியான மருத்துவ கலாநிதி யோ.சத்யனின் ஐந்து நூல்கள் வெளியாகியுள்ளன. இதில் இரண்டு நூல்கள் ஒரே வேளையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியாகின்றன.

தமிழகத்தைச் சேர்ந்த கலைஞன் பதிப்பக நந்தா ஈழத்துப் படைப்பாளிகளின் ஆக்கங்களை நூலாக வெளியிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார். இதில் ஒன்று உடுவைதில்லை நடராசாவின் தொகுதியான 'நிர்வாணம்'.

மணிமேகலைப் பதிப்பகம் செ.யோகநாதனின் "கிட்டி" நாவலின் மூன்றாம் பதிப்பை வெளியிட்டுள்ளது. இதற்கு அனுசரணை அளித்திருப்பவர் லண்டனைச் சேர்ந்த குடிவரவு ஆலோசகரும், "தமிழினி" இதழ் ஸ்தாபகரும், தமிழ் ஆர்வலருமான குலேந்திரன் ஆவார்.

'கடுகு'

படிப்பகம்

www.padippakam.com

# பெண்களும் இயக்கமும்

யோ. சுந்தரலட்சுமி

பி.பி.சி. தொலைக்காட்சி அண்மையில் ஒரு குறும் படத்தை ஒளிபரப்பியது. சர்வதேசமும் அதைப் பார்த்து பிரமிப்பு அடைந்தது. அந்தக் குறும்படம் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளினது நாளாந்த வாழ்வு, களப்பயிற்சி, பேட்டி என்பனவற்றை வெகுநுட்பமாக வெளிப்படுத்திற்று. அவர்களின் அர்ப்பணிப்பான வாழ்க்கை, இனப்பற்று, ஒப்பற்ற தியாகம், ஒப்பிடற்கரிய துணிவு என்பனவற்றை இந்தக் குறும் படம் அறியப்படுத்திற்கு.

இவர்களுடைய போராட்டத்திறன் எத்தகையது என்பது இப்போதுதான் மெல்ல மெல்ல வெளியாகிக் கொண்டு இருக்கின்றது. இவர்கள் போராடிய அதே வேளையில் அரச பயங்கரவாதம் எண்ணற்ற இளம் தாய்களை கொடூரமாக விதவைகள் ஆக்கியது. இடம் பெயர வைத்தது. அகதிகளாய் துரத்தியது. இவை எல்லாம் நடந்து கொண்டிருந்த போது இலங்கையிலே தமி!ழிலும் சிங்களத்திலும் பெயர் பெற்றிருந்த பல பெண்கள் இயக்கங்கள் நடந்து கொண்ட விதம் மிகுவும் கேவலமானது. சைப்பிரஸினதும், மொறோகோவிலும் பெயர் பெற்றிருந்த பல பெண் இயக்கங்கள் நடந்து கொண்ட விதம் மிகவும் கேவலமானது. சைப்பிரஸிலும், மொறோக்கோவிலும் ஒடுக்கப்படும் பெண்களுக்காக லிப்டன் சதுக்கத்திலும் உள்ளூர்களிலும் இவர்கள் கொடி பிடித்து புகைப்படக் காரர்களின் முன்னே நின்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அரசாங்க அனுசரணையுடன் சர்வதேச பெண்கள் மகா நாடுகளுக்கு சென்று அவர்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தார்கள். ஆங்கிலத்திலே அனல் பறக்கும் கட்டுரைகளை எழுதினார்கள். அடிக்கடி வெளிநாடுகளுக்கு பெண் இயக்க வாதிகளாய் சென்று திரும்பினார்கள், சகல சௌகரியங் களுடனும். ஆனால் கிராமம் கிராமமாக ஈழத்துப் பெண்கள் அவல நிலைக்குள்ளானபோது கிருசாந்தி போன்ற மாணவி உட்பட பல பெண்கள் கொலையுண்ட போது அவர்கள் மௌனம் காத்தனர். ராதிகாபோன்ற பல கலாநிதிகள் இதே வேளையில் மூன்று நட்சத்திர ஓட்டல்களில் பெண் போராளிகள் எவ்விதம் இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களை நடாத்துகிறார்கள் என நிதானம் தவறிய நிலையில் விவாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்காவுக்கு எதிராக வியட்நாமிய பெண்கள் போராடிய போது கூட இந்த மேல் தட்டுவர்க்கச் சிங்காரிகள் இத்தகைய கருத்துக்களையே வெளியிட்டார்கள்.

அண்மையில் மானிப்பாயில் பெண் போராளிகள் எந்தவிதமான காரணமும் இல்லாமல் ராணுவத்தினரால் தாக்கப்பட்டனர். தாம் பிறந்த மண்ணிற்கு செல்ல முடியாமல் தலை வணங்காமல் அவர்கள் திரும்பிச் சென்றனர். இந்தச் சம்பவங்கள் நடந்த போது தமிழ் மண்ணே கொதித்து எழுந்தது. ஆனால் இலங்கைக்கு வெளியே நடைபெறுகின்ற சம்பவங் களுக்காக குரல் நோகாமல் ஆர்ப்பாட்டம் செய்யும் பெண்கள் இயக்கமும் கலாநிதிகளும் இவ்வேளையில் மகாத்மா காந்தியின் மூன்று குரங்கு பொம்மைகள் போல மாறி விட்டார்கள். இன்று வரையும் இவர்கள் யாரும் இந்தக் கொடூர சம்பவங்களுக்காக குரல் கொடுக்கவில்லை. இத்தகைய சூழலில் நோர்வேயின் அனுசரணையோடு பெண்கள் அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் விடுதலைப் புலிகள் அமைப்பை சார்ந்த ஐந்து பெண்களும் அரசு சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்த அரச தரப்பிலான ஐந்து பெண்களும் அடங்குவார்கள் என அறியப்படுகிறது.

குமாரி ஜெயவர்த்தனா, குமுதினி சாமுவேல், பைசூன் சக்காரியா, தீபிக உடுகம, பசீலா றியாஸ் ஆகியோர் அரச தரப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். தமிழ் பெண்கள் சார்பில் சிவகாமி சுப்பிரமணியம், தேனுகா சண்முகராஜா, மதிமலர் பாலசிங்கம் ஸ்ரீதேவி சின்னத்தம்பி, வசந்த பிரேமினி சோமசுந்தரம் ஆகியோர் இலங்கைப் பெண்கள் அமைப்பில் அடங்குகிறார்கள்.

இன்று தமிழ்ப் பெண்களுக்குரிய பல பிரச்சினைகளின் முதன்மையானது தமிழர் தாயத்திலிருந்து ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேற வேண்டும் என்பதே. ஏனெனில் படையினரால் போரின்போதும் சமாதான வேளையிலும் அவலப்படுத்தப்பட்டு வருவது பெண்களே.

மேலே கூறப்பட்ட தமிழ்ப் போராளிகளுக்கும் பெண்களுக்கும் அரச படையினரால் அவமதிப்புகளும், தொல்லைகளும் ஏற்படுத்தப்பட்டபோது மௌனம் சாதித்தவர்களும் சித்தாந்தத்தை முணுமுணுத்தவர்களும் சர்வதேச மகாநாடுகளில் இந்தப் பெண்களுக்காக ஒரு வார்த்தை கூட சொல்லாதவர்களுமே இப்போது அரச தரப்புக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

குமாரி ஜெயவர்த்தனா தலைமையில் அரசு தரப்பில் உள்ள பெண்கள் தமிழ்ப் பெண்களின் இந்த முக்கியமான பிரச்சினையை விளங்கிக் கொள்வார்களா?

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் குறித்து எதிரான கருத்துடைய தென் இலங்கை கலாநிதிகளின் பிரதிநிதித்துவம் முதலிய அடிப்படைப் பிரச்சினைகளை தெரிந்து கொள்வதற்கு தமிழ்ப் பகுதிகளுக்கு செல்ல வேண்டும். திறந்த மனதுடன் எமது பெண்களின் நிலைமையை நுட்பமாகவும் உள்ளவாறும் அறிந்து கொள்ள வேண்டும். இன்னும் சொன்னால் பாதிக்கப்பட்ட போராளிகளிடமும் முதலில் அவர்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சினைகளுக்கான அடிப்படையை அறிந்து கொள்ள வேண்டும். இதன் பிறகுதான் இந்த அரசு தரப்பை சார்ந்த பெண்கள் இயக்கத்தினர் தெளிந்த சிந்தனையோடும் செயற்படத்தக்கதாக இருக்கும் பெண்கள் அமைப்பு தனது இலக்கை எட்டத்தக்க சூழ்நிலை உருவாகும்.



படிப்பகம்

www.padippakam.com




# சிரிப்போ சிரிப்பு

அனுசியா
















படிப்பகம்

www.padippakam.com


# சர்வதேச தரத்தில் அருமையான குழந்தை இலக்கியங்கள்




தமிழ் நாடு திருப்பூர் தமிழ்ச் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்க விருதுகளை சிறந்த குழந்தை இலக்கியங்களுக்காகப் பெற்ற மருத்துவ கலாநிதி யோ. சத்யனின் புதிய நூல்கள்.




தினகரனில் தொடராக வெளியான குழந்தைகள் நாவல்
விலை ரூபா 140.




விலை ரூபா 120.




விலை ரூபா 90.

அழகிய பூ,
இலங்கையின் கல்வி அமைச்சர் கன்னங்கரா,
வேராவின் நண்பன்,
(மொழிபெயர்ப்பு) ஆசிரியர் யோ.சுந்தரலட்சுமியின் புதிய நூல்.




விலை ரூபா 140.

பாடசாலை நூலகங்களுக்கு விசேட கழிவு தரப்படும்

**அட்மிரல் பப்ளிஷர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.**
403, 1/1, காலி வீதி கொழும்பு - 06. தொலை பேசி :362706

படிப்பகம்